பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 13 புதன்கிழமை (28-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:246


# திருமலையில் புதிய நிலைகளா?

# முற்றாக மறுக்கின்றனர் புலிகள்!

## அரசின் குற்றச்சாட்டுக்கு தமிழ்ச்செல்வன் பதில்

கிளிநொச்சி,ஜூலை28

**திருகோணமலை நகரத்தினதும், துறைமுகத்தினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய [illegible]யில் புதிய இராணுவ நிலைகளையும், தொடர்முகாம்களையும் அப்பகுதியைச் சூழவுள்ள பிரதேசங்களில் புலிகள் அமைத்து வருகின்றார்கள் என்ற அரசின் குற்றச்சாட்டை அடியோடு மறுத்துரைத்திருக்கின்றார்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.**

திருகோணமலையைச் சூழவுள்ள பிரதேசங்களில் புதிய நிலைகளைப் புலிகள் அமைத்து வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு தென்பகுதி ஊடகங்களினால் அண்மைக்காலத்தில் பரவலாக வெளியிடப்பட்டு வந்தது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் அமைக்கப்பட்டுவரும் இந்த நிலைகளால் திரு

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் ஆறாவது வினாத்தாள் இன்றைய உதயனுடன் வெளிவருகின்றது.

பிரதி புதன்கிழமைகள் தோறும் தொடர்ந்து வினாத்தாள்கள் வெளிவரும். வினாத்தாள்களின் மேலதிகப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உதயன் பணிமனையில் அலுவலக நேரத்தில் விநியோகப் பகுதியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## நோர்வேத் தரப்பினரின் முக்கிய அறிவிப்பு நாளை?

கொழும்பு,ஜூலை28

ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினை விடயம் குறித்து நோர்வே அரசு நாளை முக்கியமான அறிவித்தல் ஒன்றை வெளியிடவுள்ளதாக கொழும்பின் இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

ஸ்ரீலங்காவில் இடைநிறுத்தப்பட்டுள்ள - ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சியாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தற்போது இலங்கைக்கு வந்துள்ளார்.

கிளிநொச்சியில் புலிகளையும் கொழும்பில் அரசுத் தலைவர்கள் மற்றும் ஏனைய அரசியல பிரமுகர்களையும் அவர் சந்தித்துவருகின்றார்.

இச்சந்திப்புக்களின் பின்னர், நாளை வியாழக்கிழமை காலை நோர்வே திரும்பும் முன்னரே நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் முக்கியமான அறிவித்தல் ஒன்றை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ)

## மட்டுவிலில் வீதி விபத்து; இளைஞர் ஒருவர் பலி!

தென்மராட்சி,ஜூலை28

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்குச் சமீபமாக நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற வீதிவிபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் படுகாயமடைந்தார்.

பலாலி கிழக்கைச் சேர்ந்தவரும் தற்போது அச்சுவேலியில் வசிப்பவருமான சிவலோகநாதன் இராஜரூபன் (வயது 24) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார்.

இவர் தனது சகோதரருடன் அச்சுவேலியிலிருந்து மீசாலை வடக்கு வேம்பிராயில் உள்ள தனது தோட்டத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார் என்றும்-

வழியில் எரு ஏற்றிச்சென்ற லொறியும் இவர்

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமும் டக்ளஸும் ஹெல்கிஸனுடன் பேச்சு!

கொழும்பு,ஜூலை28

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி.மற்றும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான தாருஸ்ஸலாமில் விடர் ஹெல்கிஸன் - ரவூப் ஹக்கீம் சந்திப்பு இடம்பெற்றது.

சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படும் போது முஸ்லிம் தனித்தரப்பு இடம்பெற வேண்டியதன் அவசியத்தை மு.க.தலைவர் ரவூப் ஹக்கீம் ஹெல்கிஸனிடம் வலியுறுத்தினார்.

மூதூர், கிண்ணியாப் பகுதிகளில் முஸ்லிம் மக்கள் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் இச்சந்திப்பின் போது ஹெல்கிஸனின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் பற்றியும், புலிகளுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஆள்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணை இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ். குடாநாட்டில் 1995-1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமற்போனவர்கள் என்று கருதப்படும் 14 பேரின் சார்பில் யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனுக்கள் மீதான அடுத்த கட்ட விசாரணைகள் இன்று யாழ். மேல் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளன.

கிருஷாந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்தின ராஜபக்ஷ இன்றைய விசாரணையின் போது சாட்சியமளிப்பதற்காக யாழ். நீதிமன்றத்திற்கு

(18ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் சுடப்பட்டார்!

மட்டக்களப்பு மாவட்டத்தின், ஆரையம்பதியில் செய்தியாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டார்.

ஆரையம்பதி, அமரசிங்கம் வீதியில் அமைந்துள்ள மேற்படி செய்தியாளரின் வீட்டிற்கு இரவு 8.15 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரே, அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்த செய்தியாளர் சதாஜலிங்கம் கமலதாசன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் காத்தான்குடிப் பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸ் பொறுப்பதிகாரி எல்.கே.ஹேரத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இவ்வருட ஆரம்பம் முதல் 33 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் 34 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (03-07-211)

## உலக வங்கிக் குழு வருகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை28

நியாப் திட்டத்தின் மூலம் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடுவதற்கு உலக வங்கியின் உயர்மட்டக் குழுவொன்று எதிர்வரும் 14ஆம் திகதி குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளது.

உலக வங்கியின் இலங்கைக் குழுவின் தலைவர் நிஹால் பெர்ணான்டோ தலைமையில் வருகைதரும் இக்குழுவினர் இருதினங்கள் தங்கியிருந்து குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடவுள்ளனர். அத்துடன், இத்திட்டங்கள் தொடர்பாக யாழ். செயலக அதிகாரிகளுடன் அவர்கள் கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-5)

## தகவல் வட்டாரங்கள் குறித்து விசாரணை நடத்த எதிர்ப்பு

### பொலீஸ்மா அதிபருக்கு ஊடக அமைப்பு கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

ஊடகவியலாளர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வட்டாரங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு பொலஸாருக்கு எந்தவிதமான அதிகாரங்களும் கிடையாது. ஊடகவியலாளர்களின் தகவல் வட்டாரங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்படுமாயின் அது அடிப்படை உரிமை மீறலாகும்.

- இவ்வாறு சுதந்திர ஊடக அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய பொலீஸ்மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று குறித்து இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தி தொடர்பாக அதன் ஆசிரியரை பொலீஸ் விசாரணை செய்யப் போவதாக பொதுப் பாதுகாப்புச் சட்டம், ஒழுங்குகளுக்கான அமைச்சர் திலக் ரணவிராஜ தெரிவித்திருந்தார்.

ஊடகவியலாளர்களின் கருத்து சுதந்திரப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பொலீஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொலீஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுனந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

## மதமாற்ற தடைச்சட்டத்துக்கு எதிராக மனுக்கள் தாக்கல்

மதமாற்றத்தைத் தடுக்கும் வகையில் இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையானது அரசமைப்புக்கு ஏற்புடையது அல்ல என்று தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் 22 விசேட மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்களின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார். ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஓமல்பே சோபித தேரர் கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையை

(18ஆம் பக்கம் பார்க்க)


ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது
40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.



அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.
- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஒக்டோபர் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

NSB NSB








ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் அயடீன் கலந்த உப்புத் தயாரிக்கும் பணி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் பொருண்மிய மதியுரையகத் தலைவர் சு.சுந்தரமூர்த்தி, 'யுனிசெவ்' நிறுவனத்தின் கிளிநொச்சி அலுவலக அதிகாரி பெனி புறூனி அம்மையார் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும், நிறுவனப் பெயர்பலகையை நிறுவனப் பணிப்பாளர் செல்வன் திரைநீக்கம் செய்துவைப்பதையும் ஆய்வு கூடத்தை அரசியல்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நாடா வெட்டித் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

# அயடீன் கலந்த உப்பு உற்பத்தி ஆனையிறவில் நேற்றுமுதல் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை28

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் அயடீன் கலந்த உப்பு தயாரிக்கும்பணி நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புலிகளின் பொருண்மிய மதியுரையகத்தின் தலைவர் சு.சுந்தரமூர்த்தி, யுனிசெவ் நிறுவன கிளிநொச்சி அலுவலக அதிகாரி பெனிபுறூனி அம்மையார் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தனர்.

பொருண்மிய நிறுவனத்தின் பொறுப்பாளர் சி.கரிகாலன் தேசியக்கொடியை ஏற்றினார்.

அதையடுத்து களஞ்சியக் கட்டடத்தை கிளிநொச்சிச் செயலகப் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் தி.க.மத்தியாஸும், நிறுவனத்தின் பெயர்ப்பலகையை நிறுவனத்தின் பணிப்பாளர் செல்வனும் தொழிற்கூடம் மற்றும் இயந்திரத் தொகுதியை யுனிசெப் நிறுவனத்தின் கொழும்பு அலுவலக அதிகாரியான ஏ.டி. அதிகாரியும், ஆய்வுகூடத்தை அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும் நாடா வெட்டித் திறந்துவைத்தனர்.

இந்த நிகழ்வில் தங்கன் பேசுகையில்,

வரலாற்றுப் பெருமைமிக்க இந்த மண்ணில் விளையும் உப்பை மக்களுக்கு ஊட்டச்சத்து உள்ளதாக அயடீன் கலந்து வழங்க இந்த நிறுவனம் உருவாகின்றது - என்றார்.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் பேசுகையில், தேசியத் தலைவரின் சிந்தனையில் உருவான திட்டத்தின் விளைவாக போராளிகளின் உயிர்த் தியாகத்தின விளைவாக இந்த மண் மீட்கப்பட்டது. இந்த மண்ணில் விளையும் உப்பை மக்களுக்கு நலன் அளிக்கும் வகையில் ஊட்டச்சத்துடன் வழங்க இந்த நிறுவனம் இன்று ஆரம்பிக்கப்படுகின்றது - என்றார்.

இந்த நிகழ்வில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரான ஆர்.ராதாகிருஷ்ணன், எழுச்சிப்பேரவையின் யாழ்.மாவட்டத் தலைவர் ப.கனகலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்.

தமிழீழ தேசியத் தலைவர் வேபிரபாகரனுக்கு நினைவுப் பரிசு ஒன்றை நிறுவனத்தின் பணிப்பாளர், பணியாளர்கள் சார்பில் இ.ஜெயராஜசிங்கம் தங்கனிடம் வழங்கினார்.

யுனிசெவ் பிரதிநிதிகளான பெனிபுறூனி அம்மையார், ஏ.டி.அதிகாரி ஆகியோருக்கும் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கிராமிய வங்கியில் கூடுதலான சேமிப்பை வைப்புச் செய்த இந்த நிறுவனப் பணியாளரான செல்வி றிச்சேர்ட் கஜேந்தினிக்கு கரிகாலன் சிறப்புப் பரிசு ஒன்றை வழங்கினார். (ஒ-3-352)

## உரும்பிராயில் கோஷ்டி மோதல்!

உரும்பிராய்ப் பிரதேசத்தின் இருபகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களிடையே நேற்றுமுன்தினம் மோதல் இடம்பெற்றது.

இந்தமோதல் நேற்றும் தொடர்ந்தது. இதனால், அப்பகுதியில் பதற்றம் நிலவியது. விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரும், கோப்பாய் பொலீஸாரும் அப்பகுதியில் அமைதியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை தனித்தனியே மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10-49)

## பாடசாலைக் கிணற்றில் வெடிபொருள்கள் மீட்பு

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளாகத்தில் உள்ள கிணறொன்றிலிருந்து 45 கிரனேட்டுகள் உட்படப் பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கிணற்றினைப் பணியாளர்கள் துப்புரவு செய்தபோது வெடிபொருள்களைக் கண்டனர். அதுகுறித்து கண்ணிவெடி அகற்றும் பிரிவான 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வெடிப்பொருள்களை மீட்டனர். (ஒ-117)

## அவசர கலந்துரையாடல்

யாழ். மாவட்ட உயர்தேசிய கணக்கியல் உயர்தேசிய வர்த்தக பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பட்டம் பெற்று வெளியேறிய அனைத்துப் பட்டதாரிகளையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொண்டு தமது பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (10)

## 'வெறுவெளி' அரங்கக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ். பல்கலைக்கழக 'வெறுவெளி' அரங்கக் குழுவின் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரங்க பொது அறையில் நடைபெறவுள்ளது.

2004ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. நாடகமும் அரங்கியலும் அனைத்துவருட மாணவர்களும், ஏனைய துறை மாணவர்களும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மட்டுவிலில் இன்றிரவு மின்னொளியில் கரபந்தாட்ட இறுதிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை28

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூகநிலையத்தின் 39ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் மாகாண மட்டத்திலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்றிரவு மின்னொளியில் இடம்பெறவிருக்கின்றன.

வளர்மதி விளையாட்டரங்கில் இன்றிரவு 7.30 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகும்.

முதலாம், இரண்டாம் இடங்களை நிர்ணயிப்பதற்காக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் -

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

போட்டி முடிவில் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும். (ஐ)

## கலைப்பீடத்தின் கலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கலைவார கலைகலாசார நிகழ்வுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

பட்டிமன்றம், இசை நிகழ்ச்சி உட்பட கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நிழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்தபோதிலும் பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (ஐ)

# கொட்டாவ சம்பவத்துக்கு புலிகளின் மீது எடுத்தஎடுப்பில் குற்றம் சுமத்த முடியாது

## பொலீஸ்மா அதிபர் கூறுகின்றார்

கொழும்பு,ஜூலை28

கொட்டாவ ஆடம்பர மாளிகையில் இடம்பெற்ற படுகொலைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் செய்தனர் என்று உறுதியாகக் கூறமுடியாது. இது தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னரே இக்கொலைகளின் சூத்திரதாரிகள் யார் என்பதை வெளிப்படுத்தமுடியும். எடுத்த எடுப்பில் புலிகள்தான் செய்தனர் என்று கூறிவிட முடியாது - என்று பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா கூறினார்.

நேற்றுப் பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் - ஒழுங்குகள் அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பொலீஸ்மா அதிபர் இப்படிக் கூறினார். பொலீஸ்மா அதிபருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத், பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் - ஒழுங்குகள் அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா ஆகியோர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அங்கு பொலீஸ்மா அதிபர் கூறியதாவது:-

வெறும் யூகங்களை வைத்துக்கொண்டு செய்திகளை வெளியிடுவது மக்கள் மத்தியில் பீதியையும் குழப்பநிலையையும் ஏற்படுத்துமேயன்றி அதனால் நன்மை ஏற்படாது.

தமிழ் இளைஞர்களுடன் கொல்லப்பட்ட சிங்கள இளைஞர் சமரக்கோன் முதியான்சலாகே தம்மிக்கதிலிப்குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும்.

ஏனையவர்களுள் மூன்று இளைஞர்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏனைய சடலங்களும் அடையாளம் காணப்பட்டபின் நீதிமன்ற உத்தரவுப்படி உரிய தரப்பிடம் ஒப்படைக்கப்படும்.

சிங்கள இளைஞன் தம்மிக்க தொடர்பாக சகல பாதுகாப்புப் படைப்பிரிவுகளிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இவருக்கும் பாதுகாப்புப் படைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட இளைஞர்களுள் ஒருவர் வெவ்வேறு விலாசங்களில் மூன்று கடவுச்சீட்டுக்களைப் பெற்றுள்ளார். ஒரேதினத்தில் கடவுச்சீட்டுகள் வழங்கும் முறையில்தான் இப்படியான தவறுகள் நிகழ்வதற்கு வாய்ப்பேற்படுகின்றது.

எனவே, ஒரே தினத்தில் தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டுகளை வழங்கும் முறையை மீளாய்வு செய்யும்படி அரசுக்கு சிபார்சு செய்துள்ளோம்.

கொலைகள் இடம்பெற்ற வீடு மாலபேயைச் சேர்ந்த பிரசாத் குணசேகர என்பவருக்குச் சொந்தமானது. அவரும் அவரது குடும்பத்தினரும் இப்பொழுது இங்கில்லை. இவர்கள் நாடு திரும்பியவுடன் வீட்டை வாடகைக்கு அமர்த்தியவர்கள் பற்றிய விவரம் அறியமுடியும்.

அங்கு காணப்பட்ட கார் புத்தம் புதிதாக வாங்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகனப் பதிவுகள் திணைக்களத்தில் இக்கார் பதிவு செய்யப்படவில்லை. இதனால் இக்காரின் உரிமையாளரைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

"அரசும் புலிகளும் யுத்திநிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கும் வேளையில் கொலைகளும் குண்டு வெடிப்புகளும் இடம்பெற்றிருக்கின்றன. இது யுத்தநிறுத்த மீறல் ஆகாதா?" எனச் செய்தியாளர்கள் பொலீஸ்மா அதிபரிடம் கேட்டனர்.

"இருபக்கத்திலுமே யுத்தநிறுத்த மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அதை மறுக்கமுடியாது. ஆனால், புலிகள் தரப்பிலேயே ஆகக்கூடுதலான யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. - என்றார் பொலீஸ்மா அதிபர்.(க)

# வடக்கு-கிழக்கை இந்தியா புறக்கணிப்பதாகக் கருத்து

புதுடில்லி,ஜூலை28

இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அண்மைய இந்திய விஜயத்தை அடுத்து இலங்கைக்குத் தாராளமாக உதவுவதற்கு இந்தியா முன்வந்துள்ளது. ஆனால், அவையெல்லாம் பெரும்பான்மைச் சிங்களவர்களின் பக்கத்தில்தான் நடக்கப்போகின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் மனதை வெல்லத்தக்க வகையில் திட்டம் ஏதுமில்லை.

இந்தியாவிலிருந்து வெளியாகும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையில் அதன் கொழும்புச் செய்தியாளர் பி.கே. பாலச்சந்திரன் வரைந்த கட்டுரையில் இவ்விடயம் விலாவாரியாக விளக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் இந்தியா நேரடியாகப் பங்களிப்புச் செய்வதில் சிக்கல் இருக்கலாம் ஏனெனில், இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள புலிகள் இயக்கத்துடன் இந்தியா நேரடியாகத் தொடர்பு வைக்கமுடியாது. ஆனால், இந்தியாவின் தனியார் நிறுவனங்கள் அங்கு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடலாம்.

அதேபோன்று, வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் அபிவிருத்திப்பணியில் ஈடுபடுவதிலும் இந்தியா மிகவும் பின்நிற்கிறது.

இந்த நிலைமை தொடர்வதால் மேற்குலக நாடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகள் இந்தியாவை முந்திக்கொண்டு அங்கு தலை நீட்டி இடம்பிடிக்கின்றன. இதனால், இந்தியாவின் பக்கத்தில் இந்தியாவுக்கு விரும்பாத சக்திகள் நிலைகொள்ளும் நிலைமை உருவாகிவருகின்றது.

1990 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் வீழ்ந்ததை அடுத்து, இலங்கையிலிருந்து இந்தியா அரசியல், இராணுவரீதியாக விலகியது. அதனால், ஏற்பட்ட வெற்றிடத்தைப் பயன்படுத்திக்கொண்டு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கைப் பிரச்சினைக்குள் தலையை நீட்டிக் கொண்டுள்ளன.

வடக்கு - கிழக்கில், தமிழர் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளில் இந்தியா தள்ளி நிற்க, இத்தகைய நாடுகள் நுழைந்து அந்த மக்களின் மனதை வெல்லும் வகையில் செயற்பட முனைகின்றன.

இப்படிச் சுட்டிக்காட்டியுள்ள செய்தியாளர் பாலச்சந்திரன் இலங்கையின் வடக்கு - கிழக்கில் இந்த நாடுகள் மேற்கொண்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் அக்கட்டுரையில் மேலோட்டமாகப் பட்டியலிட்டிருக்கின்றார். (க)

## ஆள்பதிவுத் திணைக்களத்தில் திடீர் இடமாற்றங்கள்

ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் 11 பேருக்கு திடீர் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆள்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதில் இடம்பெற்றுள்ள மோசடிகள் இனிமேலும் இடம்பெறாமல் தவிர்ப்பதற்காகவே இந்தத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் எந்த ஓர் அதிகாரியோ அல்லது கடைநிலை ஊழியர்களோ ஐந்து வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக ஆள்பதிவுகள் திணைக்களத்தில் பணியாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.ஐந்து வருடங்களுக்கு மேல் அங்கு பணியாற்றியவர்கள் வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையக் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய தமிழ் யுவதிக்குப் போலியான தகவல்களுடன் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்தவர்கள் எனக் கருதப்படும் அதிகாரிகள் ஏற்கனவே சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக விசாரணை செய்து வரும் குழுவின் சிபார்சுகளின் அடிப்படையிலேயே இந்தப் பதினொரு அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என ஆள்பதிவுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

உதயன்

# சர்வதேச அழுத்தம் எதுவரை சாத்தியம்?

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் உயர்மட்டப் பிரதிநிதியான, அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இலங்கை வந்துள்ளார்.

இந்த விஜயத்தின் முன்னரும், இந்த விஜயத்தின் ஒரு கட்டமாக கிளிநொச்சியில் புலிகளின் தலைமையைச் சந்தித்த பின்னரும் அவர் விசனத்துடன் வெளியிட்ட கருத்துக்கள் இன்றையநிலையில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. இலங்கை சமாதான முயற்சிகள் எத்தகைய நெருக்கடியில் - இக்கட்டில் - சிக்கியிருக்கின்றன என்பதை வெளிப்படுத்துவதற்கு அவரது கருத்துகள் போதுமானவை.

*"இப்போதுள்ள நிலைமை உறுதியானதாக - ஸ்திரமானதாக - இல்லை. அந்நிலைமை மாறவேண்டுமானால் போர்நிறுத்தம் ஸ்திரமாக்கப்படவேண்டும்; பலமுறவேண்டும். போர்நிறுத்தம் இப்போது பலவீனமுற்றுள்ளது. சின்னச்சின்ன சம்பவங்கள், ஊதிப் பருத்து போர்நிறுத்த நிலையைக் குழப்பிவிடக்கூடும்"* - இப்படி எச்சரிக்கை மணி ஒலித்திருக்கின்றார் விடர் ஹெல்கிஸன்.

*அதுமட்டுமல்ல. "ஒரே சமயத்தில் ஒரு புறம் சமாதான முயற்சிகளைக் கண்டித்துக் கொண்டு, மறுபுறம் சமாதானம் வேண்டும் என்று கூறுவது பொருத்தமற்றது"* - என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

"சமாதானப் பேச்சுகள் தொடர்பான கள நிலைமைகள் கடினமானவையாகவும், நிலைகுலையவைப்பனவாகவும் உள்ளன" - என்று விசனம் தெரிவித்துள்ள அவர், இலங்கைக்கு வருவதற்கு முன்னர் சமாதானப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கான சாத்தியம் குறித்து நம்பிக்கை இழந்த நிலையிலேயே தாம் இருந்தார் என்பதையும் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நம்பிக்கையீன நிலையில் முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டதான அறிகுறி இல்லை.

சமாதான முன்னெடுப்புகள் இவ்வாறு சிக்கல்பட்டு - தடைப்பட்டு - இழுபட்டு - தட்டுத்தடுமாறி - குழம்பி நிற்கின்றன என்பதை கிளிநொச்சியில் பிரதிவெளிவிவகார அமைச்சர் ஹெல்கிஸனைச் சந்தித்த பின்னர் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியும் தெளிவுபடுத்துகின்றது.

இப்படி ஓர் இழுபறி நிலையில் யுத்தநிறுத்தம் நின்று, நிலைத்து, நீடித்துத் தாக்குப்பிடிப்பது துர்லபமே என்பது கண்கூடு.

எனவே, சுமுக நிலைமையை மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகள் விரைந்து எடுக்கப்படவேண்டும். இல்லையேல் விவகாரம் கையைவிட்டு நழுவிப் போய், மோசமடைந்து - தாங்கமுடியாத இழப்புக்களை ஏற்படுத்த - அதன்பின் அதுகுறித்து வருந்தவேண்டி நேரிடும்.

*'அமைதி முயற்சிகளின் - சமாதானப் போக்கின் - த்திலிருந்து சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளுமே விலகவே முடியாது. அத்தகைய சர்வதேச அழுத்தம் இரண்டு தரப்புக்குமே அளவுக்குமேல் உள்ளது. அதிலிருந்து விலகினால் அவ்வளவுதான். விலகும் தரப்பு அவுட்! எனவே, விலகுவதற்கான சூழ்நிலை ஏற்படுவதாகக் காட்டி அவை எவ்வளவு துள்ளிக்குதித்தாலும் அவற்றால் விலகவே முடியாது. எப்படியும் சமாதான வழிமுறைகளில் அவை நின்றாகவேவேண்டும்.'* - என்ற எண்ணமும், சிந்தனையும், நம்பிக்கையும் நமது நாட்டு மக்களினதும் அரசியல் தலைவர்களினதும் மனங்களில் ஆழப் பதிந்திருப்பதாகவே தென்படுகின்றது.

தற்போது சமாதான முயற்சிகளின் நலிவு தொடர்பாக ஏற்பட்டிருக்கும் ஆபத்தை உணராமல் - அதன் விளைவு குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளாமல் - மக்களும், அரசியல் தலைவர்களும் நடந்துகொள்வதையும், கருத்துக்களை வெளியிடுவதையும் நோக்கும்போது அப்படித்தான் தோன்றுகிறது.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக் கடமைப்பட்ட அரசுத் தரப்பிலிருந்து அந்த முயற்சிகளுக்கு கேடு விளைவிக்கத்தக்கவகையில் வெளியிடப்படும் முரண்பாடான கருத்துக்கள்கூட, இவ்வாறு நிலைமையின் யதார்த்தத்தைப் புரியாமல் முன்வைக்கப்படுவனவாகவே உள்ளன.

சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பு, நோக்கம், அழுத்தம், அவற்றினால் சாதிக்கக்கூடிய விடயங்களின் ஆழ - அகலம், இவ்விடயங்களில் அவை அளிக்கக்கூடிய பங்களிப்பு எல்லாமே ஒரு வரையறைக்குள் உட்பட்டவைதான்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவை அல்லது அழுத்தத்தை வைத்துக்கொண்டு ஈழத்தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாசைகளை நிறைவு செய்யாமல் மோசடி செய்துவிடலாம் என்று சிங்களத் தரப்பும் நம்புமானால் அந்த நம்பிக்கை தோற்றுப்போவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இலங்கைப் பிரச்சினைக்கு அமைதி முறையில் - சமாதான வழிகளில் - நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் உண்மையில் கருதுமானால், இத்தகைய சமாதான முயற்சிகளில் நீதி, நியாயத்தோடு செயற்பட மறுக்கும் தரப்புக்கு ஆதரவாக அது தனது அழுத்தத்தைப் பிரயோகிக்கமாட்டாது என்பதையும் அது தெளிவாக வெளிப்படுத்துவது அவசியமானதாகும்.

# இடம்பெயர்ந்தோரின் வருமான விபரம் ஓகஸ்ட் 10ஆம் திகதிக்கு முன்னர் மீளாய்வு

வலி.வடக்கு,ஜூலை28

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களின் வருமானங்களை மதிப்பீடு செய்யும்படி யாழ். செயலகம் பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி அரச அதிபர்களைப் பணித்துள்ளது.

அரசினுடைய தீர்மானத்தின் படி இலவச உலருணவு நிவாரணம் வழங்கப்படும் குடும்பங்களின் தகுதியையும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் நிவாரண அளவையும் மீளாய்வு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் கீழ் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்கள், தற்காலிகமாக உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வசிப்பவர்கள், மீளக்குடியமர்ந்தவர்கள், சொந்த வீடுகளில் வசிப்பவர்கள் ஆகிய அனைவருடைய வரு[illegible]களையும் மீளாய்வு செய்யும்படி அறிவு[illegible]ப்பட்டுள்ளது.

இதன் கீழ் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் பெறும் குடும்பங்கள், 1,501 - 2,500 ரூபாவுக்கு உட்பட்ட குடும்பங்கள் 2,501 - 3,500ரூபாவுக்கு உட்பட்ட குடும்பங்கள் 3,501 - 5,000 ரூபாவுக்கு உட்பட்ட குடும்பங்கள் 5000 ரூபாவுக்கு மேல் பெறும் குடும்பங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மீளாய்வின்போது குடும்பம் என்பது தாய், தந்தை மற்றும் திருமணம் புரியாத பிள்ளைகள் - இவர்கள் தனித்து வாழ்ந்தாலும் மற்றும் வெளிநாடுகளில் வசித்தாலும் - ஒன்றாகவே சேர்க்கப்படவேண்டும்.

பெற்றோர்கள் இறந்திருந்தால் அப்பெற்றோரின் விவாகமாகாத புத்திரர், புத்திரிகள் ஒரே குடும்பமாகக் கருதப்படுவர். இவர்கள் பராயமடையாதவர்களாக இருந்தால் அவர்கள் சட்டப்படியாக பாதுகாவலின் அங்கத்தவர்களாக கருதப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பங்களின் மாதவருமானத்தை கணிப்பீடு செய்வதற்கு முதற்கட்டமாக கிராமிய புனர்வாழ்வுக் குழுக்கள், சமுர்த்தி செயலணி அங்கத்தவர்கள் கிராமிய சுயசார் நிறுவனங்களினுடைய அங்கத்தவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் மூலம் மேற்படி தகவல்கள் பெறப்படவேண்டும்.

இப்பணியை கிராம மட்டத்தில் கிராம உத்தியோகத்தர்கள் ஒருங்கிணைப்பர்.

இந்த மீளாய்வு நடவடிக்கையை எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்படும் இதற்கான படிவங்கள் தனித்தனியாக குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ஐ-86-117)

# பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு: அறிக்கை கோருகிறது உயர் நீதிமன்றம்

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்குத் துரித நடவடிக்கை எடுக்குமாறுகோரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்பட மூவர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்றம், வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடிமர்த்துவது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கோட்டேகொடவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்படி அறிக்கையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு பிரதம நீதியரசர் தலைமையிலான மூன்று நீதியரசர்களடங்கிய குழு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை -

மேற்படி பகுதியில் மக்கள் மீளக்குடியமர்வதில் சிரமங்கள் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில், இங்கு பாடசாலைகள் இயங்குவதுடன், போக்குவரத்துச் சேவைகளும் நடைபெற்று வருகின்றன என மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வாதிட்டுள்ளார். (ப-201)

# புத்தளம் தமிழ் வர்த்தகரிடம் கப்பம் வாங்கியவர் சிக்கினார்!

புத்தளம்,ஜூலை28

இயக்கம் ஒன்றின் பெயரைக் கூறி புத்தளம் தமிழ் வர்த்தகர்களிடம் கப்பம் பெற்றுவந்த வவுனியாப் பகுதி இளைஞர் ஒருவரை சிலாபம் பகுதியிலிருந்து வருகைதந்திருந்த விசேட பொலீஸ் குழு கைது செய்தது.

கடந்த 21.07.2004 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது. அன்றைய தினம் மேற்படி இளைஞர் புத்தளத்திலுள்ள பிரபலமான வர்த்தகரொருவரிடம் சுமார் 5 லட்சம் ரூபாய் கப்பம் கோரினாராம். வர்த்தகரும் அதற்கு இணங்கி, பின் பொலீஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற தினம் இரவு 8.45 மணிக்கு புத்தளம் மாரியம்மன் தேவாலயத்தில் வைத்துப் பணம் தரப்படல் வேண்டும் என்று அந்த இளைஞர் தெரிவித்தாராம்.

இதனையடுத்து பணத்துடன் சென்ற வர்த்தகர் அங்கு நின்ற இளைஞரிடம் பணத்தைக் கையளிக்கும்போது பதுங்கியிருந்த பொலீஸாரினால் அவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் வவுனியாவைச் சேர்ந்த பத்மராஜன் தேவராஜன் (வயது36) எனத் தெரியவந்துள்ளது.

இவர் சுமார் 70 வியாபாரிகளிடம் கப்பம் அறவிட்டு வந்ததாக ஒப்புக்கொண்டார்.

சந்தேக நபர் புத்தளம் மாவட்ட நீதிவான் அமல் திலகரத்தின முன் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை ஓகஸ்ட் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.(ஐ-186)

வேலை வழங்கப்பெற்ற

# 15 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர்கள் நாளை வெளியாகும்

கொழும்பு,ஜூலை28

அரசினால் குறிப்பிடப்பட்டிருந்த தகைமையடிப்படையில் வேலை வாய்ப்பைப் பெறவுள்ள வேலையற்ற பட்டதாரிகளில் 15ஆயிரம் பேருடைய பெயர் விவரங்கள் முதற்கட்டமாக நாளை முதல் அரச சார்புப் பத்திரிகைகளில் வெளியிடப்படவுள்ளன என நிதியமைச்சர் டாக்டர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதம் இரண்டாம் திகதி முதல் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்றும் -

2ஆம் கட்டமாக அடுத்த இரு வாரங்களில் மேலும் 15ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்படும் எனவும் - சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலின்போது வாக்குறுதி அளித்தபடி வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் நடவடிக்கைகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும். இது முழுக்கவும் தகுதியின் அடிப்படையிலேயே செய்யப்படும். எதுவித அரசியல் பாகுபாடும் காட்டப்படமாட்டாது.

இந்த வேலைவாய்ப்புக்கள் இரண்டு வருட தகுதிகாண் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றது. இந்தக் காலப் பகுதிக்குள் அவர்கள் தமது பணி தொடர்பான அறிவையும் பயிற்சியையும் பெற்றுக் கொண்டுவிடுவார்கள். தகவலின் படி 55 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவர்களில் குறிக்கப்பட்ட வயதெல்லைக்குள்வராதவர்கள், பட்டப்படிப்பு தகுதிகள் இல்லாதவர்கள் மற்றும் தற்போது வேலைகளில் இருப்பவர்கள் அனைவரும் தவிர்க்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் கூறினார். (ப)

## தெங்குச் செய்கையாளரை யாழ்.தளபதி சந்திக்கிறார்

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரபால வடமாகாண தெங்கு பயிர்ச் செய்கையாளர் சங்கப் பிரமுகர்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இந்தச் சந்திப்பு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை யாழ். நகரில் அமைந்துள்ள படையினரின் சிவில் நிர்வாக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் போர்ச்சூழல் காரணமாக அழிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு இலங்கை அரசு நஷ்டஈடு வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கோரி யாழ்.மாவட்ட இராணுவத் தளபதிக்கு வடமாகாண தெங்கு பயிர்ச்செய்கையாளர் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

இதனையடுத்தே யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெங்கு பயிர்ச்செய்கையாளர் சங்க பிரமுகர்களை சந்தித்துக் கலந்துரையாட அழைப்பு விடுத்துள்ளார் என்று கூறப்பட்டது. (ஐ-7)

# ஆசிரியர் போட்டிப் பரீட்சை விடைத்தாள்கள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை28

கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சை விடைத்தாள்கள் கொழும்பு பரீட்சைத் திணைக்களத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 62 பரீட்சை நிலையங்களில் நடைபெற்ற இந்தப் போட்டிப் பரீட்சையில் 9 ஆயிரத்து 206 பேர் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் பணிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாகி ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுகள் அறிவிக்கப்படும்.

முடிவுகளின்படி வடக்கு - கிழக்கில் ஆயிரம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-13)

**நாளை**

ஆடி 14
வியாழக்கிழமை
(29.07.2004)
திதி : துவாதசி
காலை 7.32 வரை.
நட்சத்திரம் : மூலம்
முன்னிரவு 7.46 வரை.
சுபநேரம்: 7.33 - 9.03
ராகுகாலம்: 1.33 - 3.03
(பழைய நேரப்படி)

# வாரத்தில் இரு தினங்கள் பற்சிகிச்சை வசதி வேண்டும்

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் வாரம் ஒருநாள் புதன்கிழமைகளில் மட்டும் நடத்தப்பட்டுவரும் பற்சிகிச்சையை இப்பகுதி நோயாளர்களின் நலன் கருதி வாரத்தில் இரு தினங்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

இப்பகுதி மக்கள் 250 பேர் கையொப்பமிட்டு யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளருக்கு கடந்த வாரம் அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் இவவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இங்கு பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பற்சிகிச்சை நிலையத்தில் ஒவ்வொரு புதன்கிழமை தோறும் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. யாழ்.அரசினர் போதனா வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் பல் டாக்டர் ஒருவரே இங்கு வந்து பல் நோயாளர்களுக்கு சிகிச்சையை வழங்கி வருகின்றார். (ஐ-135)

**உதயவாக்கு**

இறந்த ஒருவருக்காக நாம் உண்மையாக அழுதிருந்தால் வீடு திரும்பியதும் இறக்காது நம்முடன் வாழும் அனைவருடனும் அன்பாகப் பழக ஆரம்பித்திருப்போம்.

## நினைவில் நீங்கா
## ஓராண்டு நினைவலைகள்

மண்மகிழ்
03 - 06 - 1982



கண்ணெகிழ்
09 - 08 - 2003

### அருமைத்துரை றனிஸ்கரன்

துள்ளி விளையாடும் பொழுதுகளில்
மனங்களில் மலர்ந்த மகனே!
அந்தி சாயும் முன் - உன்
இளமை சாய்ந்ததுவோ!
காலனின் விளையாட்டில்
கைச்சிக்கிய பொம்மையானாய்
ஐந்தில் ஒருவனாய் - மூத்தவனாய்
நால்வருக்கு வழிகாட்டியானாய்
விழிகளில் கண்ணீரைக் காட்டிவிட்டு
மனங்களில் மறக்கமுடியாதவனாய்...
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவு மாறாத:
அம்மா, அப்பா, சகோதரர்கள்,
நண்பர்கள், உற்றார், உறவினர்கள்.

தொட்டிலடி,
சண்டிலிப்பாய். (34629) (42-12-19-26)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா தளையசிங்கம்



ஏழாலை கிழக்கு, இலந்தைகட்டி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி கந்தசாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா தளையசிங்கம் (முன்னாள் ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை) 26.07.2004 திங்கட்கிழமை மொறட்டுவவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - சீதேவன் அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, தங்கம்மா, சிவசம்பு, அன்னலட்சுமி, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரியும் தனபாலசிங்கம் (ஜேர்மனி) அவர்களின் அன்புத் தாயாரும் இராசலட்சுமியின் மாமியாரும் சிவப்பிரியா - பிரபாகரன், சிவறஞ்சன் (லண்டன்), சிவசக்தி (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2004) வியாழக்கிழமை மொறட்டுவ இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A6 -½, சொய்ஸாபுர,
மொறட்டுவ.
T.P.: 0112-605306
(34626) (39-12-19-26)

தகவல்:
த.இராசலட்சுமி (மருமகள்),
கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு.

### தாமோதரி வயிரவப்பிள்ளை



மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும் குணசிங்கபுரத்தில் வசித்து வந்தவருமாகிய தாமோதரி வயிரவப்பிள்ளை அவர்கள் 26.07.2004 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரி - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும் சின்னத்தங்கம் (இராசம்மா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரவணமுத்து (தேவன்) மற்றும் மகேந்திரன் (ராசன் - கனடா), பாலச்சந்திரன் (ராசா - சுவிஸ்) நகுலேஸ்வரன் (ஈசன் - கனடா), சசிகலா (சுவிஸ்), சுசிகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ச.இராசமலர், ம.பாமினி, பா.பாமினி, சி.சந்திரகுமார், சி.புஸ்பராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற திருமதி மாணிக்கம் கந்தையா மற்றும் திருமதி அன்னமுத்து, மாரிமுத்து (மலேசியா), திருமதி நாகம்மா மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புங்கன்குளம், அரியாலையிலுள்ள அவரது மருமகன் ம.சிவபாலசிங்கம் அவர்களின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சிந்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

317,புங்கன்குளம் சந்தி,
அரியாலை. (34625) (39-12-19-26)

தகவல்:
இ.மு.நாகலிங்கம்.

## குடிதண்ணீர்க் குழாய்கள்

கொழும்புத்துறை,ஜுலை28

கொழும்புத்துறை - புங்கன்குளம் வீதிப்பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகக் குழாய்கள் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் இப்பகுதிக்குக் குழாய் மூலமாகக் குடிதண்ணீர் விநியோகமின்றி மககள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

பல தடவைகள் மக்கள் மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்துத் தற்போது குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. (10-30)

## வீதி புனரமைப்பு

கோப்பாய்,ஜுலை28

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை வீதியைச் செப்பனிடுவதற்கான ஆரம்பகட்டப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

இதன் மூலம் இவ்வைத்தியசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்துச் சிரமம் தீரவுள்ளது.

பத்திரிகைகள் வாயிலாகவும் வேறு பொது ஸ்தாபனங்கள் மூலமாகவும் இந்த வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு பொதுமக்கள் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10-72)

## வழிகாட்டல் கருத்தரங்கு

ஏழாலை,ஜுலை28

புன்னாலைக்கட்டுவன் கணேசா சனசமூக நிலைய ஆதரவில் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் மேற்படி சனசமூக நிலையத்தில் சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் நடைபெறுகின்றன.

வலிகாமம் தெற்கு, வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை இச்செயலமர்வில் கலந்துகொண்டு பயன்அடையுமாறு சனசமூக நிலைய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (10-45)

## மாடுகளுக்கு தொண்டையடைப்பான் நோய்த் தடுப்பூசி

வலி.தென்மேற்கு,ஜுலை28

சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு) கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் நாளை வியாழக்கிழமைமுதல் பின்வரும் இடங்களில் வைத்து மாடுகளுக்கு தொண்டையடைப்பான் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

காலை 9மணி தொடக்கம் இந்த இடங்களில் மாடுகளுக்கு நோய்த்தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் என்று கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ச.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் விவரம்:

29-07-2004 - இளவாலை - கிராம அலுவலர் அலுவலகம், மாரீசன்கூடல் - தபால் கந்தோரடி.

30-07-2004 - மாதகல் - காச்சிபுரம் வைரவர் கோயிலடி, கிரான்சி சேச்சடி.

03-08-2004 - மாதகல் - பிள்ளையார் கோயிலடி, மயில்வாகனப்புலவர் வாசிகசாலை.

04-08-2004 - மாதகல் - நுணசை சனசமூக நிலையம், மாதகல் - மேற்கு, தபால் கந்தோரடி.

05-08-2004. - சில்லாலை - கிராம அபிவிருத்திச் சங்கம், சாந்தை - கிராம அபிவிருத்திச் சங்கம்.

06-08-2004 - பிரான்பற்று - முருகமூர்த்தி கோயிலடி,

09-08-2004 - பண்டத்தரிப்பு - மைனாமில்லடி, அந்தோனியார் கோயிலடி, (ஐ-135)

## மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை28

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மாணவர்களைக் கௌரவிக்கும் விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் நா. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக இளைப்பாறிய உப அதிபர் க.மார்க்கண்டு கலந்து கொள்ளவுள்ளார்.

## ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.நல்லூர் நல்லைநாயகி உடனுறை நல்லநாதர் சிவன் திருக்கோயிலில் ஆடிப்பூர அம்மன் உற்சவத்தை அழகுற நடத்திய கிரியாதத்துவ சோதிட பூஷணம் பிரம்மஸ்ரீ

**ந.ஜெகதீஸ்வரக் குருக்கள்**

(மூத்தனார் கோயில் பிரதமகுரு, ஆனைக்கோட்டை) அவர்களுக்கு கிரியா ஞான ஜோதி என்னும் சிறப்பு விருதினை சிவன் அடியார்கள் முன்னிலையில் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ தானு.வாசுதேவக் குருக்கள் அவர்களின் ஆசியோடு, வழங்கி வாழ்த்தி மகிழ்வதோடு, ஆசிவேண்டிப் பாராட்டி வணங்குகின்றோம்.

(34621)(42)

- சிவன் அருள்வழி நடக்கும்
ஆலய பரிபாலனசபையினர்.


## டோஹா கட்டார்
## கொரியா கம்பனி சேவைக்காக

| வேலைவாய்ப்பு | தொகை | சம்பளம் |
|---|---|---|
| சிவில் போமன் | 04 | QR 900 (25650/-) |
| மேசன்மார்கள் | 40 | QR 750 (21375/-) |
| தச்சன் (செடலிம்) | 40 | QR 750 (21375/-) |
| பார் வலைஞர் (STEEL FIXCER) | 40 | QR 750 (21375/-) |
| பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் (கட்டிடம்) | 40 | QR 700 (19950/-) |

- மொத்த செலவீனம் ரூபா 45000 மட்டுமே
- கொந்தராத்து இரண்டு வருடங்கள்
- உணவுக்கான செலவீனம் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.
- தங்குமிடம், வைத்திய வசதிகள் இலவசம்.
- சென்று வருவதற்கான விமான டிக்கட்.
- 8 மணித்தியாலங்கள் படி 6 நாள்களுக்கு வேலை.
- மேலதிக வேலை நேரத்திற்கும் சம்பளம்.

வங்கி கடன் வசதியுண்டு

31/07/04 போயா தினத்திலும் திறந்திருக்கும்

ஏனைய சட்ட திட்டங்கள் டோஹா கட்டார் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகும்.

பாஸ்போட்,பாஸ்போட் அளவிலான புகைப்படங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

TALENT

App: NO: AL/750/Adv/02/04

ஹேவாஸ் அசோஸியேட்ஸ் (பிரைவட்)லிமிட்
05, பிகரிங்ஸ் ரோட்,கொழும்பு 13
License. No : 750 (எட்டியாவத்தை சந்தி அருகில்)


## கண்ணீர்க் காணிக்கை



அஷ்டலக்ஷ்மி பதிப்பகத்தின் உரிமையாளரும்
எமது அன்புக்குரியவருமான

**குலபதி ஆறுமுகம் கந்தையா**

அவர்கள் காலமானதையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு நாம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மா சாந்தியடைய வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.
ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை - அச்சகம்,
235, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (34598)
(26-12-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 03 - 1916



மறைவு 09 - 08 - 2003

தோற்றம் 05 - 03 - 1929



மறைவு 01 - 10 - 2003

அமரர்
**வேலுப்பிள்ளை பேரம்பலம்**

திருமதி
**பேரம்பலம் சரஸ்வதி**

மண்ணுலகத்திலும் இணைபிரியாதிருந்து
விண்ணுலகிலும் ஜோடிக்கிளிகளாய் ஒன்று சேர்ந்த
எம் அன்புத் தெய்வங்களை நினைவு கூருகின்றோம்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

அனலைதீவு - 02 (34628) (26-12-19)


## ஆடித்தூள் சொப்பிங்

முகூர்த்தப்பட்டுப் புடைவைகள்,வெளிநாட்டிலிருந்து புதிதாக உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன் சாறி வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள்,கோட் சூட், ஸ்கேட் அன் பிளவுஸ் வகைகள், பேபி கவுண் வகைகள், சேட், ரிசேட், சூட் வகைகள், ஜம்பர் வகைகள், ரவுசர் துணி வகைள், கவுண் வகைகள் அத்தனையும்

தரமானதாகவும், ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள மலிவானதாகவும்
உடனே விஜயஞ் செய்யுங்கள்

மிலேனியம் பெஷன் &
பொம்பே பஜார்





இல.10, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P 021 4590174
(C/36351)

# ஈழவேந்தனுக்கு ஏற்பட்ட அவமரியாதை உலகத் தமிழினத்துக்கே அவமதிப்பு

## கனடா படைப்பாளிகள் கழகம் கண்டனம்

றொறன்டோ,ஜூலை.28

சென்னை சர்வதேச விமான நிலையத்திற்குள் பிரவேசிக்கவிடாமல், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் இந்திய அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவத்தைக் கனடாவில் இயங்கும் தமிழ்ப்படைப்பாளிகள் கழகம் கடுமையாக விமர்சித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

படைப்பாளிகள் கழகம் வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையின் சில பகுதிகள் வருமாறு:

புதுடில்லியிலிருந்துகொண்டு இந்திய வெளியுறவுக் கொள்கையை உருவாக்குபவர்கள் தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு எதிரான உயர்மட்ட அதிகாரிகள் என்பது யாவரும் அறிந்த விடயம்.

எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும் இந்த அதிகாரிகளே வெளியுறவுக்கொள்கைக்கு உருவம் கொடுக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியோ பாரதய ஜனதாவோ பதவிக்கு வருவதற்கு திராவிடக் கட்சிகளின் ஆதரவை நாடி நிற்கிறார்கள். பதவியில் அமர்ந்தவுடன் தமிழ்த் தேசியத்துக்கு எதிராகவே செயல்படுகிறார்கள்.

ஜே.என்.டிக்ஸிற் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டிருப்பது நல்ல சகுனம் அல்ல. தனியான தமிழ் ஆட்சிப் பிரதேசம் ஒன்றை விடுதலைப் புலிகள் அமைக்க விரும்புவதானது இந்தியாவின் ஐக்கியத்தன்மையை பாரதூரமாகப் பாதிப்பதாக இருக்கும் என்ற கற்பனைக் கதையின் மூலகர்த்தா இந்த டிக்ஸிற்தான்.

இலங்கையுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை இந்தியா செய்துகொள்வதற்கு காட்டப்படும் அவசரத்தன்மையும் புதுடில்லியின் காற்று எந்தப் பக்கம் வீசுகின்றது என்பதைக் காட்டுகின்றது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா கடல் ரோந்துக் கலங்களையும் ஹெலிகொப்டர்களையும், ரொக்கெட் லோஞ்சர்களையும், ஆட்லறி ஷெல்களையும், வெடிமருந்துகளையும், டாட்டா கனரக வண்டிகளையும், பஸ்களையும், ஜீப்புக்களையும் வழங்கக்கூடும் என்று செய்திகள் கூறுகின்றன.

இந்த ஆயுதங்கள் யாவும் யாருக்கு எதிராகப் பாவிக்கப்படும் என்பதை இந்திய அரசு அறியாதிருக்கும் என்று சொல்லமுடியாது. இலங்கைக்கு எதிரி நாடு எதுவும் இல்லை என்பது தெரிந்த விடயம். எனவே இந்த ஆயுதங்கள் எல்லாம் கடந்த காலங்களபோல இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகவே பாவிக்கப்படப் போகின்றன.

ஈழவேந்தன் இந்தியாவின் எதிரியல்ல. மொழி, கலாசாரம், சமயம் முதலியவற்றால் இணைக்கப்பட்ட ஓர் இந்திய நண்பனாகவே அவர் தம்மை இனம் காண்கிறார். அவரது இரு புதல்விகள் இந்திய பிரஜைகளை மணமுடித்திருக்கிறார்கள்.

அவருக்கு ஏற்பட்டுள்ள அவமதிப்பானது அவருக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட ஒன்று. இது உலகம் முழுவதும் வாழ்கின்ற சகல தமிழ்மக்களுக்கும் ஏற்பட்ட அவமதிப்பாகும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை28

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ் மாநகர சபையினரால் முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப்படுகின்றது.

யாழ். மாநகரசபைக்குட்பட்ட அதன் கட்டுப்பாட்டினுள் இயங்கும் முன்பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவரினதும் நிறையை அண்மையில அளவிட்டபோது மாணவர்களின் நிறை மிகவும் குறைவாகவிருந்ததனால் சத்துணவு இலைக்கஞ்சி வழங்கப்படுவதாக மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் மாநகரசபையினால் முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகரசபையின் செயலாளர் எஸ்.குலநாயகம் மற்றும் மாநகரசபை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வினை ஆரம்பிதது வைத்தனர். (10-13)

## வெரித்தாஸ் நேயர் மன்றம் ஞாயிறன்று அங்குரார்ப்பணம்


வெரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணிக்கான நேயர் மன்றம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்குப் பிரதான வீதியில் உள்ள 'பாதுகாவலன்' பணிமனை மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள வெரித்தாஸ் நேயர்கள் மற்றும் ஆர்வலர்களை இதில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை -

'பாதுகாவலன்' பத்திரிகைக் குடும்பத்தினரையும் அன்றையதினம் ஒன்று கூடலுக்கு வருகை தருமாறு 'பாதுகாவலன்' ஆசிரியர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை கேட்டுள்ளார். (ஐ-30)



மானிப்பாய் பரிஷ் மற்றும் யாழ். மத்திய கல்லூரி லியோக் கழகங்கள் இணைந்து நடத்திய சிகை அலங்கரிப்பாளர்களுக்கான மாபெரும் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்தவாரம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

*(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## உள்ளூராட்சி வார இறுதி நிகழ்ச்சி பருத்தித்துறையில் இன்று

வடமராட்சி,ஜூலை28

பருத்தித்துறைப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார சிறப்பு நிகழ்ச்சி இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் சபைச் செயலாளர் சி.பசுபதி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா முதன்மை விருந்தினராகவும், பருத்தித்துறை அரசினர் ஆதர வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

பருத்தித்துறைப் பிரதேச சபையில் நீண்டகாலம் பணியாற்றி இளைப்பாறிய பொ.தங்கராசா, ம.பீற்றர் பிலிப்புநேரி ஆகிய இரு உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் வைத்துக் கௌரவிக்கப்படுவார்கள். (ஐ-173)

## ஆங்கில தினப் போட்டிகளில் உடுவில் மகளிர் மாணவிகள் முதனிலை

வலி.தெற்கு,ஜூலை28

அண்மையில் நடைபெற்ற உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகள் ஆங்கில தினப் போட்டிகளில் உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் அதிகப் படியான முதலாம் இடங்களையும் மிகக் கூடுதலான இடங்களையும் பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

உடுவில் மகளிர் கல்லூரியில் உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் ஆங்கிலதினப் போட்டிகள் இரு தினங்கள் நடைபெற்றன.

மூன்றாம் வகுப்பு தொடக்கம் 13ஆம் வகுப்பு வரை நடைபெற்ற உடுவில் மகளிர் கல்லூரி மாணவி.கள் 35 முதல் இடங்களைப் பெற்று வெற்றி யீட்டினர்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் 08 முதல் இடங்களைப் பெற்று இரண்டாம் நிலையில் உள்ளனர்.

இணுவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் 02 முதலாம் இடங்களையும், ஏழாலை மகா வித்தியாலயம், மயிலணி சைவ மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தலா ஒரு முதலிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

அதேசமயம், உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் 18 இரண்டாம் இடங்களையும், 16 மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர். ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் 11 இரண்டாம் இடங்களையும், 07 மூன்றாம் இடங்களையும், இணுவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் 04 இரண்டாம் இடங்களையும், 03 மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

உயர்தர மாணவர்களிடையே நடத்தப்பட்ட முன்தயார் செய்யப்படாத (IMPROMPT) பேச்சுப் போட்டியில் முதல் இரண்டு இடங்களையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், தயார் செய்யப்பட்ட (PREPARED) பேச்சுப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி முதல் இரண்டு இடங்களையும் பெற்றுக்கொண்டன.

ஆரம்பப் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, சிரேஷ்ட பிரிவுகளில நாடகப் போட்டியில் சகல பிரிவுகளிலும் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர்.

குழுப்பாடல் நிகழ்வில் ஆரம்பப்பிரிவு, மத்திய பிரிவு, சிரேஷ்ட பிரிவுகளில் உடுவில் மகளிர் கல்லூரி முதல் இடத்தையும், கீழ்ப் பிரிவில் முதலாம் இடத்தையும் மத்திய பிரிவில் இரண்டாம் இடத்தையும் மயிலணி சைவ மகா வித்தியாலயமும் -

ஆரம்பப் பிரிவு மூன்றாம் இடத்தைச் சுன்னாகம் றோ.க.த.க.பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

(ஐ-152)

## யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்த வயோதிபர் இனங்காணப்பட்டார்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பெயர் விவரங்கள் தெரியாத நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்த வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

நயினாதீவைச் சேர்ந்த வர்த்தகரான இராமநாதன் பரமலிங்கம் (வயது 76) என்பவரது சடலமே இதுவென்று அவரது சகோதரி அடையாளம் காட்டினார்.

கடந்த 22ஆம் திகதி தலையில் படுகாயம் அடைந்த நிலையில் வயோதிபர் ஒருவர் இனந் தெரியாதோரால் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் இறந்துவிட்டார்.

அவரது மரண விசாரணையை நடத்திய யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, பிரஸ்தாப வயோதிபரை ஆஸ்பத்திரியில் சேர்த்த சமயம் பதிவுகளை மேற்கொண்ட ஆஸ்பத்திரி ஊழியரை விசாரணை செய்து சடலத்தை இனங்காண ஏற்பாடு செய்யுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நபர் திருநெல்வேலியில் நின்ற சமயம் வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இவரை மோதிவிட்டுத் தப்பிஓடிவிட்டது என்பதையும், வீதியால் சென்றவர்கள் அவரை ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தனர் என்பதையும் பொலீஸார் விசாரித்து அறிந்தனர். தொடர்ந்து விசாரணை நடத்திய பொலீஸார், பிரஸ்தாப மோட்டார் சைக்கிளை விபத்து நடந்த சமயம் அதன் பின்னால் அமர்ந்து பயணித்த உரும்பிராயைச் சேர்ந்த சதீஸ்குமார் என்பவரது வீட்டில் இருந்து மீட்டனர். அவரை விசாரணைக்குட்படுத்திய பொலீஸார் பின்னர் விடுவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் நடந்தசமயம் பிரஸ்தாப நபரையும் மோட்டார் சைக்கிள் ஓட்டியான வசந்தநாதன் சதீஸ்குமார் என்பவரையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3-4)

## புதிய பெயர்ப்பலகை

ஏழாலை,ஜூலை28

சுன்னாகம் சந்தியில் இருந்து கந்தரோடை செல்லும் வீதியில் "கந்தரோடை புராதன ஆராய்ச்சி மையம்" என தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட பெயர்ப் பலகை புதிதாக நடப்பட்டுள்ளது.

முன்னர் கதுறுகொட விகாரை எனக் குறிப்பிட்டு நடப்பட்டிருந்த பெயர்ப்பலகை இனம் தெரியாதோரால் சில மாதங்களுக்கு முன்னர் தீக்கிரையாக்கப்பட்டது தெரிந்ததே. (10-45)

## விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் இந்த ஆண்டுக்கான இறுதிப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பரீட்சை விண்ணப்பங்களை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அனுப்பிவைக்குமாறு உப அதிபர் கேட்டுள்ளார். (10-6)

## கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்த இருநாள் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சிநெறி எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் இருதினங்கள் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமயில் இடம்பெறும் செயலமர்வில் அரச காணிகள் பற்றிய கிராம அலுவலர்களின் கடமைகள் என்ற தலைப்பில் செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் கு.ஞானசேகரனும் -

'தனியார் அரச பாடசாலைகள், வீதி ஒதுக்குக் காணிகளில் மரம் தறித்தலும், கொண்டு செல்லுதலும் தொடர்பான சட்டங்கள்' என்ற தலைப்பில் வட்ட வன அலுவலர் எம்.பிரபாகரனும் -

'அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் கிராமிய மக்கள் அமைப்புக்கள் ஆகியவற்றை தொடர்புபடுத்தலும், புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்தலும்' என்ற தலைப்பில் யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளையும் -

'நிவாரண புனர்வாழ்வு உதவிகளை குடும்ப மட்டத்தில் ஆவணப்படுத்தல்' என்ற தலைப்பில் உதவித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலனும் -

'சுற்றாடலும், சுற்றாடல் பாதுகாப்புக்கான தேவையும்' என்ற தலைப்பில் பிரதேச சூழல் உத்தியோகத்தர் திருமதி குமுதினி வசந்தரூபனும் -

'பிரதேச மட்டத்தில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது சுற்றாடலை மேம்படுத்துவதில் கிராம அலுவலர்களின் பங்கு' என்ற தலைப்பில் சிரேஷ்ட சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி வி.சத்தியகுமாரும் - கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ஐ-5)

## உடுவிலில் மூடப்பட்டிருந்த இரு வீதிகள் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூலை.28

உடுவில் ஞானப்பிரகாசம் வீதி ஊடாகச் செல்லும் இரு கிளை வீதிகளைப் படையினர் திறந்து பொதுமக்களின் பாவனைக்கு விட்டுள்ளனர்.

கடந்த 1996ஆம் ஆண்டு தொடக்கம் உடுவில் ஞானப்பிரகாசம் வீதி 513ஆவது படையணியின் கட்டுப்பாட்டில் மூடப்பட்டது.

இவ்வீதியை பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடுவதற்கு உதவிகோரி மல்வம் கிராமப் பொதுமக்கள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அவர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியைச் சந்தித்துக் குறிப்பிட்ட வீதியைப் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடுமாறு கோரியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து இவ்வீதி ஊடாகச் செல்லும் இருவீதிகளை பொதுமக்கள் பயன்படுத்தப் படையினர் அனுமதித்துள்ளனர். (ஐ-173)

## விவேகானந்த சபை - கொழும்பு
## அகில இலங்கை சைவசமய பாடப்பரீட்சை - 2004

மேற்படி பரீட்சை 07-11-2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரங்கள் பாடசாலைகளுக்கு 2003 ஆம் ஆண்டுப் பரீட்சை பெறுபேறுகளுடன் அனுப்பப்பட்டுள்ளன.

*புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் பரீட்சை தொடர்பான விவரங்களுக்கு சபையின் கௌரவ பொதுச் செயலாளருடன் கடிதம் மூலம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.*

**யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கான விண்ணப்பங்கள் 31-08-2004 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

*34,விவேகானந்த மேடு,*
*கொழும்பு.13,*
*தொலைபேசி 2422646.*

**க.இராஜபுவனீஸ்வரன்,**
கௌரவ பொதுச்செயலாளர்.
(C/36366)(42-19-26)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
1927 • 06 • 27

மறைவு
2004 • 06 • 28

**அமரர் மயிலு ஜெயரட்ணம்**
(Formly Govt Analysist Dept)


எமது குடும்பத்தலைவரின் மறைவின்போது எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகள்.
*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.*

Mrs. J.Jeyaratnam,
8Green way Close,
Colindle, London.
NW9 5AZ. U.K.
T.P.: 0044 0208 9310626.

**- குடும்பத்தினர்.**
(34583) (26-19).



## நான்காமாண்டு நினைவஞ்சலி



அமரர்

**கணேசபிள்ளை கஜேந்திரன்**

*(வவுனியா மத்திய மகாவித்தியாலய உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மாணவன்)*

தோற்றம் **1981-05-07**
மறைவு **2000-07-28**

*திதி: 13-08-2004 திரயோதசி*

நான்கு ஆண்டுகள் கடந்தாலும்
இதயத்தில் உம் நினைவு என்றென்றும்
நின்றே நிறைந்திருக்கும்.
உம்பிரிவு எம் நெஞ்சை வாட்டுகின்றதே...

*இல.33,புதிய செம்மணி வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*
(34611)(42-19-26)

*உம்பிரிவால் துயருறும்:*
**அப்பா, அம்மா, தம்பிமார், உறவினர், நண்பர்கள்.**


## புதிய நிர்வாகிகள் தெரிவு

குருநகர், ஜுலை28

குருநகர் சென். ஜேம்ஸ் கல்விக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. கழகத்தின் பதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது.

அ.பீற்றர்குமார் தலைவராகவும் மு.நெல்சன் செயலாளராகவும் ஜேம்ஸ் மேசன் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-51)

## விசர்நோய் குறித்த விழிப்புணர்வு

தென்மராட்சி,ஜுலை28

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி பிரதேச சபையினர் 'விசர் நாய்க்கடி நோய் தொடர்பான விழிப் புணர்வு' துண்டுப்பிரசுரங்களைப் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அனுசரணையுடன் வெளியிட்டுள்ளனர்.

விசர்நாய்க்கடி நோயினால் ஏற்படும் பாதிப்புக்கள், நோய் வராமல் தடுக்கும் முறைகள் போன்ற விவரங்கள் துண்டுப் பிரசுரத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஐ-117)

## வலி.கிழக்கில் வீதிகளைத் திருத்த நிதி

நீர்வேலி, ஜுலை28

வலி.கிழக்குப் பிரதேசசபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைப்பதற்கென 'நிக்கொட்' 59 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது.

'நிக்கொட்' நிதியின் கீழ் புத்தூர் சந்தை வீதி, இருபாலை குருத்தோலை வீதி, இருபாலை விளையாட்டரங்க வீதி, நிலாவரை பிள்ளையார் வீதி, புத்தூர் மக்கள் குடியிருப்பு வீதி என்பனவே திருத்தப்படவுள்ளன.

(ஐ-110-204)


## காவலாளி தேவை

பண்டத்தரிப்பு வணிகர் கழகத்திற்கு காவலாளி தேவை. தகுதியுடையவர் விண்ணபிக்கவும்.

**விண்ணப்பமுடிவு திகதி: 30.07.2004**

*குறிப்பு: பண்டத்தரிப்பு எல்லைக்குள் இருக்க வேண்டும்.*

தொடர்பு: **செயலாளர், புதிய அக்றொ சென்ரர், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.**

(சி-36384)(36)



## வரலாறு காணாத மலிவு விற்பனையும் புத்தகக் கண்காட்சியும்

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன்
யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால்
பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக
வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறுகிறது.

**காலம்: 2004 ஜுலை 19 முதல் 29 வரை**
**நேரம்: தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)**
**இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்**

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விஷேட கழிவாக 20% வழங்கப்படும்.

**பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்துதரப்படும்.**

தொடர்புகளிற்கு:
**வணிக மாணவர் மன்றம், யாழ். பல்கலைக்கழகம்.**

(C/36016)(43-26-19)


## நகரசபை, சாவகச்சேரி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 12.08.2004 ஆம் திகதி 10மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளின் பொருட்டு நிர்மாணப்பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) "தரம் எம் 9" அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றை வரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் ரூ. சதம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூ. சதம் |
|---|---|---|---|
| 01 | மூநாட்டு மேசை செய்து வழங்கல் | 1,000.00 | 575.00 |
| 02 | கொல்களம் திருத்தம் செய்தல் | 500.00 | 575.00 |
| 03 | மாட்டுத் தொழுவம் அமைத்தல் | 1,000.00 | 575.00 |
| 04 | அலுவலகக் களஞ்சிய அறை மீளமைத்தலும் திருத்தமும் | 6,000.00 | 575.00 |
| 05 | இறைச்சிக் கடைகள் திருத்தமும் தீந்தை பூசுதலும் | 1,500.00 | 575.00 |
| 06 | நகர மண்டபக் காணிக்கு சுற்று மதில் அமைத்தல் | 9,000.00 | 575.00 |
| 07 | நகரசபை அலுவலக வளாகத்தக்கு சுற்றுமதில், முட்கம்பி வேலி அமைத்தல் | 4,000.00 | 575.00 |
| 08 | பொதுநூலகத்துக்கான மலகூடம் அமைத்தல் | 600.00 | 575.00 |

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 10.08.2004ஆம் திகதி நண்பகல் 12மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி "செயலாளர், நகரசபை, சாவகச்சேரி" என்ற முகவரிக்கும் இணைப்பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் 12-08-2004ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**நகரசபை அலவலகம்,**
**சாவகச்சேரி. 23.07.2004**
(சி-36377) (26-19)

**மு.செ.சரவணபவ,**
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

# பண்பாட்டுச் சிதைவுகளுக்கு இன்றைய சினிமாவும் காரணம்

## கலாசார விழாவில் முன்னாள் மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா

வலி. மேற்கு,ஜூலை28

இன்று தமிழ் மக்களின் நாகரிகம், பண்பாடு சற்று சிதைந்துபோய் இருப்பதற்கு நம் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் மட்டுமல்ல, இன்று சமூகத்திலே முக்கிய இடம்பெற்றுள்ள சினிமாக்களே முக்கிய காரணம் என்று கூறினார் இளைப்பாறிய யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்.

அண்மையில் சங்கானை கலாசார மண்டபத்தில் வலி. மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவையினர் சங்கானைப் பகுதி மக்களின் ஆதரவில் நடத்திய கலாசார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சந்திரராசா அரங்கில் நடைபெற்ற கலாசார விழாவை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ச.கயிலாயநாதன், பிரபல வர்த்தகர் எஸ்.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்ற கலாசார விழாவில் திருமதி ப.திலகநாயகம்போல் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

பழந்தமிழ் சமுதாயத்திற்கு மிக உன்னதமான குறிக்கோள்கள், கொள்கைகள் இருந்தன. தமிழர்களுக்கு என்று ஒரு தனிப்பாரம்பரியம், தனிப்பண்பாடு, தனி நாகரிகம் இருந்தது. கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைபெற்ற அனர்த்தங்களினால் முக்கியமாக இடப்பெயர்வினால் எங்கள் மத்தியிலே தமிழர் நாகரிகம், பண்பாடு சற்றுச் சிதைந்துபோயுள்ளது. சமுதாயத்திலே நமக்கு ஏற்பட்ட துன்பங்கள் மட்டுமல்ல இதற்குக் காரணம். முக்கியமான காரணமாக இருப்பது இன்றைய சினிமாவே என்பதை அனைவரும் அறியவேண்டும்.

ஒரு காலத்தில் கலை, கலாசாரத்தை வளர்ப்பதற்குப் புறப்பட்ட சினிமாத்துறை இன்று பொருளாதார ரீதியிலே பொருள் ஈட்டவேண்டும் என்ற நிலையில் இயங்குகின்ற காரணத்தினால்தான் நமக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்று எமது சமுதாயத்திலே சிறியவர்கள் பெரியவர்களைப் பெற்றோர்களை ஆசிரியர்களை மதிப்பதற்கு மிகவும் பின்வாங்குகின்றனர். காரணம் என்ன? சினிமாக்களிலே இத்தகைய காட்சிகள்தான் அடிக்கடி இடம்பெறுகின்றன. இந்தக்காட்சிகளை உண்மை என்று நினைத்து எமது பிள்ளைகள் பின்பற்றுகின்றனர். இவற்றை எல்லாம் நிறுத்தி எமது உண்மையான கலையை, கலாசாரத்தை, பண்பாட்டை நாங்கள் பின்பற்றவேண்டும் என பதனை அவர்களுக்கு உணர்த்தவேண்டும் பண்பின் அடிப்படையிலேயே பிறந்தது பண்பாடு. பண்பாடு எனப்படுவது பலரறிந்து ஒழுகுதல். பண்பு, பண்பாடு, பண்பியல் என்பதெல்லாம் ஒரே அடிப்படையில் இருந்து பிறந்தவை. இவை எல்லாம் தமிழுக்கு, தமிழர்களுக்கென்று உரியவை. முன்னொருகாலத்தில் 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா' என்று சொன்னது மட்டுமல்ல 'தமிழன் என்று ஒரு இனம் உண்டு, தனியே அதற்கு ஒரு குணம் உண்டு' என்று கூறி மிகவும் பெருமையாக தலைநிமிர்ந்து வாழ்ந்தவர்கள் எங்களுடைய தமிழர்கள். அந்தத் தமிழர் நாகரிகம் உலகம் முழுவதும் பரவியிருந்ததைச் சரித்திர வரலாற்று ரீதியாக அறியக்கூடியதாக இருக்கின்றது. வேறு எந்த மொழியிலும் இல்லாத வகையிலே இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை வளர்த்து, வளர்த்துக்கொண்டிருப்பது, இன்னும் வளர்க்கப்போவது எங்களுடைய தமிழ் மொழிதான். கலை, கலாசாரம் எங்களிடையே ஓரளவுக்குச் சீரழிந்து, சிதைந்து கொண்டு போனாலும்கூட அது முற்றாக அழியாதது தமிழின் பெருமை என்றுதான் கூறவேண்டும் என்று கூறினார். பல பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ப-175)

# இலகுவாகத் தெரியும் துறையை நாடிபிடித்துப் பார்த்துப் படியுங்கள்

## மாணவர்களுக்கு பேராயர் ஜெபநேசன் அறிவுரை



யாழ்ப்பாணம்,ஜூலை28

விஞ்ஞானம் தெரியவில்லை, கணிதம் புரியவில்லை என்று நீங்கள் ஏங்கவேண்டியதில்லை. எத்துறை உங்களுக்கு இலகுவாகத் தெரிகிறதோ அத்துறையை நாடிபிடித்துப் பார்த்துப் படியுங்கள்.

- இவ்வாறு மாணவர்களுக்கு அறிவுரை கூறினார் தென்னிந்திய திருச்சபை பேராயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி எஸ்.ஜெபநேசன்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றபோது அங்கு பேசுகையிலேயே பேராயர் ஜெபநேசன் இவ்வாறு கூறினார்.

கல்லூரிச் சிறுவர்களின் வரவேற்புக் கீதத்தைத் தொடர்ந்து அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் தலைமையில் பரிசளிப்பு விழா இடம்பெற்றது.

மேற்படி விழாவிற்குப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பேராயர் எஸ்.ஜெபநேசன் மேலும் பேசுகையில்:

தற்போது பாடசாலையில் கற்றுவரும் மாணவர்கள் எதிர்காலத்தில் தலைசிறந்த நிர்வாகியாக, கல்விமானாக, வைத்தியனாக மிளிரப் போகிறார்கள்.

இந்தநிலை உருவாக நிச்சயமாகப் பெற்றோரும் ஆசிரியர்களும் கணிசமான பங்கினை வகிக்கவேண்டும்.

எனது மாணவர்களே! உங்களுக்கு நான் சொல்லும் செய்தி என்னவென்றால் நீங்கள் கல்லூரிக் காலங்களிலே உங்களது திறமைகளை வெளிக்காட்டுங்கள்.

நீங்கள் நடிகராக, எழுத்தாளனாக விஞ்ஞானியாக, பொலிஸ்காரனாக, பேச்சாளனாக, அரசியல்வாதியாக, தொழிலதிபராக, நிர்வாகியாக வரவிரும்பினால் அதனை மனதில் எண்ணிச் செயலில் இறங்குங்கள். அதன்படி நீங்கள் எதிர்காலத்தில் வருவீர்கள் என்பது நிச்சயம்.

கல்லூரியின், கடந்த காலங்களில் மாணவனான பாலுமகேந்திரா கமராக்களுடன் கல்லூரி வளாகத்தில் படங்கள் எடுத்துத் திரிவார். அதனைக் கமூவி மற்றவர்களுக்கும் வழங்கி மகிழ்வார்.

இப்படிப்பட்ட பாலுமகேந்திராதான் இன்று இந்தியாவில் புகழ்பூத்த திரைப்பட இயக்குநராக உள்ளார் - என்றார்.

கல்லூரி அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் அறிக்கையை வாசித்தளித்தார்.

தொடர்ந்து சிறந்த பேச்சுக்காகத் தங்க விருது பெற்றுக்கொண்ட டி.குலராஜ் உரையாற்றினார்.

பரிசில்களையும், கேடயங்களையும் விருதுகளையும் பதக்கங்களையும் திருமதி சீத்தா விமலாலக்சுமி ஜெபநேசன் வழங்கினார்.

தமிழ்ப்பேச்சில் தங்கவிருது பெற்ற செல்வன் எஸ்.நிகேஷின் கல்லூரி வரலாறு பற்றிய சிறப்புப் பேச்சும் இடம்பெற்றது. (ப-185)

# கடற்றொழிலாளரின் துன்பங்களை படிப்படியாகத் தீர்க்க முயல்வோம்

## கூட்டுறவுச் சங்க சம்மேளனப் புதிய தலைவர் சொல்கிறார்

வடமராட்சி,ஜூலை28

கடற்றொழில் சமூகம் தொடர்ந்தும் பல இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகிறது. இவைகளை நீக்குவதற்குப் பாடுபட்டு இச்சமூகத்தின் முன்னேற்றத்துக்காக தொடர்ந்து உழைப்பேன்.

- இவ்வாறு யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட எஸ்.தவரத்தினம் கூறினார்.

சில மாதங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட இச்சம்மேளனத்துக்குத் தற்காலிகத் தலைவராக எஸ்.வென்சஸ்லோஸ் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் யாழ். பிரதான வீதியில் உள்ள சம்மேளனத்தில் மீண்டும் நடைபெற்றபோது புதிய தலைவராக எஸ்.தவரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார்.

புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட எஸ்.தவரத்தினம் மேலும் பேசுகையில் கூறிய தாவது:-

பல்லாண்டு காலமாகக் கடற்றொழில் சமூகம் சுதந்திரமாகத் தொழில்செய்ய முடியாமலும், படையினரின் கெடுபிடிகளாலும் பெரும் துன்பங்களையும், இன்னல்களையும் அனுபவித்து வருகிறது. யுத்தநிறுத்தம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் நிலைமையில் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை.

இந்த நிலைமையில் எமது சம்மேளனத்தின் செயற்பாடுகள் மூலமாகக் கடற்றொழில் சமூகம் பட்டுவரும் இன்னல்கள், துன்பங்களுக்குப் படிப்படியாகத் தீர்வுகண்டு கடற்றொழில் சமூகத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வோம் - என்றார்.

சம்மேளனத்தின் உபதலைவராக எஸ்.வென்சஸ்லோஸும், செயலாளராக கே.சூரியகுமாரனும் பொருளாளராக பயஸ் லோகதாஸும் தெரிவுசெய்யப்பட்டனர். (ப-173)




# சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளை விரைவில் கணனி மயமாக்கப்படும்

## வங்கி அதிகாரி வெளியீட்ட தகவல்

வலி. தெற்கு,ஜூலை28

சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையின் சகல செயற்பாடுகளும் விரைவில் கணனி மயப்படுத்தப்படவுள்ளன. தற்போதைய வங்கிக் கிளைக்கு எதிரே நிர்மாணிக்கப்பட்டு வரும் மாடிக்கட்டடத்தில் வங்கிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் அதன் செயற்பாடுகள் யாவும் கணனி மயப்படுத்தப்படும்.

சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையில் நடைபெற்ற 18+ கணக்கு இளைஞர், யுவதிகளுக்கான சீட்டிழுப்புப் பரிசுகள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய வங்கி அதிகாரி வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முகாமையாளர் சி.கிருஷ்ணானந்தன் தலைமை வகித்தார்.

இளைஞர்களையும் யுவதிகளையும் சேமிக்கத் தூண்டும் வகையில் பல்வேறு சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்துப் பற்பல வெகுமதிகளையும் சேவைகளையும் வழங்கிவருகின்றோம். சேமிப்பு வைப்புகளை மேற்கொள்வோருக்கு இறப்பு அல்லது நிரந்தர இயலாமைக்கான இலவச ஆயுள் காப்புறுதி, நிரந்தர சிறுபாதிப்புக்களுக்கு இலவச ஆயுட்காப்புறுதி, கடன் வசதிகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

25 ஆயிரம் ரூபாவை ஒரு வருடம் சேமிப்பில் வைத்துள்ளவர்களுக்குத் திருமணத்தின் போது தங்கப் பவுண் ஒன்று வங்கியால் வழங்கப்பட்டு வருகின்றது.

10 ஆயிரம் ரூபா ஒரு வருடகாலத்துக்கு மேல் வைப்பில் இட்டால் முதலாவது குழந்தைக்கு 500 ரூபா சிறுவர் பொன் அரும்புக் கணக்கில் வைப்பில் இடப்படும். மேலும், 5 ஆயிரம் ரூபாவை ஒரு வருடம் வைப்பில் இடும்போது லொத்தர் முறையில் விசேட புலமைப்பரிசில் வழங்கப்படும்.

குறைந்தது 5 ஆயிரம் ரூபா நிலுவையாக கணக்கில் இருப்பின் அல்லது மாதாந்த நிரந்தர வருமானம் இருப்பின் கடன் அட்டையை பெற்றுக்கொள்ள முடியும் என வங்கி அதிகாரி வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன் கூறினார்.

திருமணப் பரிசாக செல்வி த.தர்மினி (மல்லாகம்), செல்வி அ.சர்மினி (மல்லாகம்) ஆகியோருக்கு முகாமையாளர் சி.கிருஷ்ணானந்தன் தங்கப் பதக்கம் பரிசாக வழங்கினார்.

கொழும்பு மத்திய அலுவலகத்தில் இடம்பெற்ற 18+ கணக்கு இளைஞர், யுவதிகளுக்கான சீட்டிழுப்பில் பரிசுபெற்ற எட்டுப் பேருக்கான பரிசுகளும் முகாமையாளரால் வழங்கப்பட்டன. (ப-152)

# அநாதரவான குழந்தைகள் ஆற்றலுடன் வளர வாய்ப்பு

## தாயகம் சிறுவர் இன்பகத்துக்குப் பாராட்டு

கோண்டாவில்,ஜூலை28

ஆதரவற்ற குழந்தைகளை எதிர்காலத்தில் ஆற்றலுள்ளவர்களாக வளர்வதற்குத் தாயகம் போன்ற இல்லங்களின் சேவை மிகவும் அவசியம் என்று கூறினார் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்.

கோண்டாவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள தாயகம் சிறுவர் இன்பகத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வு சுடர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியபோதே அவர் இப்படிக் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்:-

குறிஞ்சி மலர்கள் போன்ற மனிதர்களை இறைவன் அவ்வப்போது படைப்பதுண்டு. அத்தகைய மனிதராக சிரீதரன் போன்றோரை இறைவன் படைத்திருப்பது எம் போன்றவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்று எமது நாட்டில் நன்றி என்ற உயர்ந்த பண்பு மறைந்து வருகிறது. குறிப்பிட்ட சிறுவர் இல்லம் ஒன்றில் இருந்து படித்து உயர் நிலையை அடைந்த ஒரு சில மாணவர்கள் அந்தச் சிறுவர் இல்லம் வழங்கிய சேவையை மறந்துவிட்டார்கள். அத்தகைய நிலையில் தாயகச் சிறுவர்கள் இருக்கக்கூடாது.

தற்போது தாயகக் குழந்தைகளுக்கென கோப்பாய் இராசவீதியில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளை அனைவரும் ஊக்குவிக்க வேண்டும் - என்றார்.

பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் அ.சுதாஸ் உரையாற்றுகையில்:-

போரிலே தாய், தந்தை மற்றும் உறவுகளை இழந்து அநாதரவான நிலையிலுள்ள பிள்ளைகளைத் தாயகம் அரவணைத்திருப்பது மகிழ்ச்சி தருகிறது. அத்தகையில் ஏற்கனவே நாம் செஞ்சோலை, காந்தருபன் அறிவுச் சோலைகளை நிறுவி சிறுவர்களின் எதிர்கால வாழ்வுக்கு அடித்தளமிட்டுக் கொடுத்திருக்கிறோம். சிறுவர் இல்லங்களின் பணி, கஷ்டங்கள் நிறைந்தது - என்றார். (ப-49)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2004
## மாதிரி வினாத்தாள் இல. 06

வினாத்தாள் -I நேரம் 45 நிமிடங்கள்

**பக்கம் 1**

★ **பின்வரும் எண் வரிசையையும் எழுத்து வரிசையையும் நன்கு அவதானித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையச் செயலாற்றுக.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 7 | 6 | 4 | 6 | 5 | 4 | 2 |
| ப | ச | ட | ல | க | ய | ம | த | வ |

01) இரண்டாவது 6 எனும் இலக்கத்தைச் சுற்றிக் கட்டம் வரைக.
02) சரி மத்தியிலுள்ள இலக்கத்தைச் சுற்றி வட்டம் வரைக.
03) கூட்டுத்தொகை 14 ஆக வரும் 3 எண்களின் கீழ்க் கீறிடுக.

★ **பின்வரும் இரு வினாக்களிலும் இடது பக்கத்தில் உள்ள சொற்களினால் தரப்பட்டுள்ள பொருள்களிற்குப் பதிலாகப் பிரதியீடு செய்யக்கூடிய பொருளைக் காட்டும் சொல்லை வலது பக்கத்தில் உள்ள நான்கு சொற்களிலிருந்து தெரிந்து அதன்கீழ்க் கீறிடுக.**

04) சேலை :- (01) சாரம் (02) கடிகாரம் (03) சட்டை (04) பெனியன்
05) பேருந்து:- (01) விமானம் (02) கப்பல் (03) கார் (04) சாரதி

★ **சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

06) நகைச்சுவையுடன் கவிதை பாடுபவன்
(1) நாடகக்காரன் (2) வல்லவன்
(3) விகடகவி (4) கவிஞன்
07) நிலக்கீழ்ப் பாதை,
(1) அரங்கம் (2) சுரங்கம் (3) பள்ளத்தாக்கு (4) ஒழுங்கை

★ **படம் தொடர்பான சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

08) 

அருகேயுள்ள உருக்கள் காட்டுவது இரு பிள்ளைகள் வானத்தில் பட்டம் விடும் இரு சந்தர்ப்பங்களாகும். இவ்வுருக்கள் காட்டும் இரு சந்தர்ப்பங்களிலும்,
(1) A மட்டும் சரியாகும் (2) B மட்டும் சரியாகும்
(3) Aயும் Bயும் சரியாகும் (3) Aயும் Bயும் பிழையாகும்

09) 


அருகேயுள்ள உருவில் ஒரு மேசை மீது வைக்கப்பட்டுள்ள ஒரு விளக்கும் சிறிய பெட்டியும் காணப்படுகிறது. இவ்வுருக்கள் காட்டும் இரு சந்தர்ப்பங்களிலும்,
(1) A மட்டும் சரியாகும் (2) B மட்டும் சரியாகும்
(3) Aயும் Bயும் சரியாகும் (4) Aயும் Bயும் பிழையாகும்

**பக்கம் 2**

★ **பின்வரும் இரு வினாக்களிலும் இரு பகுதிகளும் சமனாயுள்ள வரிசையைத் தெரிந்து அதற்கு எதிரே (✓) அடையாளத்தையும் சமனற்ற வரிசையைத் தெரிந்து அதற்கு எதிரே (✗) அடையாளத்தையும் இடுக.**

10) ணவயபஅஇசன = ணவயபஅஇசள (..............)
11) KUHTNGMRS=KUHTNGMRS (..............)


★ **பின்வரும் வரைபு காட்டுவது 100m ஓட்டப்போட்டியில் போட்டியாளர்கள் நால்வர் ஓடிமுடிக்க எடுத்த நேரங்களாகும். அதற்கமையக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**





12) இப்போட்டியில் வெற்றியீட்டியவர் யார்? ........................
13) இப்போட்டியில் கடைசியாக வந்தவர் யார்?
........................................

★ **பின்வருவன ஒரு நிகழ்வு பற்றிய விவரங்கள் ஆகும். அந்த நிகழ்வு பற்றிய விவரங்கள் பூரணமாக விளங்கக் கூடியவாறு 14-17 வரை தரப்பட்டுள்ள வினாக்களில் மூன்று சொற்களுள் மிகவும் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிக.**

14) கமல் ஒரு மரத்தை வெட்டுவதற்கு,
(1) பேனா (2) கோடரி (3) மண்வெட்டி
15) ஒன்றை எடுத்துக்கொண்டு வீதியில் சென்றுகொண்டிருந்தான். அவன்
(1) ஆறு (2) வேலி (3) பாதை
16) நெடுகிலும் சிறிது தூரம் சென்றுகொண்டிருக்கும் பொழுது, காலுக்குள்
(1) பாம்பு (2) யானை (3) மீன்
17) மிதிபட்டது. அது கமலின் காலைக் கடித்தபோது அவன் மிகவும் அஞ்சிக் கூச்சலிட்டவாறு மீண்டும் வீட்டை நோக்கி
(1) நடனமாடி வந்தான் (2) ஓடி வந்தான்
(3) நீந்தி வந்தான்

18) 


19) 


**பக்கம் 3**

★ **20, 21, 22 ஆகிய வினாக்களின் புள்ளிக்கோட்டை நிரப்புவதற்குரிய சொலலை அதன்கீழ்த் தரப்பட்ட நான்கு சொற்களிலிருந்து தெரிந்து எடுத்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

20) நாம் தேவையான பொருள்களை.............................. வாங்குகின்றோம்
(1) வீதியில் (2) தோட்டத்தில் (3) ஊரில் (4) கடையில்
21) மழை, வெயில் என்பனவற்றிலிருந்து நம்மைக் காப்பாற்ற .................... உபயோகிக்கின்றோம்.
(1) தொப்பி (2) குடை (3) பொலித்தீன் (4) செருப்பு
22) எக்கருமத்தையும் மனத்துணிவுடன் முயன்று செய்தால் ........................அடைவோம்.
(1) களைப்பு (2) முயற்சி (3) புகழ்ச்சி (4) வெற்றி

★ **23, 24 ஆகிய வினாக்களின் ஆரம்பத்தில் கூறப்படும் வாக்கியத்தை நன்கு விவரிக்கின்ற விடையைத் தெரிக.**

23) மாணவர்கள் புள்ளிக்கோட்டின் மீது விடை எழுதிக் கொண்டிருந்தார்கள்.
(1) புள்ளிக்கோட்டின் மீது எழுதுவது கடினமானது
(2) புள்ளிக்கோட்டின் மீது எழுதுவது இலகுவானது
(3) புள்ளிக்கோட்டில் விடை எழுதும்படி கேட்கப்பட்டது
(4) வேறு கோடுகளில் மாணவர்களுக்கு விடை எழுதத் தெரியாது
24) கம்சாவின் பரத நாடடிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது.
(1) கம்சா கஷ்ரமான செயலைச் செய்தாள்
(2) கம்சா அழகான செயலைச் செய்தாள்
(3) கம்சா இலகுவான செயலைச் செய்தாள்
(4) கம்சா திறமையான செயலைச் செய்தாள்

★ **புள்ளடியில் சரியான விடையை எழுதுக.**

25) LMN MLN. எனின், JKL ........................
26) ABC BCD எனின், MNO ........................

★ **பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

27) துறைமுகம்
(1) மீன்பிடி நிலையம் (2) பாலம் அமைந்துள்ள இடம்
(3) கப்பல்கள் நிறுத்தப்படும் இடம்
(4) ஆறு கடலுடன் கலக்கும் இடம்
28) தந்திரதாரி
(1) பிறரைப் பொய்கூறி ஏமாற்றுபவர்
(2) படகில் பயணம் செய்பவர்
(3) நம்பிக்கையாக வேலை செய்பவர்
(4) பிறருக்கு உதவி செய்பவர்

**பக்கம் 4**

★ **மிகவும் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

29) கமல் மிகப் பெரியதொரு மாளிகையில் வசிக்கிறான். அவனுக்கு அதிகமான வாகனங்களும், தோட்டங்களும் உள்ளன. ஆயினும், அவன் யாருக்கும் உதவி செய்யமாட்டான். பிச்சைக்காரன் வந்தபோதிலும் இரக்கமின்றி அடித்து விரட்டுவான். அவனைக் குறிப்பிட மிகவும் பொருத்தமான சொல்,
(1) ஏழை (2) சோம்பேறி (3) திறமைசாலி (4) உலோபி
30) ஆனந்தன், தன் பெற்றோரின் அனைத்துச் சொத்துக்களையும் அவனுடைய ஏனைய சகோதர, சகோதரியருக்கு வழங்காமல் தான் மட்டும் பெற்றுக்கொண்டான். அவனைக் குறிப்பிட மிகவும் பொருத்தமான சொல்,
(1) சாது (2) சுயநலவாதி (3) சுகதேகி (4) அறிவாளி

★ **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

31) நாம் நாயை வீடுகளில் வளர்ப்பது
(1) நாய் நன்றியுள்ள மிருகம் என்பதனால்
(2) நாய் காட்டில் வாழமுடியாது என்பதால்
(3) நாய் வீட்டைக் காக்கும் என்பதால்
32) நாம் பாடசாலைகளில் கல்வி கற்பதற்குக் காரணம்
(1) எல்லோரும் கல்வி கற்பதனால்
(2) பாடசாலைகள் கட்டியிருப்பதால்
(3) அறிவை வளர்ப்பதற்காக
33) சிறுவர்கள் தொலைக்காட்சியில் கார்ட்டூன் படங்களையே அதிகம் பார்த்து இரசிக்கின்றார்கள். இதற்குக் காரணம்
(1) கார்ட்டூன் படத்தின் மீதுள்ள விருப்பமாக இருக்கலாம்
(2) பார்ப்பதற்கு வேறு படங்கள் இல்லாமையால்
(3) சிறுவர்களுக்கு வேறு பொழுதுபோக்கு இல்லாமையால்
34) வழமைக்கு மாறாக அதிகமான பிரயாணிகள் பஸ் நிலையத்தில் நிற்கின்றார்கள். இதற்குக் காரணம்,
(1) சுற்றுலாக் காலமாக இருக்கலாம்
(2) பஸ் நிலையத் திறப்புவிழாவாக இருக்கலாம்
(3) நீண்ட நேரமாகப் பஸ் நிலையத்திற்குப் பஸ்கள் வராமை.
35) ஏதேனும் வைபவம் ஒன்றின்போது முதலில் வரவேற்புரையும் கடைசியில் நன்றியுரையும் வழங்கப்படுகின்றன. இதற்குக் காரணம்,
(1) ஒவ்வொரு வைபவத்திலும் அது வழக்கமாக இருப்பதால்
(2) பிரதம அதிதிகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக
(3) வைபவத்தை விரைவாக நிறைவு செய்வதற்காக


★ **பின்வரும் வாக்கியத்தில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக் கொண்ட சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.**

36) மாணவர்களின் **எதிர்காலம்** ஆசிரியர்களின் **ஆற்றலில்** தங்கியுள்ளது.
(1) முந்திய காலம், உழைப்பு (2) முன்னேற்றம், பலம்
(3) வருங்காலம், திறமை (4) அபிவிருத்தி, ஆசை


**பக்கம் 5**

37) என்னிடம் சில மாபிள்கள்
தவிர ஏனையவை சிவப்பு
யவை பச்சை. இரண்டைத்த
எத்தனை மாபிள்கள் உள்
(1) 2 (2) 3


★ **சரியான விடையின் கீழ்க் கீ**


38) 

படத்தில் காட்டியவாறு புள்ளிக்
துண்டு வெட்டி எடுத்தபின் விரி
கீழ்க்கோடிடுக.




★ **39, 40 ஆகிய வினாக்களில்
அல்லது பொருளோடு மிக நெரு
ஏனைய மூன்று படங்களிலும்
இலக்கத்தை அடைப்புக்குள் எ**

39) 


40) 


**பக்கம் 6**

**வினாத்தாள் -II**

**01) கீழ்வரும் பாடலை வாசித்
களுக்கு விடை எழுதுக.**

மீனினம் ஓடிப்பரக்குதம்மா
வெள்ளி ஓடமொன்
வானும் கடலாக மாறுதம
மாட்சியிலுள்ளம் மூ
அம்புயம் வாடித் தளர்ந்த
ஆம்பலும் கண்டு க
இம்பருலகின் இயல்பிதம்
கின்னார் இனியாருப்

01) இப்பாடல் காட்சியினை எ
..............................
02) இங்கு மீனினம் என எதல
..............................
03) கவிஞர் வெள்ளி ஓடம் எ
..............................
04) கடலுக்கு ஒப்பாகக் கூறப்
..............................
05) இந்தப் பொழுதினில் மகிழ்
குறிப்பிடுகின்றார்.
..............................

★ **ஒத்த கருத்துள்ள சொல்**
06) அம்புயம்........................
★ **எதிர்க்கருத்துள்ள சொல்**
08) வாட்டம்........................
★ **பாடலிலுள்ள வினை எச்ச**
10) ........................
★ **பிரித்தெழுதுக.**
12) மீனினம்........................
★ **ஆங்கிலச் சொல்லை எழு**
14) வானம் ........................
16) அம்மா ........................

**02) சரியான விடையின் கீழ்க்**


01) இலங்கையின் தேசிய ம
(1) தென்னைமரம் (2)
02) கொடியாக வளரும் ஒரு
(1) கோப்பி (2) அன்
03) கசப்பான உருசியையுடை
தாவரம்
(1) வேம்பு (2) கொய்
04) எமது வீட்டுச் சுற்றாடலி
செடி வகை.
(1) பலா (2) மா

மாபிள்கள் உள்ளன. அதில் இரண்டைத்
வ சிவப்பு நிறம். இரண்டைத் தவிர ஏனை
ரண்டைத்தவிர ஏனையவை நீலம். என்னிடம்
ர்கள் உள்ளன?
2) 3 (3) 5 (4) 6

ன் கீழ்க் கீறிடுக.



று புள்ளிக்கோட்டின் வழியே மடித்து வட்டத்
ந்தபின் விரித்தால் தோன்றும் உருவத்தின்




னாக்களில் முதலில் தரப்பட்ட படத்தோடு
டு மிக நெருங்கிய தொடர்புடைய படத்தை
ங்களிலிலும் இருந்து தெரிந்தெடுத்து அதன்
ப்புக்குள் எழுதுக.





(...................)





(...................)

**1மணி 15 நிமிடங்கள்**

**ல வாசித்து 1 முதல் 17 வரையான வினாக்**
**துக.**

க்குதம்மா - ஊடே
மொன் செல்லுதம்மா
மாறுதம்மா - இந்த
ள்ளம் மூழ்குதம்மா
தளர்ந்ததம்மா - அயல்
கண்டு களிக்குதம்மா
பல்பிதம்மா - மதிக்
இனியாரும் உண்டோ அம்மா!

யினை எந்தப் பொழுதில் காணலாம்?
..............................................
என எதனைக் குறிப்பிடப்படுகின்றது?
..............................................
ஓடம் என்று எதனைக் கூறுகின்றார்?
..............................................
க் கூறப்படுவது எது?
..............................................
ரில் மகிழ்ச்சியடைவது எது எனக் கவிஞர்
..............................................

**ா சொல் எழுதுக.**
.......... 07) உள்ளம்..........................
**ா சொல் எழுதுக.**
.......... 09) வானம்..........................
**ன எச்சங்கள்**
... 11) ..........................
.......... 13) ஓடமொன்று..........................
**லை எழுதுக.**
.......... 15) கடல்..........................
.......... 17) மதி..........................

**ன் கீழ்க் கீறிடுக.**
தசிய மரமாகக் கருதப்படுவது
2 (2) நாகமரம் (3) பலாமரம் (4) மாமரம்
ம் ஒரு தாவரம்,
) அன்னாசி (3) பூசணி (4) அகத்தி
யையுடைய இலைகளைக் கொண்ட ஒரு
) கொய்யா (3) மா (4) நெல்லி
றாடலில் பெருமளவு காணப்படும் ஒரு
) மா (3) குப்பைமேனி (4) கொய்யா

**பக்கம் 7**

**03) அபிநயன் தரம் 5இல் கல்வி கற்கின்றான். அவனது தகப்பனார் வீட்டிற்குத் தேவையான பொருள்களைக் கடையில் வாங்கி வந்தார். அவர் வாங்கிய பொருள்களும் அவற்றின் அளவும் கீழே தரப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

| | |
|---|---|
| காற்சட்டைத்துணி | 2½ மீற்றர் |
| தேங்காய் | 8 |
| மின்கலம் | 3 சோடி |
| தீப்பெட்டி | 1 டசின் |
| சீனி | 3 கிலோக்கிராம் |
| அரிசி | 8½ கிலோக்கிராம் |
| தேங்காயெண்ணெய் | 1 போத்தல் |

01) அவர் வாங்கிய சீனியினதும் அரிசியினதும் மொத்த அளவைக் கிராமில் எழுதுக? .............................. கிராம்

02) காற்சட்டைத்துணி வாங்குவதற்கு 350 ரூபாவைக் கொடுத்திருந்தால் 1m துணியின் விலை யாது?
....................ரூபா ..............சதம்

03) ஒரு சோடி மின்கலத்தின் விலை 32 ரூபா [illegible]. அவர் வாங்கிய மின்கலங்களின் மொத்தப் பெறுமதி[illegible], [illegible]ங்காய்களின் மொத்தப் பெறுமதியும் சமனாக இருந்தன. இதன்படி 6 தேங்காய்களின் விலை?
....................ரூபா ..........சதம்

04) ஒரு தீப்பெட்டி 2 ரூபா 50 சதமாகும். அவர் வாங்கிய தீப்பெட்டிகளின் பெறுமதி எவ்வளவு?
....................ரூபா ..........சதம்

05) 1 லீற்றர் தேங்காயெண்ணையின் விலை ரூபா 40 ஆகும். அவர் வாங்கிய [illegible]ின் விலை என்ன?
....................ரூபா ..........சதம்

06) அவர் வாங்கிய சீனியினை அபிநயன் 12 சிறிய போத்தல்களில் சமமாக அடைத்து வைத்தான். அதன்படி 1 போத்தலில் உள்ள சீனியின் அளவு யாது? ..............................

07) அவர் வாங்கிய அரிசியினை 10 நாள்களுக்குச் சமமாகப் பயன்படுத்தலாம். 1 கிலோகிராம் அரிசியின் விலை 36 ரூபா எனில், ஒரு நாளுக்குச் செலவாகும் அரிசியின் பெறுமதி யாது? ....................ரூபா ..........சதம்

08) அவர் வாங்கிய சீனியின் மொத்தவிலை 105 ரூபா ஆகும். அவர் 50 கிலோக்கிராம் சீனியை வாங்கியிருந்தால் எவ்வளவு பணம் கொடுத்திருப்பார்? அதனைச் சொற்களில் எழுதுக?
..............................................................................

**★ அவர் வாங்கிய பொருள்களின் அலகுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை குறியீட்டில் எழுதுக.**

09) கிலோகிராம் .................... 10) மீற்றர் ................

**பக்கம் 8**

**04) கீழ் உள்ள வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் எழுதுக.**


01) தாவரங்களின் கதிர்கள், காய்கள் என்பவற்றை வலை, பொலித்தீன் என்பவற்றால் மறைத்து வைப்பதன் மூலம் பூச்சிகளிலிருந்து காப்பாற்றலாம். (..............)
02) சில பூச்சிகளிற்குச் சிறகுகள் இல்லாதிருக்கும். (..............)
03) வீட்டுத தோட்டத்திற்கு வரும் பூச்சிகள் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுவதில்லை. (..............)
04) செம்பு நடனம் கிராமத்துடன் தொடர்புடைய நடனமாகும். (..............)
05) சித்திரைப் புதுவருடத்தில் மருத்துநீர் வைத்து நீராடுதல் முஸ்லிம்களின் சமயக்கடமையாகும். (..............)
06) திராட்சை, கொடித்தோடை ஆகியன கவ்வாத்துச் செய்யப்படும் கொடிகளாகும். (..............)


**05) தொடர்புபடுத்துக**

| | | |
|---|---|---|
| 01) | தேயிலைச்செடி | பற்சில்லு |
| 02) | மேசன்மார் | எரிபொருள் |
| 03) | துவிச்சக்கரவண்டி | கவ்வாத்து |
| 04) | கனிய எண்ணெய் | மின் உற்பத்தி |
| 05) | காற்றுவலு | தூக்குக்குண்டு |


**06) சரியான விடைகளைக் கணித்து எழுதுக?**

01)  இந்தக் கிளையில் உள்ள இலைகளைப் போல் சமமான 12 கிளைகளில் உள்ள இலைகளின் எண்ணிக்கை யாது? ........................

02)  இவ்வுருவில் எத்தனை செங்கோணங்கள் உள்ளன? ........................

03) 

இங்கு நிழற்றப்பட்ட பகுதிகள் இரண்டினதும் பெறுமதியை தசம எண்ணில் எழுதுக? ........................



04)  இதில் செங்கோணமுள்ள முக்கோணிகள் எத்தனை உள்ளன? ........................

05) 

இக்கடிகாரம் காட்டும் நேரத்தினைச் சாதாரண நேரமாக எழுதுக?..............................

**பக்கம் 9**

**07) பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.**

(1)  (2)  (3) 

.............................. .............................. ..............................

(4)  (5) 

.............................. ..............................

**08) பின்வரும் அட்டவணையில் முதலாவது நிரையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொன்றையும் உட்கொள்வதன்மூலம் அதிகமாகப் பெறக்கூடிய ஓர் உணவுச் சத்து எதுவென்பதை உரிய கூட்டிலே "✓" அடையாளத்தை இட்டுக் குறிப்பிடுக. (உமது வசதிக்காக முதலாவது வரிசை பூரணப்படுத்தப்பட்டுள்ளது)**


| உணவுக்காக எடுக்கும் பொருள்கள் | புரதம் | மாப்பொருள் | கொழுப்பு | விற்றமின் |
|---|---|---|---|---|
| உ+ம் அரிசிச்சோறு | | ✓ | | |
| 1) இறைச்சி | | | | |
| 2) மாஜரீன் | | | | |
| 3) கருவாடு | | | | |
| 4) மரவள்ளிக் கிழங்கு | | | | |
| 5) வல்லாரை | | | | |

**09) கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

**(வேர், கிளை, பூ, வித்து, இலை)**

01) சதைகரைச்சான் எனும் தாவரததில் .................... மூலம் இனப்பெருக்கம் செய்துகொள்ளமுடியும்.
02) குரக்கன், சோளம் எனும் தாவரங்களில் .......................... மூலம் இனப்பெருக்கம் செய்துகொள்ளமுடியும்.
03) மரவள்ளி, குரோட்டன் எனும் தாவரங்களில் .................... நடுவதன் மூலம் இனப்பெருக்கம் செய்துகொள்ளமுடியும்.

**பக்கம் 10**

**10)** 


**அருகில் காணப்படுவது ஒரு மனித உருவாகும். அதில் அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ள பகுதிகளின் பெயர்களை ஆங்கிலத்தில் (ஆங்கில எழுத்தில்) குறிப்பிடுக.**

01) .............................. 02) ..............................
03) .............................. 04) ..............................

**11) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் (✓) என்றும், பிழையாயின் (✗) என்றும் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளமிடுக.**

01) பாதையைக் கடக்கும் போது மஞ்சள் நிறக்கோடுகள் உள்ள இடங்களினால் கடக்கவேண்டும். (..............)
02) பாதையில், வாகனங்கள் தமது வலதுபக்கத்தினால் பயணஞ் செய்யவேண்டும். (..............)
03) ஒரு வீதிச் சமிக்ஞை விளக்கில் "பச்சை நிறத்தினால்" கருதப்படுவது, "நிறுத்துங்கள்" என்பதாகும். (..............)
04) இலங்கையிலிருந்து எந்தவொரு நாட்டிற்கும் கப்பல் மூலம் பயணம் செய்யலாம். (..............)

**12) பின்வருவனவற்றின் தமிழ்ச் சொல்லை எழுதுக.**

01) CHAIR.................... 02) BOOKS ..............................
03) TABLE.................... 04) BLACK BOARD..........................
05) CLOTH.................... 06) BOTTLES..............................

**13) 'அம்மா' என்பதைச் சிங்களச் சொல்லில் எழுதுக?**
..............................

**14) 'எனக்குச் சிறகு முளைத்தால்......' எனுந் தலைப்பின் கீழ் ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

01) ..............................................................................
..............................................................................
02) ..............................................................................
..............................................................................
03) ..............................................................................
..............................................................................
04) ..............................................................................
..............................................................................
05) ..............................................................................
..............................................................................
06) ..............................................................................
..............................................................................

**தயாரிப்பு:**
**ஆசிரியர் வேலுப்பிள்ளை அன்பழகன்.**

"ரோயல்" கெடஸ்ரிஸின் சிறந்த தயாரிப்பு

சுத்தமான ஒலிவ் ஒயில் வாங்கிவிட்டீர்களா?

★ உங்கள் சருமத்தை மினு மினுப்பாக்கி மேனியைக் கவர்ச்சியுடையதாக மாற்றுகின்றது.

தோலில் வரும் வியாதிகளுக்கு சிறந்த ஔஷதம்

PRODUCT OF SPAIN

ROYAL 100% சுத்தமான ஒலிவ் ஒயில் OLIVE OIL

PACKED BY: ROYAL Industries Colombo - 12

☎ : 0112334603

(35309)



ஏக விநியோகஸ்தர்கள்:-

சிவா நறுமணப்பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

☎ : 021 222 2567


# நாளாந்தம் பயன்படுத்தும் வீதியில் மிதிவெடி மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை28

இருபாலை, பழம் வீதியில் உள்ள ஜெய பாரதி ஒழுங்கையில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தினர் நேற்று முன்தினம் மிதிவெடி ஒன்றை அங்கு மீட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களால் அன்றாடம் பயன்படுத்தப்படும் இடத்திலேயே இந்த மிதிவெடி மீட்கப்பட்டுள்ளது.

எனவே பூரணமாக அப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்படும் வரை மக்கள் அந்தப் பாதையைப் பாவிக்க வேண்டாம் என்றும் -

விரைவில் அப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் அச்சமின்றி போக்குவரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் -

'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (10)

# இளைஞர் சுட்டுக்கொலை!

கொழும்பு,ஜூலை28

கொழும்பு பெரலஸ்கமுவ பகுதியில் பட்டப் பகலில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்றது

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனம் தெரியாத துப்பாக்கிதாரிகளே வீதியில் சென்று கொண்டிருந்த இளைஞர்மீது துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

பொரலஸ்கமுவ பௌத்த விகாரைக்கு முன்பாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாதாள உலக நபர்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதலே இந்தக் கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இந்தக் கொலை தொடர்பாக மேலதிக தகவல்தர பொரலஸ்கமுவ பொலீஸார் மறுத்து விட்டனர். விசாரணை முடியும்வரை தமக்கு எதுவும் கூறமுடியாது என அவர்கள் தெரிவித்தனர்.

# கணனிப் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள்

தென்மராட்சி,ஜூலை28

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மனித வளப் பிரிவின் அனுசரணையுடன் கடந்த வருடம் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கணனிப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு சித்திபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் பிரதேச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

கணனிப் பயிற்சிபெற்ற இரண்டு தொகுதிகளைச் சேர்ந்த பயிலுநர்கள் தமது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (8-117)

# 'அன்பினில் விளைந்த' ஆற்றுகை இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி நுண்கலைமன்ற அரங்கவியல் மாணவர்களின் 'அன்பினில் விளைந்த' எனும் நாடகம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

இதனை எழுதி நெறியாள்கை செய்தவர் கல்லூரி ஆசிரிய கல்வியியலாளர் க.இ.கமலநாதன்.

இந்த நாடகம் அரங்கவியல் மாணவர்களின் ஆறாவது ஆற்றுகைத் தொடர் என்பது குறிப்பிடத் தக்கது. (4)

# வரணியில் மாடுகளுக்கு கால்வாய் நோய்

வரணி ஜூலை28

வரணிப் பிரதேசத்தில் கால்நடைகளுக்குக் கால்வாய் நோய் பரவியுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கால்நடை உத்தியோகத்தர் காரியாலயத்தின் அனுசரணையுடன் இங்கு பல இடங்களிலும் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

மாசேரி, இடைக்குறிச்சி, வரணி வடக்கு ஆகிய இடங்களில் கடந்த வாரம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-170)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

தாயின் மடியில் 16 - 03 - 1973

இறைவன் அடியில் 28 - 06 - 2004



**செல்வி சூசைப்பிள்ளை நேசமலர்** (தங்கராணி)

(முன்னாள் ஆசிரியை, ஸ்ரீமுருகன் முன்பள்ளி)

கற்பனைகள் பலவுடனே ~ நீ
கண்ணாக வாழ்ந்தபோதும்
கலைந்த கற்பனைகளுடன்
கடவுள் பாதம் சென்றீரே!

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (28.07.2004) புதன் கிழமை புன்னாலைக்கட்டுவன் புனித பேதுரு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அத்துடன், இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

(34532)(34-21-13-15)

நீங்காத நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

# விண்ணக வாழ்வில் முதலாம் வருடம்



**ம.ஒ. அல்வீனியஸ் அமலதாஸ்**

மலர்வு 04-04-1960

உதிர்வு 29-07-2003

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்!
நீசன் உமைக் கவர்ந்தாலும்
நீங்காதப்பா எம் பாசம்!
ஜெபிக்கின்றோம் - உம்
ஆத்மசாந்திக்காக!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (29.07.2004) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு (புனித அந்தோனியார் ஆலயம், மணற்காடு) இரங்கல் திருப்பலி இடம்பெறும். அந்நிகழ்வின் போது எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புனித அந்தோனியார் ஆலயம்,
மணற்காடு.

(34568)(34)

மனைவி,
பிள்ளைகள்,
உறவினர்கள்.

# வாழ்த்துகின்றோம்



இணுவில் மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும்,

**குணநாயகம் - தமிழ்ச்செல்வி** தம்பதிகளின் அன்பு மகனுமாகிய

**செல்வன் விஜயகுமார்**

அவர்கள் நோர்வே அரசாங்கத்தின் புலமைப் பரிசில் பெற்று M.Sc. பொறியியல் (மின்னியல், இலத்திரனியல்) படிப்பதற்காக நேபாளம் பயணமாவதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில்.

(34431)(34-21-15-13)

- நண்பர்கள்

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 - 11 - 1961

உதிர்வு 30 - 07 - 1997



(34539)(34-21-13-15)

**செல்வி மைதிலி கந்தசாமி**


திதி: ஏகாதசி 28.07.2004

ஆண்டேழு சென்றும்
ஆறவில்லை எம் துயரம்
மாண்டு நீர் சென்றாலும் மறக்கமுடியவில்லை
உன் நினைவை.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

உன் பிரிவால் வாடும்:
அம்மா, சகோதரர்கள்.


உங்கள் வாழ்நாள் முழுவதும்
நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்
பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய
உயர்ரக சுவர் / தரை ஓடுகள்




.... இன்னும் பல அளவுகளில்!

யாழ் நகரில்
பின்வரும் விற்பனை நிலையங்களில்
பெற்றுக்கொள்ளலாம்.

NEW KAMAAL CERAMICS,
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2085

JAFFNA CERAMICS,
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667

VENKE IMPEX,
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

LWL லங்கா வோல்டைல் லிமிரெட்,
215, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460/(011) 2 806450

நீடித்து நிலைக்கும் அழகுமயம்

# வவுனியாவில் கடத்தப்பட்ட லொறி நல்லூர்ப் பகுதியில் மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை28

வவுனியாவில் ஒருவருட காலத்துக்கு முன்னர் கடத்தப்பட்ட லொறியை யாழ்.பொலீஸார் நேற்றுமுன்தினம் நல்லூர்ப் பகுதியில் உள்ள வாகனத் திருத்தகம் ஒன்றிலிருந்து மீட்டனர்.

வவுனியா தோணிக்கல் என்ற இடத்தைச் சேர்ந்த ஒருவரின் லொறியை அவரது உறவினர் ஒருவர் ஒரு வருடத்திற்கு முன்னர் வாடகைக்கு அமர்த்தி எடுத்துச் சென்றார்.

அன்றிலிருந்து லொறியுடன் அவர் தலைமறைவாகியிருந்தார். இதுதொடர்பாக லொறி உரிமையாளர் வவுனியா பொலீஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார். இதுபற்றி யாழ். பொலஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறிப்பிட்ட லொறி உடற்கோப்பு மாற்றம் செய்வதற்காக யாழ். நல்லூர்ப் பகுதியில் உள்ள வாகனத் திருத்தகம் ஒன்றில் விடப்பட்டிருந்தமை பொலீஸாரின் விசாரணையில் தெரியவந்தது. இதனையடுத்து குறிப்பிட்ட வாகனத் திருத்தகத்தில் உடற்கோப்பு மாற்றம் செய்வதற்குத் தயாரான நிலையிலிருந்த லொறியை நேற்று பொலீஸார் மீட்டனர்.

இதேவேளை, இவ்வாகனத்தைப் பொலீஸார் கைப்பற்றிய போதும் அச்சம்பவத்துடன் தொடர்புடைய எவரையும் இதுவரை கைதுசெய்யவில்லை எனவும் -

சம்பந்தப்பட்ட நபரைக் கைதுசெய்வதற்குரிய நடவடிக்கைகளில் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-5)

# வலிகாமம் வலயமட்ட சஞ்சிகைப்போட்டி முடிவு

வலிகாமம்தெற்கு,ஜூலை28

தமிழ்மொழி எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் முகமாக வலிகாமம் கல்வி வலயத்தினரால் வலயமட்டத்தில் நடத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட சஞ்சிகைகள் வருமாறு:-

**பாலர் மேற்பிரிவு:** சுடர் - சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், அரும்பு - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, தென்றல் - பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

**இடைநிலைப் பிரிவு I** : மலர்கள் - கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, வசந்தம் - பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், விடியல் - உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

**இடைநிலைப்பிரிவு II** : வெண்புறா - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, சிறகு - உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, அருவி - தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

**இடைநிலைப் பிரிவு III** : விடிவு - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., சமாதான தீபம் - சங்கானை சிவப்பிரகாச வித்தி: சுபீட்சம் - குட்டியபுலம் அ.த.க. பாடசாலை.

**கல்லூரி நிலைப்பிரிவு** : சமத்துவம் - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. சுப்ரதீபம் - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சமாதானத் தேடல் - சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாசாலை.

(ஒ-152)

# இதழியல் டிப்ளோமா கற்கைநெறி ஓகஸ்ட் நடுப்பகுதியில் ஆரம்பமாகும்

தெல்லிப்பழை,ஜூலை28

யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தினால் நடத்தப்படவுள்ள இதழியல் டிப்ளோமா கற்கைநெறி எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகும் என ஊடக வளங்கள் பயிற்சி நிலைய வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

கடந்த மே மாதம் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பின்பற்றுவதற்கான மாணவர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 20 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் இப்பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான சில விசேட பயிற்சிச் செயற்றிட்டங்களும் இடம்பெறவுள்ளன. (ஜ-150)

# உள்ளூராட்சி வார இறுதிநாள் விழா வலி. தெற்கில் சனியன்று ஏற்பாடு

வலி.தெற்கு,ஜூலை28

வலிகாமம் தெற்கு - சுன்னாகம் பிரதேச சபையினால் நடத்தப்பட்டுவரும் உள்ளூராட்சி வாரத்தின் இறுதிநாள் கலைவிழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

உடுவில் உப அலுவலக திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ள இக்கலை விழாவுக்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமை வகிப்பார்.

யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பிரதேச சபையால் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகளும் விழாவின்போது வழங்கப்படும்.

வலிகாமம் தெற்குப் பிரதேச பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(ஜ-152)

# அச்சுவேலி பாடசாலை ஆசிரியரது இடமாற்ற உத்தரவு ரத்து!

## மாகாணக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரால் ஆசிரியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வித் திணைக்களம் ரத்துச் செய்திருக்கின்றது.

அச்சுவேலி மத்திய கல்லூரியில் இருந்து புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரிக்கு 01.02.2004 முதல் செயற்படும்படி யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வழங்கிய இடமாற்ற உத்தரவையே மாகாணக் கல்வித் திணைக்களம் ரத்துச் செய்திருக்கிறது.

குறிப்பிட்ட ஆசிரியர், தனது இடமாற்றம் தொடர்பாகப் பொருத்தமான காரணங்கள் காட்டப்படவில்லை என்றும், அது ஒரு பழிவாங்கல் நடவடிக்கை என்றும் ஆட்சேபித்திருந்தார். இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் அவர் முறைப்பாடு செய்திருந்தார். முறைப்பாட்டை விசாரணை செய்த மனித உரிமைகள் ஆணைக் குழு இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கடந்த 5ஆம் மாதம் கல்விப் பணிப்பாளரிடம் கேட்டிருந்தது. எனினும், ஆசிரியரது இடமாற்றத்தை ரத்துச் செய்ய வலயக் கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

குறிப்பிட்ட இடமாற்றம் தொடர்பாகப் பின்னர் மாகாணக் கல்வித் திணைக்களம் விசாரணை நடத்தியது என்று கூறப்படுகிறது. விசாரணையின் முடிவில் இந்த இடமாற்றம் பொருத்தமற்றது எனக் கண்டு அதனை ரத்துச் செய்ய அது உத்தரவிட்டிருக்கிறது.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உத்தரவுப்படி பிரஸ்தாப ஆசிரியர் தொடர்ந்தும் அச்சுவேலி மத்திய கல்லூரியிலேயே கடமை புரிய அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இது தொடர்பான உத்தரவுக் கடிதங்கள் அவருக்கும், யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர், சம்பந்தப்பட்ட இரு பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஜ)

# பெண்களுக்கான கடலகப் பயிற்சிநெறி

குருநகர்,ஜூலை.28

யாழ் கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் பெண்களுக்கான கடலகத் தொழில்நுட்பவியல் பயிற்சிநெறியைப் பயில விரும்புபவர்கள் தமது சுயவிவரங்களடங்கிய விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'இல. 372, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்' என்ற விலாசத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி மூன்று மாதங்கள் வரை வழங்கப்படும் 18-35 வயதுக்கு இடைப்பட்ட பெண்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ-51)

# வாசகர் திருமுகம்

## பூனைக்கு மணி கட்டுவது யார்?

20.07.2004 செவ்வாய்க்கிழமை 'உதயன்' நாளிதழில் "மாணவர்களைக் கொண்டு பாடசாலை மலசலகூடங்களைச் சுத்திகரிக்கலாமா"? என்ற தலைப்பில் வெளியான செய்திக்கட்டுரை தொடர்பாக ஓர் ஆசிரியர் என்ற முறையிலும் 1990 - 1992 காலப் பகுதிகளில் ஏறக்குறைய மூன்று வருடங்களில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வட்டுக்கோட்டை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரதேசத்தில் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராக (Health Visitor) கடமையாற்றிய அனுபவத்தின் அடிப்படையிலும் சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன்.

பாடசாலைக்குப் படிக்க வருகின்ற மாணவர்களை மலசல கூடச் சுத்திகரிப்பு வேலையில் ஈடுபடுத்துவதை எந்தப் பெற்றோரும் விரும்பமாட்டார்கள் என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்கமுடியாது. அதேசமயம் பாடசாலை மலசலகூடங்கள் சுத்திகரிக்கப்படாது சுகாதாரக் குறைவான நிலையில் தொற்றுநோய்களின் தோற்றுவாயாக (Source of Infection) மாறுவதையும் எந்தப் பெற்றோரும் விரும்பமாட்டார்கள் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவே, பாடசாலை மலசலகூடங்கள் கழுவப்பட்டு எப்போதும் நல்ல சுகாதாரமான முறையில் இருந்தால்தான் பாடசாலையில் மட்டும் அல்ல சமூகத்திலும் சுகாதாரம் நிலவும் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். இந்நிலையில் பாடசாலை மலசல கூடங்களைச் சுத்திகரிப்பது யார்? என்ற வினா எழுகின்றது.

1) பாடசாலை மலசலகூடங்களைக் கட்டிக்கொடுத்த அரச சார்பற்ற நிறுவனங்கள் பாடசாலை மலசலகூடப் பராமரிப்பு வேலையையும் மேற்கொள்ளவேண்டும் என்ற சிந்தனை குறுகிய காலத்துக்கு மட்டுமே நன்மையைத் தரும்

2) சுத்திகரிப்புத் தொழிலாளி பாடசாலையில் கடமையில் இல்லை என்பதற்காக பாடசாலை மலசலகூடங்கள் சமூகத்தின் தொற்றுநோய்த் தோற்றுவாயாக மாறுவதுதான் யாழ். குடாநாட்டில் நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் கூடுதலாக ஏற்படுவதற்கு ஒரு காரணம் என்பதையும் நாம் மறக்கக்கூடாது.

3) இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் எந்த ஒரு சராசரி மனிதனும் "மலசல கூடச் சுத்திகரிப்புத் தொழிலாளி" என்ற பதவிப் பெயருடன் கடமையாற்ற விரும்பமாட்டான் என்பதையும் நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

4) ஆகவே,கல்வித்திணைக்களத்தினால் சுத்திகரிப்புத் தொழிலாளிகள் நியமிக்கப்படும் வரை, பாடசாலை மலசலகூடங்கள் கழுவப்படாது காத்திருப்பது 'கடல் வற்றும், கடல் வற்றும் என்று பூனை உடல் வற்றிச் செத்த' கதையாகத்தான் இருக்கும்.

5) மலம், வாய் மூலம் தொற்றுவதால் (Faeco Oral Pollution) ஏற்படும் குடல் நோய்களான வயிற்றோட்டம், வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்றுநோய்களை எமது சமூகத்தில் குறைப்பதற்கு பொது மலசலகூடங்கள் நல்ல சுகாதார முறையில் பேணப்படவேண்டும் என்பதையும் நாம் மறக்கக்கூடாது. ஆகவே -

6) சுத்திகரிப்புத் தொழிலாளி கடமையில் இல்லாத பாடசாலை மலசலகூடங்களை கழுவிச் சுகாதார நிலையை மேம்படுத்துவது யார்? அதாவது பூனைக்கு மணி கட்டுவது யார்?

GTZ நிறுவன அதிகாரிகளா? பாடசாலை அதிபரா? ஆசிரியர்களா? மாணவர்களா? பெற்றோர்களா? பாடசாலை நலன் விரும்பிகளா? கல்வி அதிகாரிகளா? சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளா? உள்ளூராட்சி அதிகாரிகளா? கடவுள்தான் விடை சொல்லவேண்டும்.

*கோப்பாய் வடக்கு.* **சு.சிவநேசராசன்.**

## பண்ணை வீதியின் முக்கியத்துவம் முதன்மைப்படுத்தப்படாதது ஏன்?

தீவகத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கில், பண்ணை வீதியின் முக்கியத்துவம் இன்றுவரை முதன்மை பெறுகின்றது. ஆனால், இந்த வீதியின் பராமரிப்பு (திருத்த வேலை) என்பது அரச அதிகாரிகள் மட்டத்தில் ஏன் முதன்மை பெறவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். அண்மைக்காலமாக பண்ணை வீதியின் இரு மருங்கிலும் உள்ள தரவைப் பகுதிகள் வீதிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மழைகாலத்தில் அவையும் கைவிடப்பட்டுவிடும். இன்று வீதியின் அவலத்தை, கண்டி வீதியூடாக வருகின்ற பெரும்பான்மையான மக்கள் நயினைத்தாயை தரிசிக்கப்போகின்றபோதும், ஏனைய தீவக மக்களும் அனுபவிக்கிறார்கள். நயினைத் தாயை மட்டுமன்றி சின்னமடு மாதாவையும் பெரும் தொகையான மக்கள் தரிக்க வருகின்றார்கள். இதனைப் போலவே சுற்றுலாப் பயணிகளின் உல்லாச இடமாக சாட்டிக் கடற்கரை விளங்குகின்றது. இவ்வாறாக தீவகத்தின் முதுகெலும்பாக விளங்கும் பண்ணை வீதியின் திருத்த வேலைகள் ஏன் முதன்மைப்படுத்தப்படவில்லை என்பது இனறு மக்கள் முன் பெரும் கேள்விக்குறியாக உள்ளது.

வீதியின் திருத்த வேலைகளுக்காகப் பறிக்கப்படுகின்ற கற்குவியல்கள் வெறும் கண் துடைப்பு வேலைக்குரிய தன்மையைக் காட்டுவதாக அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குவிக்கப்படுவதோடு, அவை வீதிகளில் பறிக்கப்படுவதால் பெரும்பான்மையானவை வாகனங்களால் சேதமாக்கப்படுகின்றன.

எனவே, மழைகாலத்திற்குமுன் தொடர்ந்தும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும், அதன் பொறுபபுவாய்ந்த அதிகாரிகளும், ஏனைய தீவகத்தைச் சேர்ந்த வீதி அபிவிருத்தி தொடர்பான அதிகாரிகளும் மௌனம் சாதிக்காது வீதியின் திருத்தவேலைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமெனத் தீவக மக்கள் சார்பாகப் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**நாரந்தனையூரான்.**

## அதிகாரிகள் கவனிப்பார்களா?

ஆசிரியர்களின் ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கமுற்பட்ட செயல் வரவேற்கவேண்டிய மனிதாபிமான நடவடிக்கையாகும். இதுதொடர்பாக உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் வழங்கிய படிவத்தை அங்கு ஒப்படைக்கும்போது அதுதொடர்பான பல பிரச்சினைகளால் படிவம் ஏற்கப்படவில்லை.

வன்செயலும், இடம்பெயர்வும் எந்தவொன்றினையும் நாம் எடுத்துச்செல்லமுடியாத நிலையை உருவாக்கியமையை அறியாதார் யார்? விலை மதிப்புடைய பொருளகளை இழந்து உயிர் தப்பி ஓடிய நாம் கடிதங்கள், காகிதங்களை எடுத்துச்செல்ல முடிந்ததா? அது சாத்தியமானதா? நினைத்துப்பார்க்கவேண்டும். ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் ஆவணங்களைக் கல்விக் கநதோரில் எடுக்கலாம். அவற்றினோடு படிவத்தினையும் கொண்டு வாருங்கள் என செயலகத்தில் கூறப்பட்டது.

முதியோரான ஓய்வுதிய ஆசிரியர்களால் இது சாத்தியமானதா? முயன்று பார்த்தவர்களையும் இயலாத நிலையில் மனக்கசப்போடும் வெறுப்போடும் இருப்பவர்களையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளல் நன்றாகும்.

முதியோரைப் பேணவேண்டும். அவர் நலன் நன்றாகவே பேணப்பட வேண்டும். என்ற வார்த்தை பரவலாகவே பேசப்படுகின்றது. அது இன்று உதட்டளவில் நிற்கின்றது. என்பதை உணரமுடிகின்றது. செயல்வடிவம் பெற நாம் முயலவேண்டாமா? ஓய்வு,தியர்களின் நலன் பேணவென ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் ஓய்வூதியர் நலன்பேணும் சங்கம் நிறுவப்பட்டுச் செயற்படுவதை நாமறிவோம்.

இத்தகைய முற்போக்கான சிந்தனையுடன் செயற்படும் செயலகங்கள் முதியோரான ஓய்வூதிய ஆசிரியர்களின் நலன் கருதி கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு உதவுவார்களா?

*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.* **ம. முத்துத்தம்பி.**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள National கறுப்பு வெள்ளை தொலைக்காட்சி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தொ.பே. 222 3838 (34593)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler பேட்டுக் குஞ்சுகள் 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi வட்டுக்கோட்டைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34323)

பிறிமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் (28-07-2004) இன்று மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P 3529, 2867, P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (34559)

தரமான Prima Broiler குஞ்சுகள் (விலை 40/-) 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது சகல கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34326)

## வீடு விற்பனைக்கு

கரணவாய் மத்தி, நவிண்டிலில் 36 பரப்புக் காணி வீட்டுடன் கூடிய பயன்தரு மரங்களும் கொண்டது விற்பனைக்குண்டு. (விவசாயப் பண்ணை, தொழிற்பேட்டை, பூங்காக்கள் அமைக்க உகந்தது) தரகர் தேவையில்லை. தொடர்பு:-077 6176527, 0777 149441.(34544)

## பணிப்பெண் தேவை

தங்கியிருந்து சமையல் வேலை செய்வதற்கு பெண் உடன் தேவை. 45 வயதிற்குட்பட்டவராகவிருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசலாம். உடன் தொடர்பு கொள்ளும் முகவரி: சி.செயரத்தினம், சின்னப்பா வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (சி-36388)

## தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள்/அண்டிய பகுதிகளில் வைத்திய சிகிச்சை நிலையம் (கிளினிக்) நடத்தக்கூடிய வீடு/அனெக்ஸ்/அறை வாடகைக்குத் தேவை. பிரதான வீதிகளில் அமைந்திருப்பது விரும்பத்தக்கது. தொடர்பு: வி.இ.2337 மே/பா உதயன். (34600)

## மணமகள் தேவை

கொழும்பில் வசிக்கும் பிரபல தொழில் அதிபர் (வயது 48) ஒருவருக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நற்குணம் கொண்ட படித்த, அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: விள.இல. 2336 மே/பா உதயன். (34565)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973, 12இல் செவ்வாய், கனடா PR உடைய மணமகனுக்கு படித்த, உயரமான, அழகிய மணமகள் தேவை. (கனடாவிலிருந்து விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.) ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். தொடர்பு: விளம்பர இல.2338.மே/பா உதயன் யாழ்ப்பாணம்.(34624)

## கடை வாடகைக்கு

யாழ்.நகரில் (Town இல்) கஸ்தூரியார் வீதியில் இல.214இல் அமைந்த நகைக் கடையொன்று வாடகைக்குண்டு. வேறு பாவனைக்கும் உகந்தது. தொடர்பு: சந்திரன் மினி சினிமா கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (34608)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மரம் நடுகை

யாழ்ப்பாணம்,ஜூலை28

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சுண்டுக்குளி சனசமூக நிலையம், ஈச்சமோட்டை சனசமூக நிலையம் ஆகியவற்றில் மரங்கள் நடும் நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மரம் நடும் விழாவில் மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் கலந்துகொண்டு மரங்களை நாட்டுவார். (8-13)

## மிதிவெடியில் சிக்கி கால் இழந்தார்

குடிசை அமைப்பதற்காக மரம்வெட்டச்சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார். உரும்பிராய் சிவகுலவீதிப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற சம்பவத்தில் உரும்பிராய் செல்வபுரத்தைச் சேர்ந்தவரான செல்லர் சதானந்தசோதி (வயது 40) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(10-15)


**COMPUTER TYPING**

தட்டெழுத்து. சுருக்கெழுத்து ஆங்கிலம்.
MS Office, Page Maker,
Corel Draw, Photo Shop
**STCA** (Estd. in 1977)
149(37), சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில்)
(34623) கிளை நிறுவனங்கள் இல்லை. (24-21-13-19)


## 'ஆனந்தபுரம்' பகுதி மக்களுடன் கலந்துரையாடல்

கோண்டாவில்,ஜூலை28

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இருபாலை ஆனந்தபுரம் பகுதி மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றி கோப்பாய் பிரதேச தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் அப்பகுதி மக்களுடன கலந்துரையாடிக் கேட்டறிந்தனர்.

'ஆனந்தபுரம்' பகுதி மக்கள் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகளில் கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களில் மிகவும் பின்தங்கிய நிலை காணப்படுவதாகவும், அப்பிரதேசத்தில் உள்ள வீதிகள் துவிச்சக்கர வண்டியில் செல்வதற்குக் கூட ஏற்றவையாக இல்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச மக்களுடைய வாழ்க்கைத் திறனை மேம்படுத்துவதற்கு மாணவர் ஒன்றியத்தினர் உதவி வருவதோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுள்ளனர். (ஐ)


## மூன்றாவது பிறந்ததின வாழ்த்து

28.07.2004

செல்வன்
சிவகாந்தன் திலக்ஷிகன்
(திலக்)

இல. 14, விதானையார் வீதி, சுண்டிக்குளியைச் சேர்ந்த
சிவகாந்தன் - சுலோஜனா தம்பதிகளின்
செல்வப்புதல்வன்

செல்வன்
திலக்ஷிகன்



இன்று 28.07.2004 புதன்கிழமை தனது மூன்றாவது
பிறந்ததினத்தை தமது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, கிருபன் மாமா, சுதா அத்தை (ஜேர்மன்), ரூபன் மாமா, கார்த்திகா அத்தை (ஜேர்மன்), குகன் மாமா, குமார் மாமா, சுகி அத்தை, வரன் மாமா, சுதா அத்தை (சுவிஸ்), சுவந்தி அத்தை மற்றும் மச்சான்மார்களான பௌசிகன், சுருதிகன், அபிறதன் (ஜேர்மன்), மிதுஷன் (ஜேர்மன்) கௌதமன் (சுவிஸ்), மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும். ஈச்சமோட்டை கலட்டிபுலம் ஞான வைரவர் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

14, விதானையார் வீதி,
சுண்டிக்குளி.

(34596)

தகவல்:
பரஞ்சுகன் (மாமா)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு : 07 ◈ 09 ◈ 1921
உதிர்வு : 09 ◈ 08 ◈ 2003

அமரர்
மு.தா. திருநாவுக்கரசு

(முன்னாள் பிரபல வர்த்தகர், முன்னாள் இராஜேந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்,
முன்னாள் அறங்காவல் சபைத்தலைவர், யாழ் வண்ணை கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் ஆலயம்)


திதி: 28.07.2004

ஆண்டொன்று ஆனதோ பாசமுள்ள எம் தலைவன்
அன்பு முகம் காணாமல், காலமெல்லாம் அன்பாலே
அரவணைத்து எமக்காக வாழ்ந்து நின்ற உத்தமரே,
போதுமென்றோ இவ்வுலக வாழ்வை நீத்தீர்கள்,
கண்ணிறைந்த கணவனாக, பாசமுள்ள அப்பாவாக,
மதிப்புள்ள மாமாவாக, செல்லப் பேரனாக, நாங்கள்
நல்வாழ்வு வாழ வழிவகுத்த தெய்வமே, எங்கள்
உயிர் இருக்கும்வரை எம் இதயங்களில் அணையாத
தீபமாக விளங்கும் அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:தி. இராஜேந்திரன் (மகன்)
இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்
192, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(34592)

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்
201, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்



தெற்காசியாவில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை பலமடங்காக அதிகரித்துள்ளது. பங்களாதேஷில் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்தவரின் சடலங்களை மீட்ட மீட்புப் பணியாளர்கள் அவற்றை வாகனம் ஒன்றில் அடுக்கி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# கடத்திய இந்தியர்களைக் கொலை செய்யமாட்டோம்!

## காலக்கெடுவை நீடித்துத் தீவிரவாதிகள் அறிவிப்பு

பக்தாத்,ஜூலை28

கடத்திச் செல்லப்பட்ட இந்தியர்களைக் கொல்லமாட்டோம் என்று தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். கெடுவையும் அவர்கள் நீடித்துள்ளனர்.

ஈராக்கில் உள்ள ஒரு குவைத் போக்குவரத்து கம்பனியில் லொறிச்சாரதிகளாக வேலை பார்த்த இந்தியாவைச் சேர்ந்த அந்தர்யாமி, திலக்ராஜ், சுக்தேவ் சிங் ஆகியோரையும், 3 எகிபதியர்களையும், கென்யா நாட்டுக்காரர் ஒருவரையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டனர்.

அமெரிக்கா மற்றும் குவைத் சிறைகளில் உள்ள ஈராக்கியர்களை விடுதலை செய்ய வேண்டும், அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்க வேணடும், அவர்கள் வேலை பார்த்த குவைத் நிறுவனம் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும் ஆகிய கோரிக்கைகளைக் கறுப்புக் கொடிகள் என்ற பெயருடைய அந்தத் தீவிரவாதிகள் இயக்கம் முன்வைத்துள்ளது.

கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால், 72 மணி நேரத்துக்கு ஒருவர் வீதம் 7 பணயக் கைதிகளையும் தலையைத் துண்டித்துக் கொலை செய்துவிடுவதாக அந்தத் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். இதற்காக தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் இரவு 8 மணி வரை கெடு விதித்து இருந்தனர். தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ள 3 இந்தியர்களையும் மீட்க மத்திய அரசு தொடர்ந்து முயன்று வருகிறது. அவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இ.அகமது உருக்கமான வேண்டுகோள் விடுத்தார். இது குவைத், ஓமான் மற்றும் வளைகுடா நாட்டுத் தொலைக்காட்சிகள் மூலம் ஒளிபரப்பப்பட்டது.

இந்த நிலையில், இந்தப் பிரச்சினையில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டுள்ளது. கடத்தப்பட்ட இந்தியர்கள் உட்பட 7 பேர்களையும் கொல்ல மாட்டோம் என்று தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். பேச்சுக்களை நடத்துவதற்கு வசதியாக இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாகத் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

குவைத் நிறுவனம் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும் என்பதைத் தீவிரவாதிகள் மீண்டும் வலியுறுத்தினர். மேலும், முஸ்லிம் மதத் தலைவர்களைத் தாக்கக்கூடாது என்று அவர்கள் இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். அவர்கள் குறிப்பிடும் தலைவர்கள் யார் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.

இது தொடர்பாகப் புதிய வீடியோ பிரதி ஒன்றை தீவிரவாதிகள் இயக்கம் செய்தி நிறுவனங்களுக்கு நேற்றுமுன்தினம் வழங்கியது.

முகமூடி அணிந்த ஒரு தீவிரவாதி அறிக்கை வாசிப்பது அந்த வீடியோ பிரதியில் இடம்பெற்றிருந்தது. அவரது இரு புறங்களிலும் ஆயுதம் ஏந்திய முகமூடி அணிந்திருந்த 2 தீவிரவாதிகள் நின்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்னால் பணயக் கைதிகள் 7 பேரும் அமர்ந்து இருந்தனர். இந்த வீடியோப் பிரதி அரபு தொலைக்காட்சி நிறுவனங்களான அல்-ஜெஸீரா, அல்-அரபியா ஆகியவற்றில் ஒளிபரப்பப்பட்டன. (8)

## பாக். உளவாளி டில்லியில் கைது

புதுடில்லி,ஜூலை28

டில்லியில் உளவு வேலை பார்த்ததாக பாகிஸ்தானைச் சேர்ந்த குலாம் முஸ்தபாவை பொலீஸார் கைதுசெய்தனர்.

கிழக்கு டில்லியின் லஷ்மி நகர்ப் பகுதியில கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டார் அவர்.

அவரிடமிருந்து பாதுகாப்புத்துறை தொடர்பாக ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். சில காலமாகவே டில்லியில் தங்கியிருந்து பாதுகாப்புத்துறை தொடர்பான தகவல்களை இரகசியமாகத் திரட்டி, ஆவணங்களைத் தயார்செய்து வைத்திருந்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (8)

### வன்முறைகளுக்கு முடிவுகட்ட

# சூடானுக்கு எச்சரிக்கை விடுக்குமாறு ஐ.நா. சபையிடம் நாடுகள் கோரிக்கை

வாஷிங்ரன்,ஜூலை28

சூடான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதற்கான எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஐ.நா. சபையிடம் கோரியுள்ளன.

சூடானின் தர்பேர் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள வன்முறைகள் தொடர்பாகவே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்படவேண்டும் என ஐரோப்பிய நாடுகள் கூறியுள்ளன.

வன்முறைகள் புரிந்துவரும் ஆயுத கிளர்ச்சியாளர்களையும் அவர்களின் ஆதரவாளர்களையும் தடைசெய்வதற்கான தீர்மானம் ஒன்றை பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா தாக்கல் செய்துள்ள தீர்மானம் தற்பொழுது விவாதிக்கப்பட்டு வருகின்றது.

வன்முறை புரியும் கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்தாவிடில் சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 25 அமைச்சர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலக அரங்கில்**

கடந்த ஆண்டு சூடானின் தர்பேர் பகுதியில் உருவான வன்செயல்களையடுத்து 10 லட்சம் பேருக்கு மேல் வீடுகளைவிட்டு ஓடியிருக்கிறார்கள்; ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

உலகத்தில் மிக மோசமான மனித உரிமை நெருக்கடி இது என ஐ.நா. வர்ணித்துள்ளது. வறுமையாலும், உணவின்மையாலும், நோய்களினாலும் ஆயிரக்கணக்கானவர்கள் மடியும் நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கறுப்பு இன ஆபிரிக்க மக்களை அரச சார்புத் தீவிரவாதிகள் கொன்றொழித்து வருவதாகக் கூறப்படுகின்றது. தீவிரவாதிகளுக்கு அரசு ஆதரவு இல்லையென்று சூடான் அரசு தெரிவித்திருந்தாலும் அரசின் ஆதரவுடனேயே தீவிரவாதிகள் கறுப்பர்களைக் கொன்றொழித்து வருவதாகக் கூறப்படுகின்றது. (ப-8)

## தீவிரவாதிகளைக் கைதுசெய்ய குவைத்தில் பொலீஸார் தேடுதல்

குவைத்சிற்றி,ஜூலை28

ஈராக்கிலும், குவைத்திலும் அமெரிக்க ராணுவத்தை எதிர்த்துப் போராடுவதற்காக இளைஞர்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த தீவிரவாதிகளை வேட்டையாடும் பணியில் குவைத் அரசு ஈடுபட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மட்டும் 12 தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். அல் - கெய்டாவில் பெரிய பொறுப்பில் இருக்கும் காலீத் அப்துல்லா அல்டோசரி, அகமது முகமது அல் மிட்டாயிரி ஆகிய இருவரைக் குவைத் பொலீஸார் தேடிவருகிறார்கள். அவர்கள் இருவரும் குவைத்திலேயே பதுங்கி இருக்கிறார்கள் என்று பொலீஸார் கூறினார்கள். (8)


# 200 இற்கு மேற்பட்ட வடகொரிய அகதிகள் விமானம் மூலம் தென்கொரியா வந்தனர்

சியோல்,ஜூலை28

இரு நூறுக்கு மேற்பட்ட வடகொரிய அகதிகள் பெயர் குறிக்கப்படாத ஒரு மூன்றாவது நாட்டிலிருந்து தென்கொரியாவுக்குள் விமானம் மூலம் கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ளார்கள்.

பஞ்சம் தாண்டவமாடும் வடகொரியாவிலிருந்து வெளியேறியுள்ள பெரும் எண்ணிக்கையிலான அகதிகளின் முதல் குழு இதுவாகும். எதிர்வரும் நாள்களில் மேலும் 200 பேர் வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்கிழக்கு ஆசிய நாடொன்றிலிருந்து இவர்கள் வந்துள்ளார்கள் என்று கூறப்பட்ட போதிலும் சீனாவின் வழியாக இவர்களை வெளியேறியிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.



அகதிகளாக வந்துள்ளவர்களில் வடகொரிய உளவாளிகளும் இருக்கலாம் என்ற சந்தேகமிருப்பதால் தென்கொரியா அதிகாரிகள் அவர்களை உன்னிப்பாக விசாரித்த பின்பே தங்குவதற்கு அனுமதிப்பார்கள் என்று தெரிகின்றது. பின்னர் இவர்கள் தென்கொரியாவின் வாழ்க்கைமுறையில் பயிற்சியளிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

இவர்களும் கொரிய இனத்தவர்களே என்றாலும் வடகொரிய கம்யூனிச வாழ்க்கைமுறையில் பழக்கப்பட்ட இவர்களைத் தென்கொரியா முதலாளித்துவ வாழ்க்கை முறைக்குத் திருபப வேண்டியிருக்கும். (ப-8)

## ஓடு பாதையில் இரு நாய்கள்; விமானத் தரையிறக்கம் ஒரு மணி நேரம் தாமதம்!

சீனாவின் குவாங்சு விமான நிலையத்தில் 2 நாய்களால் பெரும் பரபரப்பு ஏற்பட்டு விட்டது. கூண்டுக்குள் அடைக்கப்பட்டு விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்ட அந்த 2 செல்ல நாய்கள் எப்படியோ தப்பி ஓடுபாதையில் இறங்கி ஓடின.

அதைப் பிடிக்க விமான நிலைய ஊழியர்கள் 6 வான்களில் துரத்தினார்கள். ஒரு மணி நேரத்துக்கும் மேலாக ஓடு பாதையில் அவை ஓடித திரிந்தன. இதனால் அந்த விமான நிலையத்தில் விமானங்கள் தரை இறங்க முடியாமல் மேலேயே வட்டமடித்து பறந்துப் கொண்டிருந்தன. ஒரு வழியாக ஒரு நாய்க்குட்டி பிடிபட்டது. இன்னொரு நாய்க்குட்டி அருகில் உள்ள புல்வெளிக்கு ஓடியது.

பின்னர் விமானங்கள் தரையிறக்கப்பட்டன. (8)

## அல்-ஜெஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பை தடுக்கத் திட்டம்

டுபாய்,ஜூலை28

அல்-ஜெஸீரா, அல்-அரேபியா போன்ற தொலைக்காட்சிகள் தான் ஈராக்கில் வன்முறையைத் தூண்டி விடுகின்றன. ஈராக் மக்களின் நலனுக்கும், பாதுகாப்புக்கும் எதிராக அவை செயற்படுகின்றன. எனவே, அல்-ஜெஸீரா தொலைக்காட்சி ஈராக்கில் ஒளிபரப்பாவதை தடுத்து நிறுத்தலாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது என்று ஈராக்கின் வெளிநாட்டமைச்சர் ஹோஷியார் ஜெபாரி கூறினார்.

அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறுகையில் -

தீவிரவாதிகளின் தவறான நோக்கங்களுக்கு அல்-ஜெஸீரா பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன் பாரபட்சப்போக்கை அனுமதிக்க முடியாது. எனவே, அதைத் தடைசெய்யத் திட்டமிட்டு இருக்கின்றோம் - என்று கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டை அல்-ஜெஸீரா தொலைக்காட்சி மறுத்து இருக்கிறது. (8)

# 'டயல்' செய்யும் தொலைபேசிக்கு விடைகொடுத்தது சீனா

பெய்ஜிங்,ஜூலை28

'டயல்' செய்து பேசும் தொலைபேசிக்கு சீனா விடைகொடுத்துவிட்டது. திபெத்திய கிராமமான மென்ஜோங்கில் இருந்த கடைசி 'டயல்' தொலைபேசியும் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக வயர்லெஸ் கருவி மூலம் இயங்கும் தொலைபேசி பொருத்தப்பட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

திபெத்திய கிராமமான மென்ஜோங்கில் உள்ள மக்கள் பழங்காலத் தொலைபேசிகளை அதாவது எண்களைக் கையினால் சுழற்றி பேசும் தொலைபேசிகளை 1974 முதல் உபயோகித்து வந்தனர். படிப்படியாக அவை மாற்றப்பட்டு புதிய தொலைபேசிக் கருவிகள் வழங்கப்பட்டன. அந்தக் கிராமத்தில் செயற்பட்டு வந்த கடைசி டயல் தொலைபேசிக்கும் சீனா விடைகொடுத்துவிட்டது.

சீன தொலைத் தொடர்புத்துறை திபெத்தில் உள்ள 683 கிராமங்கள் மற்றும் நகரங்களில் வாழும் மக்கள் வெளியில் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ள வசதியாக தொலைபேசி சேவையை நவீனப்படுத்தியுள்ளது. இதற்காக 156 கோடி ரூபா செலவிட்டுள்ளது. (8)

## அங்கோலா துணை அமைச்சர் குதித்துத் தற்கொலை

லுவாண்டா,ஜூலை28

ஆபிரிக்காவில் உள்ள அங்கோலா நாட்டின் வெளிநாட்டுத் துணை அமைச்சர் பிரான்சிஸ்கோ ரோமாலோ 8 ஆவது மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

62 வயதான இவர், போர்த்துக்கல் நாட்டிடம் இருந்து விடுதலை பெறுவதற்காக நடந்த போராட்டத்தில் பங்குகொண்டு சிறை சென்றவர்.

இவர் லுவாண்டாவில் உள்ள ஹோட்டலில் 8 ஆவது மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டார். இதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. (8)

# இந்தோனேசியாவின் தேர்தல் அலுவலகத்தில் குண்டுவெடிப்பு

ஜகார்த்தா,ஜூலை28

இந்தோனேஷியாவில் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் சமீபத்தில் நடந்தது. அதன் முடிவுகளை தலைமைத் தேர்தல் ஆணைக்குழு அறிவிக்க இருந்த நிலையில், தேர்தல் ஆணைக்குழு கட்டடத்தில் குண்டு வெடித்தது.

4 மாடிக் கட்டடத்தின் தரைத் தளத்தில் உள்ள கழிவறையில் குண்டு வெடித்தது.

வெடிச்சத்தம் கேட்டதும் கட்டடத்தில் இருந்தவர்கள் இங்கும் அங்குமாக ஓடித் தப்பிக்க முயன்றனர்.

இதில் உயிர்ச்சேதம் ஏதும் உண்டா என்று தெரியவில்லை. இதை யார்செய்தது, எதற்காக செய்தனர் என்பது பற்றி பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றார்கள். (8)

## I.E.L.T.S மாணவர்களுக்கு!

எதிர்வரும் 14, 28-08-2004இல் வெளிநாட்டு பல்கலைக்கழக அனுமதிக்கான I.E.L.T.S பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்களுக்கான தயார்படுத்தல் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. இவ்வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 30-07-2004 (வெள்ளிக்கிழமை) இற்கு முன் பதிவுசெய்துகொள்ளவும். அடுத்து வரும் திகதிகளில் தோற்றவிருக்கும் மாணவர்களும் தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

- நிர்வாகி.

London English College

LONDON ENGLISH COLLEGE
105, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-222-5889, 0777 252180, 077 6303539
E.Mail: iecjaffnabranch @ yahoo.com
(#36391) (11-12-23)


# கோண்டாவில் பகுதியிலுள்ள உணவகங்களில் சோதனை

கோண்டாவில்,ஜூலை28

கோண்டாவில் சந்தி, டிப்போச் சந்தி ஆகிய பகுதிகளில் உள்ள உணவகங்கள், பலசரக்குக் கடைகளில் கடந்தவாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர்ச்சோதனை நடத்தினர்.

இந்தச் சோதனையின்போது டிப்போப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் சாக்கு ஒன்றின் மூலம் சோற்றுக்கஞ்சி வடித்துக் கொண்டிருந்ததைக் கண்டுபிடித்தனர்.

பின்னர் சாக்கில் காணப்பட்ட நெல்லரிசிச் சோற்றை உணவுக்குப் பயன்படுத்த முடியாதபடி அழித்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை -

கோண்டாவில் சந்தியில் உள்ள கடையொன்றில் பாவனைக்காலம் முடிவடைந்த நிலையில் விற்பனைக்கு இருந்த தகரப் பால் புட்டிகளையும் பாவனைக்கு உதவாதவாறு அழித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(8-49)


## குழந்தை யேசுவை நோக்கிச் செபம்

### அற்புதமான சக்திமிகு நவநாள் செபம்



அ) "கேளுங்கள் கொடுக்கப்படும்;
தேடுங்கள் கண்டடைவீர்கள்;
தட்டுங்கள் திறக்கப்படும்" என்று
திருவாய் மலர்ந்தருளிய யேசுவே!
உமது திருத்தாயார் அதிபரிசுத்த
மரியன்னை வழியாக அடியேன்
தட்டுகிறேன், என் மன்றாட்டைக்
கேட்டருளும்.
(தேவையைக் குறிப்பிடவும்)

ஆ) "என் நாமத்தினால் என் பிதாவிடம்
கேட்பதெல்லாம் உங்களுக்குத் தரப்படும்"
என்று திருவாக்களித்த மதுரமான யேசுவே! உமது
திருத்தாயார் அதிபரிசுத்த மரியன்னை
வழியாக அடியேன் தாழ்ச்சியோடு இந்த
அவசரமான எனது தேவையைத் தந்தருளுமாறு
உமது பெயரால் பிதாவிடம் கேட்கிறேன்.
(தேவையைக் குறிப்பிடவும்)

இ) "வானமும் பூமியும் ஒழிந்துபோகும்,
ஆனால் என் வார்த்தைகளோ
அழிந்து போகா" என்று திருவுளம் பற்றிய
அன்பான யேசுவே! உமது திருத்தாயார்
அதிபரிசுத்த மரியன்னை வழியாக எனது
மன்றாட்டு நிச்சயமாகக் கேட்டருளப்படும்
என்று நம்பிக்கையோடு விசுவாசிக்கின்றேன்.
(தேவையைக் குறிப்பிடவும்)

உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும்!
- ஒவ்வொரு திங்கள் அல்லது வியாழன், தொடர்ச்சியாக 9 கிழமைகள் சொல்லலாம் அல்லது
- அவசரம் எனில் 9 நாள்களில் தொடர்ச்சியாக ஒருநாளில் 9 முறை (சரியாக ஒரு மணித்தியாலயத்திற்கு ஒரு தடவை வீதம்) சொன்னால் பலன் கிடைக்கும். (34633) (24-12-15)

அற்புதமான பலன் கிடைத்ததினால்
நன்றி கூறும் அடியாள்.



Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6320948 முதல் 6333950 வரை
சீட்டிழுப்பு இல. 53 திகதி 26-07-2004

வெற்றி எண்கள் **3 8 6 8 8 2** சுப்பர் எண் **11**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,35,59,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,35,59,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 116 | 5,000/- | 5,80,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,143 | 500/- | 5,71,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,411 | 50/- | 5,70,550/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,13,109 | 10/- | 11,31,090/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 15 | 5,000/- | 75,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 1,000/- | 1,10,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,142 | 100/- | 1,14,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,312 | 20/- | 2,26,240/- |
| மொத்தம் | 1,138,371 | | 49,78,580/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 49,78,580/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,38,76,375/-

தொடர் இல. 7295174 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 29 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

6329120-9-63
6325859-4-65
6331572-0-47
6322115-6-97
6328957-8-72



## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, Tender Board, will receive sealed Tenders from contractors with at least five years experience being registered in Grade M6 or above with ICTAD for Civil Engineering works for Interior Decoration Works for the Auditorium at Faculty of Medicine, University of Jaffna - stage - I

Tender forms may be obtained from the Asst. Registrar / Administration, University of Jaffna on producing valid registration book and receipt for the cash payment for the following tender fee at the shroff's Counter of University of Jaffna or from M/S Pan Arch (pvt) Ltd., 19D, Ocean Tower, Station Road, Colombo - 04 making cash payments at this address until 13.08.2004.

**Non refundable deposit Rs.3,000/=**

In addition an on demand Tender security from any bank acceptable to Vice-Chancellor, University of Jaffna to be submitted for Rs.150,000/= valid for minimum 120 days from the last date specified for accepting the tender.

Perfected tender to be sent by registered post to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposit in the Tender Box at the Registrar's office, University of Jaffna on or before 25.08.2004 at 10.00 a.m.

Tender forms may be inspected by the Tenderer's free of charges at the Administration Branch of this University or at the office of M/S pan Arch (pvt) Ltd. in Colombo during office hours if necessary.

**Vice-Chancellor,**
**University of Jaffna.**
**27-07-2004.**
(C/36394)(42-12-15-24)

P.O.Box 57,
Thirunelvely,
Jaffna.



## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**அன்னலட்சுமி தம்பிராசா**

மலர்வு
21-04-1929

உதிர்வு
21-07-2002

திதி: 28-07-2004

ஆண்டுகள் இரண்டானாலும் உங்கள்
நினைவுகளுடன் வாழ்கிறோம்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
அஞ்சலி செலுத்தி இங்கு வாழ்ந்திருப்போம்.

*காங்கேசன்துறை வீதி,*
*இணுவில்.*
(34630)(21-12-15-24)

மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.


## உயரம் பாய்ந்தவேளை கை முறிந்தது

கைதடி,ஜூலை28

விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு இடம்பெற்ற பயிற்சியின்போது உயரம் பாய்ந்த இளைஞர் ஒருவர் தவறுதலாகக் கையூன்றிய போது வலதுகை முறிந்தது. அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி தெற்கில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஜ-75)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை28

வலி. வடக்குப் பிரதேச சபை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற பகல் 2மணிக்கு மயிலிட்டி உப அலுவலகப் பொறுப்பாளர் திருமதி யோகேஸ்வரி காசிலிங்கம் தலைமையில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்குப் பிரதேச சபையின் செயலாளர் செ.செல வரத்தினமும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(10)

## பெற்றோரிடம் முறையிட்டதற்காக இளைஞர்கள் வஞ்சம் தீர்ப்பு

வரணி,ஜூலை28

தனது காணியில் உள்ள தென்னை மரத்தில் அனுமதியின்றி இளநீர் பறித்துக் குடித்த இளைஞர்கள் பற்றி அவர்களது பெற்றோரிடம் அந்தக் காணிக்காரர் முறையிட்டதை அடுத்து அந்த இளைஞர் குழு அவரது காணியில் நின்ற எலுமிச்சை மரம் ஒன்றை வெட்டிச் சேதமாக்கியுள்ளது.

வரணி, இடைக்குறிச்சிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கணபதி நாகப்பன் என்பவரே பாதிக்கப்பட்டவராவார்.

திருட்டுத்தனமாக இளநீர் பறித்துக் குடித்ததைத் தமது பெற்றோரிடம் காணி உரிமையாளர் தெரிவித்ததால் ஆத்திரமடைந்தே மேற்படி இளைஞர் குழு காய்க்கும் நிலையில் இருந்த எலுமிச்சை மரத்தை வெட்டிச் சேதமாக்கியுள்ளது.

(10-170)

## முன்னாள் அமைச்சரின் செயலாளர் கைது

கொழும்பு,ஜூலை28

முன்னாள் அமைச்சர் மகிந்த வீரசேகராவின் ஒருங்கிணைப்புச் செயலாளராகவிருந்த ஆனந்த அபயவிக்கிரம என்பவர் புனர்வாழ்வு அமைச்சிற்குச் சொந்தமான வாகனத்தை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் நேற்று முன்தினம் மாத்தறை விசேட புலனாய்வுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அவரது வாக்குமூலத்தைப் பதிந்ததன் பின்னர் பொலீஸார் மாத்தறை பிரதம நீதிபதி றோகான் ஜயவர்த்தனவின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

விசாரணைகளின்படி சந்தேகநபர் இந்த வாகனத்தைத் துணியினால் மூடி வீட்டில் வைத்திருந்தார் என்றும் - வாகனத்தை விற்றுவிட முயற்சி எடுக்கப்பட்டபோது பொலீஸார் கண்டுபிடித்தனர் என்றும் - கூறப்பட்டது. (ப)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**
**'SPOKEN ENGLISH'**
BY: விக்கினேஸ்வரன் ஆச்சாரி
வார, வார இறுதி வகுப்புகள் ஆரம்பம்.
426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக்வீதி, சங்கானை. (34635)



## கடைகள் விற்பனைக்கு

பலாலி வீதி (யாழ்ப்பாணம்),
வீரமாகாளியம்மன் சந்திக்கு
அருகில் உள்ள இல. 152, 154
ஆகிய இரு கடைகளும்
உடனடியாக விற்பனைக்குள்ளன.
(34631) (24-12-15)

தொடர்பு:
சிவனேசன் (ஆசிரியர்)
"ஆனந்தவாசா"
3ஆம் கட்டை, கல்வியங்காடு.
T.P.: 077 6529379, 021 222 6688

# காய்ச்சலின் பிடியில் காரைநகர்...!

## பொது வசதிகள் மீதான அலட்சியம் பெரும் சுகாதாரக் கேடுகளுக்குக் காரணம்

கடந்த சில நாள்களாக காரைநகரில் பரவி வரும் நெருப்புக் காய்ச்சல் நோயினால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு காரைநகர் வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

நாட்டில் பரவிய நெருப்புக் காய்ச்சலிலேயே மிகத் தாக்கம் கூடிய நெருப்புக் காய்ச்சல் இது வென சுகாதாரப் பகுதியினர் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்படக் காரணமாகிய இக்காய்ச்சல் பரவிய வழிவகைகளை ஆராயும் போது காரைநகர் மத்தியில் உள்ள ஆலயம் ஒன்றில் அண்மையில் நடைபெற்ற திருவிழாவின் போது குடிதண்ணீருக்காகவும், சமையல் தேவைக்காகவும் பயன்படுத்தப்பட்ட கிணற்று நீரே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டாலும் வேறும பல காரணங்கள் கூறப்படுகின்றன.

காரைநகர் மத்தியில் ஆரம்பமான நெருப்புக் காய்ச்சல் தற்போது ஊரி, தோப்புக்காடு, இலகடி, வேம்படி போன்ற பல பகுதிகளிலும் பரவத் தொடங்கி உள்ளது. இதனால் முந்நூறுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### முதல் நோயாளி

நெருப்புக்காய்ச்சலுக்கு இலக்கான முதலாவது நோயாளி 04-07-2004 இல் இனங்காணப்பட்டார். இந்நிலப் பகுதியில் அரச சுகாதாரத் திணைக்களம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பின் அல்லது வைத்தியசாலைக்கான மருந்துகள், ஆளணியினர் வழங்கப்பட்டிருப்பின் இந்நோயினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கமுடியும்.

காரைநகர் வைத்தியசாலைக்குத் தினமும் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் வருகை தருவதாகவும் இங்கு இடப்பற்றாக்குறை, மருந்துவகைகள் பற்றாக்குறை மற்றும் மருத்துவர், ஆளணி பற்றாக்குறையால் வைத்தியசாலை நிர்வாகம் திண்டாடுவதாகவும் கூறப்படுகின்றது.

இங்கு இரத்தப்பரிசோதனை மற்றும் ஆய்வு கூட வசதிகள் இல்லாமையினால் இங்குவரும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இவ்வாறு அனுப்பப்படும் நோயாளர்கள் பலர் பணக் கஷ்டம், போக்குவரத்துக் கஷ்டம் காரணமாக பரிசோதனைக்குச் செல்லாது வீடு திரும்புவதால் இப்பகுதிகளில் மேலும் இந்நோய் பரவக்கூடிய ஏதுநிலை காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

நெருப்புக்காய்ச்சல் என உறுதிப்படுத்தப்பட்ட ஏராளமான நோயாளர்கள் இந்த வைத்தியசாலை விடுதிகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஆனால், இங்கு ஆண், பெண் ஆகிய இரு விடுதிகளிலும் தலா 12 கட்டில்களே உள்ளன. இதனால் ஒரே கட்டிலில் பலரும் விடுதி விறாந்தைகளில் பாய் போட்டும் படுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை அவதானித்த தேசிய எழுச்சிப் பேரவையினர் வைத்தியசாலை வளாகத்தினுள் கொட்டகைகள் அமைத்து நோயாளர்கள் தங்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளின் கவனம் திரும்புவதற்கு முன்பாகவே தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினர் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள், மற்றும் குளோரின் என்பனவற்றைப் பெற்றுக்கொடுத்துள்ளனர். அதேவேளை, பொது அமைப்புக்களின் உதவியுடன் தீவிர பரப்புரை, துண்டுப்பிரசுர விநியோகம், நோயாளர்களுக்கான திரவ உணவு வசதிகள் என்பனவற்றையும் வழங்கினர்.

அத்துடன், தமிழீழ சுகாதார சேவைகளினால் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் எழுதப்பட்ட நெருப்புக்காய்ச்சல் விழிப்புணர்வுப் பதாகைகள் காரைநகரின் பல இடங்களில் தொங்கவிடப்பட்டுள்ளன. கிளிநொச்சியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனமும் ஆஸ்திரேலிய மருத்துவ நிபுணர் ஒருவரையும் தற்காலிகமாக கடமையாற்ற அனுப்பிவைத்துள்ளது. காரைநகர் மக்களின் மருத்துவத் தேவைகளுக்கென இயங்கிவரும் இவ்வைத்தியசாலையில் ஒரே ஒரு வைத்திய அதிகாரியும் மிகக் குறைந்தளவு தாதியர்களும், ஊழியர்களும் கடமையாற்றுகின்றனர், இந்த [illegible] தியசாலையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் விடயத்தில் அரசு மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடந்து வருகின்றது.

பொதுமக்கள் சிலரால் உருவாக்கப்பட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்ட நிதியும் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது. இச்சபையும் வைத்தியசாலை நலனில் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

இதுவரை எதுவித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படாத காரைநகர் வைத்தியசாலையில் காருண்யம் மிக்க அன்பர்கள் வழங்கிய நிதியைப் பயன்படுத்தி வியாவில் ஐயனார் தேவஸ்தானம் சில உதவிகளையும் திருத்த வேலைகளையும் செய்துள்ளது.

### தண்ணீர்த் தட்டுப்பாடு

காரைநகரில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இங்குள்ள பெரும்பாலான கிணறுகள் உவர்நீராகவே உள்ளன. வயல் நிலங்களில் உள்ள நன்னீர் கிணறுகளும உவர்நீராக மாறிவிடுகின்றன.

காரைநகர் பகுதி மக்கள் இங்குள்ள ஒரு சில கிணறுகளில் இருந்தே குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறான கிணறுகளில் நீர் அள்ளுபவர்களில் சிலர் அசுத்தமான வாளிகளையும் வீடுகளில் உடுப்புகள் தோய்த்த வாளிகளையும் பாவிப்பதாகவும், இக கிணறுகளில் கைகால், முகம் கழுவுவதாகவும கூறப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளால நோய்க் கிருமிகள் தொற்றக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

இந்த நன்னீர் கிணறுகளுக்கு பொது வாளிகளால் அள்ளுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக கொடுத்தல் மற்றும் பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் தொற்று நோய்களில் இருந்து ஓரளவு மக்களைப் பாதுகாக்க முடியும்.

காரைநகரில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் உள்ள மக்கள் அடிப்படை வசதிகளான வீட்டு வசதி, குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் இன்றி அடிக்கடி தொற்று நோய்களுக்கு ஆளாகின்றனர். இவர்களிடம் மலசலகூடவசதி இல்லை. அவ்வாறு ஒரு சிலரிடம் இருந்தாலும் கூட அவற்றைப் பாவிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் அவற்றை பொருள்கள் வைப்பதற்கான இடமாகவே பாவிக்கின்றனர். காரைநகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களில் 75 வீதமானோர் இப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என [illegible] முடிகின்றது.

அதிகாரிகள் பாரிய அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டுவதிலேயே கவனம் செலுத்துகிறார்களே தவிர மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளில கவனம் செலுத்தாமையே இவ்வாறான நோய்களுக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அரச அதிகாரிகளும் சுகாதாரத் திணைக்களமும் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

காரைநகரில் நீண்டகாலமாக வீதிகள் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. குளங்கள், கால்வாய்கள் புனரமைக்கப்படாமல் தூர்ந்துபோய் உள்ளமையால் மழைகாலங்களில் இவற்றுள் வெள்ளம் தேங்கி நின்று நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு நோய் பரவும தாக்கம் அதிகரிக்கின்றது.

14 பாடசாலைகள் இயங்கி வந்த காரைநகரில தற்போது ஆறு பாடசாலைகளே இயங்குகின்றன. இங்கு ஆசிரியர்கள், மாணவர்களுக்கு குடிதண்ணீர் வசதியோ, மருத்துவ சுகாதார வசதிகளோ ஏற்படுத்தப்படுவதில்லை. 800 மாணவர்களுக்கு மேல் கல்விபயிலும் பிரபல பாடசாலைகளில் கூட மலசலகூடங்களை சுத்திகரிப்பதற்கான தொழிலாளர்கள் இல்லை. ஆசிரியர்களும் மாணவர்களுமே துப்புரவு செய்கின்றனர். சிலவேளைகளில் மலசல கூடத்திற்கு பாவித்த வாளிகளைப் பயன்படுத்தி பாடசாலைக் கிணற்றில் நீரை அள்ளி தாகத்தைத் தீர்ப்பதற்காக உவர்நீரைப் பருகுவது பரிதாபமாக உள்ளது.

வெளிநாடுகளில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் பழைய மாணவர்களிடையே பெருந்தொகை பணத்தை நன்கொடையாகப் பெறும் பழைய மாணவர் சங்கங்களோ, பாடசாலை அபிவிருத்திச சபைகளோ மாணவர்களின் அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர், மலசல கூடம் மற்றும் சுகாதார வசதிகளில் கவனம் செலுத்தாது இருப்பது விசனத்திற்குரியது.

### உணவுச்சாலைகளின் சுகாதார நிலை

மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் ஆரம்பிக்கப்பட்ட உணவகங்களிலும், தேநீர்சாலைகளிலும் முறையான சுகாதாரம் பேணப்படுவதில்லை. உணவுப் பண்டங்களை மூடிவைக்க கண்ணாடி அலுமாரிகள் இல்லாத நிலையில் ஓலைப்பெட்டிகளில் உணவுப் பண்டங்கள் வைத்து வழங்கப்படுகின்றன.

உணவுச்சாலைகளின் பின் பகுதிகளில் கைகழுவும் நீர் தேங்கி நிற்கின்றது. உணவுப் பண்டங்களின் கழிவு பண்டங்கள் முறையாக அகற்றப்படுவதில்லை. இங்குள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருள்களும் பழுதடைந்த பழவகைகளும் யாரும் கேட்பார் அற்ற நிலையில் பொதுமக்களின் தலையில் கட்டியடிக்கப்படுகின்றன.

இங்கு நெருப்புக்காய்ச்சல் தீவிரமாகப் பரவத்தொடங்கியமையை ஊடகங்களும் தமிழீழ சுகாதார சேவையினரும சுட்டிக்காட்டிய பின்பே சுகாதாரப் பகுதியினர் விழித்துக் கொண்டனர்.

கடந்த சில நாள்களில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் உட்பட பத்திற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் மனித பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்களும், காலாவதியான பிஸ்கற் வகைகள், பால்மா வகைகள் என்பனவும் சுகாதார பரிசோதகர்களினால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இங்குள்ள உணவகங்கள், தேநீர் சாலைகள் அனைத்தையும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடுமாறு அறிவிக்கப்பட்டதை அடுத்து அனைத்தும் மூடப்பட்டு உள்ளன.

செய்திக் கட்டுரை
காரைநகர் செய்தியாளர்

இங்குள்ள மருந்தகங்களில் காலாவதியான மருந்து வகைகள் விற்பனைக்காக வைத்திருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள பொதுக்கிணறுகளைப் புனரமைத்தல், துப்புரவு செய்தல், குடிதண்ணீர் விநியோகத்தின் போது எவ்வேளையிலும் குளோரின் செறிவு காணப்படுவதை உறுதிப்படுத்தல், மூடநம்பிக்கையின் பெயரால் சுகாதாரக் குறைபாடு ஏற்படுவதைத் தடுத்தல், பாவனைக்கு பயன்படுத்தும் நீர்நிலைகளுக்கு குளோரின் இடல், பொது நிகழ்வுகளின் போது தற்காலிக மலசல கூடங்களும் அதற்கான வசதிகளும் ஏற்படுத்தல், வெளி இடங்களில் உணவு உற்பத்தி செய்து உணவு கையாளும் இடங்களில் விற்பனை செய்வதைத் தடைசெய்தல் என்பவற்றின ஊடாக இந்நோய்த் தாக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடியுமென தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினர் தெரிவித்துள்ளனர். ✪

---

### அடிப்படைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள பெரும்சிரமம்

# ஓய்வூதிய முரண்பாட்டை நீக்கும் பணிகளில் ஓய்வூதியக் கிளை ஊழியர்கள் படாதபாடு

வலி.தெற்கு,ஜூலை28

1996ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கான ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கி, ஓய்வூதியம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பிரதேச செயலகங்களில் உள்ள ஓய்வூதியக் கிளை ஊழியர்கள் பெரிதும் சிரமப்பட வேண்டி இருப்பதாகத் தெரியவருகின்றது.

ஓய்வூதியக் காரர்களைப் புதிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் உள்வாங்குவதற்குத் தேவையான அடிப்படை விவரங்களைப் பெற்றுக்கொள்வதில் இந்த ஊழியர்கள் பெரிதும் கஷ்டப்பட வேண்டி உள்ளது.

இவர்களுக்கான சம்பளப்பிரிவு எவை என்பதைக் கண்டறிவது கஷ்டமான காரியமாக உள்ளது. ஒவ்வொரு அரச திணைக்கள ஊழியர்களின் பதவி நிலைகள், பிரிவுகள், அவர்களுக்கான சம்பளஅளவுத் திட்டங்கள் எல்லாம் வெவ்வேறு வகைப்பட்டவை.

1996இற்கு முன் ஓய்வுபெற்றவர்கள் காலத்துக்கு காலம் ஏற்பட்ட பதவி வழிக்குழுக்கள் அவர்களுக்கான சம்பளத்திட்டங்களைப் பற்றிய விவரங்களை ஓய்வூதிய கிளை ஊழியர்களால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகத் தெரியவருகின்றது. ரயில் திணைக்களம், மதிப்பீட்டு வரித் திணைக்களம் போன்றவற்றில் இருந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியத்தை எந்தப் பிரிவுக்குள் உட்படுத்துவது எனப் பிரதேச சபை ஊழியர்கள் திண்டாடுகின்றனர் எனத் தெரியவருகின்றது.

இவர்களுக்கான இந்த விவரங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் இருந்தே பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

திணைக்களங்களால் அனுப்பிவைக்கப்படும விவரங்கள் சிங்கள மொழியிலும் தமிழ்மொழியிலுமே காணப்படுவதால் ஓய்வூதியர்களின் பதவி நிலைகளைக் கண்டறிவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. சரியான மொழி பெயர்ப்புப் பதங்கள் தரப்படாமையால் புதிய புதிய தமிழ் கலைச்சொற்களுக்கான அர்த்தத்தை கண்டுபிடிக்க வேண்டிய நிலையும் ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவற்றைப்பெற்றுக் கொள்வதற்கேற்ற வழிவகைகள் அடங்கிய சுற்றறிக்கைகளும் அனுப்பிவைக்கப்படவில்லை.

இவ்வாறான பல்வேறு கஷ்டங்களால் ஓய்வூதிய முரண்பாடுகளை அகற்றிப் புதிய திட்டப்படி ஓய்வூதியம் கணிக்கப்பட்டு வழங்குவதற்கு காலதாமதம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-152)

## ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை28

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் 'போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்' எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5.00 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறும்.

இந்நிகழ்வில் முன்னாள் யாழ்.மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானத்தின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (ஐ-204)

# சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் பிறந்ததினத்தையொட்டிக் கட்டுரைப்போட்டி

கொழும்பு,ஜூலை28

சேர் பொன். அருணாசலத்தின் 150ஆவது பிறந்ததினத்தை ஒட்டி அகில இலங்கை இந்து மாமன்றத்தினரும் வடகொழும்பு இந்து பரிபாலனசபையினரும், சேர் பொன்.அருணாசலத்தின் குடும்பத்தினரும் இணைந்து மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளனர்.

தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான மாணவர்களை முதலாம் பிரிவாகவும், தரம் 9 தொடக்கம் தரம் 11வரையான மாணவர்களை இரண்டாம் பிரிவாகவும் தரம் 12 தொடக்கம் 13 வரையான மாணவர்களை 3ஆம் பிரிவாகவும் மூன்று பிரிவுகளாகப் பிரித்து இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

முதலாம் பிரிவினர், 'சேர் பொன் அருணாசலத்தின் வாழ்க்கை மகிமை' என்னும் தலைப்பிலும்,

இரண்டாம் பிரிவினர், 'சேர் பொன்.அருணாசலம் ஆற்றிய சமயப் பணிகள்' என்னும் தலைப்பிலும் -

3ஆம் பிரிவினர், 'இலங்கை அரசியலில் சேர் பொன்.அருணாசலம் ஏற்படுத்திய தாக்கங்கள்' என்னும் தலைப்பிலும் கட்டுரைகளை வரைய வேண்டும்.

'செயலாளர், சேர் பொன்.அருணாசலம் நிதியம், மே/பா அகில இலங்கை இந்துமாமன்றம், 91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02' என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அவற்றை அனுப்பி வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியாளர்கள் முன்னர் எழுதிய ஆக்கங்களை எழுதுவது தவிர்க்கப்படுவதுடன் எழுத்துக்கள் தெளிவானவையாகவும், பிழையற்றவையாகவும் எழுதப்படவேண்டும்.

அத்துடன், கட்டுரைகள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துவதுடன், பாடசாலை அதிபரின் மேலொப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ஐ-201)

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,ஜூலை28

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாதாந்த இசைநிகழ்ச்சியில் இன்று புதன்கிழமை மாலை 5மணிக்கு மேற்படி மன்றக் கலாமண்டபத்தில் சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளையின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

நிகழ்வில் இசைக்கலைமணி சு.கோபிதாஸ் (வயலின்) லண்டன் ஆவர்த்னா இசைக்கல்லூரி அதிபர் பரமசாமி கிருபாகரன் (மிருதங்கம்), கலாவித்தகர் கிருபா அனந்தகோபன் (கெஞ்சிரா) ஆகியோர் இணைந்து இசைக்கவுள்ளனர்.

(ஐ-201)

❖ ❖ ❖

வலி.தெற்கு,ஜூலை28

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மூன்றாம் தவணையின்போது பாடசாலைகளில் அமுலாக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

(ஐ-152)

❖ ❖ ❖

குருநகர்,ஜூலை28

குருநகர் புனித யாகப்பர் கலாமன்றம் குருநகர் கலையரங்கில் இன்று புதன்கிழமை இரவு 8.00மணிக்கு 'மலைமேற் கொலை' (தேவசகாயம்பிள்ளை) எனும் நாட்டுக்கூத்தை மேடையேற்றவுள்ளது.

தென்மோடி பாணியில் அமைந்த இந்த நாட்டுக்கூத்தின் அண்ணாவியாராக தம்பித்துரை யேசு செயலாற்றுகிறார். (ஐ-51)

❖ ❖ ❖

குருநகர்,ஜூலை28

யாழ்.தபாலக ஆலோசனைக் குழுவின் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.தபாலகத்தில் ஆலோசனைக் குழுவின் இணைச் செயலாளர் சி.பூ. இராசதுரை தலைமையில் நடைபெறும். (ஐ-51)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 – 08 – 1951



ஆண்டவன் அடியில் 24 – 07 – 2003

**அமரர் செ.ஸ்ரீநிவாசன் மைந்தன் சரவணபவன்**
**(ஸ்ரீ. சரவணபவன்)**
இளைப்பாறிய அதிபர் ப.மெ.ம.வித்தியாலயம்
இன்று: 28-07-2003 திதி: ஏகாதசி

ஆண்டு சுபானு ஆடி அபரபட்சம்
பூண்ட நற் ஏகாதசித் திதியதனில் - வேண்டுபுகழ்
ஸ்ரீநிவாசன் சரவணபவன் விசவத்தனை முருகன்
திருப்பாதம் சென்றடைந்த நன்நாள்
என்பாசமிகு தம்பி ஸ்ரீ சரவணபவன்
உன் நாமத்தை என்றும் மறவேன்.

பண்ணாகம்,
சுழிபுரம்.
(C/36346) (42-12-15-24)
திருமதி க.பராசக்தி
(சகோதரி).

## ORGANIZATION OF PROFESSIONAL ASSOCIATIONS JAFFNA

Inaugural meeting will be held in Jaffna by October. All Professional Associations and members of all professions, Accountants, Architects, Attorneys - at - law, Dentists, Doctors, Engineers and others are requested to contact organizer by post.

Prof.(Dr)V.Thirugnanasambanthar (Thirugnanas) M.Com, Ph.d., FCCA(U.K.),FCMA(U.K.), MCIM(U.K.), ACIS(U.K.), ACA (Nig.), MIIA(Aust.), FSCMA(SL), FTII(SL), CPA, RA.

Listed by International Biographical Centre, Cambridge, U.K. as "A man of achievement". Listed by Marquis Who's who in the World. Listed by American Biographical Centre USA, as a man of the year. Research fellow of ABI, USA. Life Member, Colombo OPA. 511/1, Fernando Road, Colombo - 06. Tel.: 2364920. (34604)(42-12-15-24)

## கேள்வி அறிவித்தல்

### வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினமே முற்பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலைவிவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| 1. யா/எருதிடல் அ.த.க.பாடசாலை (ஆரம்ப வகுப்பறை மாற்றியமைத்தல்) | 300.00 | 2000.00 | எம்8 |
| 2. யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. (ஆரம்ப வகுப்பறை மாற்றியமைத்தல்) | 300.00 | 1500.00 | எம்8 |
| 3. யா/மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தி. (ஆரம்ப வகுப்பறை மாற்றியமைத்தல்) | 300.00 | 2000.00 | எம்8 |
| 4. யா/இயற்றாலை அ.மி.த.க.பா. (ஆரம்ப வகுப்பறை மாற்றியமைத்தல்) | 300.00 | 1500.00 | எம்8 |
| 5. யா/மீசாலை கமலாம்பிகை வித்தி. (ஆரம்ப வகுப்பறை மாற்றியமைத்தல்) | 300.00 | 2000.00 | எம்8 |

01. (அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 08 ஆம், அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.
(ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்துமுடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி 'அ' இல் குறிப்பிட்ட சட்டதிட்டமும் மீளளிக்கக் கூடிய, மிளளிக்கமுடியாத வைப்புப்பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்ககப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தைத் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 30-07-2004 ஆம் திகதியிலிருந்து 11.08.2004 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை தென்மராட்சிக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப் பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப்படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப் பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறைகளின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு, ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
05. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர், தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 3 மாதகாலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விவரங்களைப் பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

திரு.வ.செல்வராசா,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி. (சி-36387) (26-12-15-24)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை28

அல்வாய், வேவிலந்தை முத்துமாரி அம்மன தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது. இம்மாதம் 30ஆம் திகதி தேர்திருவிழாவும் 31ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறும். (ஐ-201)

✦✦✦

யாழ்ப்பாணம்,ஜூலை28

புளியங்கூடல் கதிர்காம ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 23ஆம் திகதிமுதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும், 108 சங்காபிஷேகமும் இடம பெறும். அன்று அன்னதானமும் வழங்கப்படும். (ஐ-201)

✦✦✦

யாழ்ப்பாணம்,ஜூலை28

அனலையம்பதி, நயினாகுளம் ஸ்ரீ ஹரி ஹரபுத்திர ஐயனார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

எதர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.(ஐ-10-201)

✦✦✦

கொழும்புத்துறை,ஜூலை28

சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தின் 150ஆவது யூபிலி ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் காலை 8 மணிக்கு புனரமைக்கப்பட்ட புதிய பலி பீடத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

யூபிலி விழாவையொட்டி இத்தாலியில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய மணியைப் பொருத்துவதற்குப் புதிய கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது. (ஐ-30)

### வீதி திருத்துவதில் தாமதம்

கோண்டாவில்,ஜூலை28

கோண்டாவில் கிழக்கு அரசடி வீதியைச் செப்பனிடுவதற்காகக் கற்கள், மண் என்பன பறிக்கப்பட்டு நீண்டநாள்களாகியும் இன்னும் வீதி திருத்தப்படவில்லை.

வீதியில ஓரமாகப் பறிக்கப்பட்ட கற்கள் வீதியெங்கும் சிதறிக் காணப்படுகின்றன. இதனால், அவ்வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் வைததியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் பலர் அசௌகரியங்களுக்கு உளளாகி வருகின்றனர்.

இதேவேளை - வைத்தியசாலையை அண்டிய பகுதியில் மழைவெள்ளம் வழிந்தோடும் வாய்க்கால் தூர்ந்துபோய் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. பருவ கால மழைக்கு முன்னர் வாய்க்கால்களைச் சீராக்காதுவிட்டால் அப்பகுதியிலுள்ள வீடுகளுக்குள் வெள்ளநீர் புகும் நிலை தோன்றியுள்ளது. (ஐ-49)

### மகாபாரத சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை28

சங்குவேலி அருள் ஞான விநாயகர் ஆலயத்தில் தொடர் மகாபாரதம் பற்றிய சொற்பொழிவு இடம்பெறுகிறது.

தினமும் இரவு 7.30 மணிக்கு நவாலியூர் ஆசிரியர் முத்தமிழ்மணி ஜெயரட்ணம் கோகலே மேற்படி தொடர் சொற்பொழிவினை ஆற்றி வருகின்றார்.

மேற்படி ஆலயத்தில் கடந்த 14ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (3-185)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செங்கதிர் செல்வன் - சுமதி தம்பதிகளின்

ஏக புத்திரி

**செ. கம்ஷா**
(கம்ஷி)

**28.07.2004**

தனது முதலாவது பிறந்ததினத்தை லண்டனில் இருக்கும் தனது இல்லத்தில் இன்று (28.07.2004) புதன்கிழமை சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா (லண்டன்), அப்பம்மா, அப்பப்பா, அத்தைமார், மச்சாள்மார், பாட்டி (யாழ்ப்பாணம்), அம்மம்மா, அம்மப்பா, சித்தி (கொழும்பு), சித்தப்பா (டோகா) பெரிய மாமா (சவூதி) பெரியம்மாமார். பெரியப்பாமார் (லண்டன்) மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பல்கலையும் கற்று நீடூழி காலம் வில்லூன்றி விநாயகரின் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றார்கள்.

56, கோவில் ஒழுங்கை,
நாவாந்துறை, யாழ்ப்பாணம். (34502)
அப்பப்பா குடும்பத்தினர்.

## விளையாட்டு உபகரணங்கள்

பலவித விளையாட்டு உபகரணங்களை உங்களுக்காவே தருவித்துள்ளோம்

- ❊ கிரிக்கெட்
- ❊ ஈட்டி 600g, 800g
- ❊ மென்பந்து
- ❊ குண்டு
- ❊ கரம்
- ❊ உதை பந்து
- ❊ கரபந்து
- ❊ வலைப்பந்து
- ❊ கூடைப்பந்து

★ பரிசு வழங்குவதற்கான அழகான வெற்றிக் கிண்ணங்கள்

இன்னும் பல.....
நியாயமான விலைக்கும் தரமான பொருள்களுக்கும்:

(சி-36386) (24-12-15)

**அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்**
353, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## இரண்டாம் ஆண்டு நினைந்துருகல்



நயினை அமரர்
இராமநாதன் கோபாலபிள்ளை
பிறப்பு : 1939 – 09 – 03
இறப்பு : 2002 – 07 – 19

திதி
ஆடி பூர்வபக்க
ஏகாதசி - 28.07.04

"ஐயா உமைப்பிரிந்து இரண்டு
வருடங்கள் ஆகிவிட்டனவே!
எம் ஈரவிழிகளோ காயவில்லை
உமை இழந்து இத் தரணியில்
நாம் பரிதவிக்கின்றோம் ஐயா"
- ஓம் சாந்தி!சாந்தி! சாந்தி!-

2/1 முத்தவிநாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(34539)
என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காக
பிரார்த்திப்போர்
மனைவி, பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



## சுந்தரம் பஞ்சலிங்கம்

(மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையின் நீடித்த கருமபீட அலுவலர்)

கடமை முடிந்து வீடு செல்கையில் பாதி வழியில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். யுத்தத்தின் துயரம் சுமந்த எம் மக்களுக்கு அத்தியாவசிய துறையில் சேவை புரிந்த எமது சக சேவையாளனுக்கு இம் மண்ணிலோர் கொடுமையா? துயருறுகின்றோம் எம் சக நண்பருக்காக.

அன்னாரின் பிரிவால் கண்ணீரில் கலந்த குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-36400)(36-11-16) முகாமையாளரும், ஊழியர்களும்
மக்கள் வங்கி, யாழ்/பல்கலைக்கழகக் கிளை

# 41ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 19 - 03 - 1967



மறைவு 17 - 06 - 2004

## அமரர் தங்கராசா கிருஸ்ணராசா

அன்பின் திருவுருவே பாசத்தின் ஒளிவிளக்கே!
எம்மை அன்பால் அரவணைத்து, பாசத்தால் பாதுகாத்து
பண்பினால் வளர்த்தெடுத்து - எமது
வாழ்க்கைப் பாதைக்கு ஒளிவிளக்காய்த்
திகழ்ந்த எமது அன்புத் தெய்வம்.

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்தோருக்கும் தொலைபேசி மூலமும் கண்ணீ அஞ்சலி பிரசுரித்தும் எமது துயரைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (28.07.2004) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பாரதி வீதி,*
*கோண்டாவில் மேற்கு.* (34640)(43-11-16-36)

நீங்காத நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

# VACANCIES

**கொழும்பில் உள்ள பிரபல தமிழ் பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆள்கள் தேவை.**

## TRAINEE PRODUCTION ASSISTANTS

23 - 30 வயதிற்கு இடைப்பட்ட Printing துறையில் பயிலுநர்களாக இணையவிரும்பும் பட்டதாரிகள் நிறுவனச் செலவில் INGRIN (கொழும்பில் உள்ள பிரபல Printing Institute) இல் 6 - 12 மாத கற்கைநெறி பயில ஒழுங்குகள் செய்து தரப்படும். விண்ணப்பதாரி ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேச்சுத்திறன் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

## TRAINEE WEB - OFFSET OPERATORS

20 - 25 வயதிற்கு இடைப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தர கல்வித் தகைமையும் தொழில்நுட்பத்துறையில் தகைமையும் (Technical Qualifications) உடையவராக இருத்தல்வேண்டும்..

## TRAINEE MARKETING EXECUTIVES

20 - 22 வயதிற்கு இடைப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தர கல்வித் தகைமை உடையவராகவும் ஆங்கிலத்தில் சரளமாக கலந்துரையாடக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். கொழும்பில் தங்குமிட வசதி தேவைப்படுபவர்களுக்கு தங்குமிட வசதியும் செய்துதரப்படும்.

விண்ணப்பதாரிகள் கல்விச் சான்றிதழ்களுடனும், நற்சாட்சிப் பத்திரங்களுடனும் 28.07.2004 அல்லது 29.07.2004 ஆம் திகதிகளில் காலை 10.30 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

**Personnel Manager**
நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/36385)(40-11-16)

# தாமு கந்தையா நினைவு விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜுலை28

1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலைசெய்யப்பட்ட தாமு கந்தையாவின் நினைவாக நேற்றுப் புத்தூர் கிழக்கு விக்கினேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியின் உதைபந்தாட்ட இறுதி ஆட்டத்தில ஆவரங்கால் வீனஸ் வி.கழகம் எவெரெஸ்ட் விளையாட்டுக் கழகத்தை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

பெண்களுக்கான வலைபந்தாட்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் வீனஸ் வி.கழகம் புத்தூர் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது (ஒ-10)

# கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை28

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பின்வரும் இடங்களில் நாளை வியாழக்கிழமை கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன. எனவே, அன்று வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு பிரதேச[illegible]யின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கோண்டாவில் கிழக்கு நா. பூசணி அம்மன் கோயிலடி, ஆஸ்பத்திரி வீதி, நாராயணன் வீதி ஆகிய இடங்களிலேயே மேற்படி நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

(ஒ-10)

# ஆன்மீகச் சொற்பொழிவு

## நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் தேவஸ்தானம்

தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இந்தியா, கோயம்புத்தூர் ஆர்சவித்யா குருகுலத்தைச் சேர்ந்த ஸ்வாமி யோகேசாநந்த அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று (28.07.04) புதன்கிழமை இரவு 7.00 மணிக்கும் தொடர்ந்து நாளை வியாழக்கிழமை இரவும் இதேநேரம் இடம்பெறும்.

(34641)(38-11-16) - தேவஸ்தான தர்மகர்த்தாக்கள்.

லக்சுமி இணுவில்
இன்று முதல்
விஜய் - த்திரிசா, பிரகாஸ்ராஜ் நடித்த
கில்லி
புதியநேரம்: 11.00, 3.00, 7.00
(34649)

நாகம்ஸ் சுன்னாகம்
சிம்பு, ரம்மியா, விஜயகுமார், கர்ணாஸ் நடித்த
குத்து
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/35739)

நிறைஞ்சனாஸ் சங்கானை
M.G.R. (இருவேடம்), லதா, மஞ்சுளா, நம்பியார் நடித்த
நினைத்ததை முடிப்பவன் (ரீல்)
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெகுவிரைவில் ராமகிருஷ்ணா
வெள்ளி சனி ஞாயிறு
Random Hearts இரவு 8.45 (பு.நே.)
(C-36305)

ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன், மீனா, நெப்போலியன் நடித்த
அன்பு சகோதரன்
புதியநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.
(சி-36364)

# மரண அறிவித்தல்

## ஜோண் ஜோசப்

(ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்)

பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண் ஜோசப் (27.07.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப்பையா-றோசம்மா தம்பதிகளின் மகனும் மரியம்மாவின் (லண்டன்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற லூர்துமேரியின் சகோதரனும் யூட்யேசுநேசன் (லண்டன்), மறிலின்மாகிறேட் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் சீ.அந்தோனிமுதது (ஓய்வுபெற்ற விரிவுரையாளா, ஆசிரியர் கலாசாலை கோப்பாய்) அவர்களின் மைத்துனரும் மோசேஸ் நவரத்தினம் (ஆசிரியர், ஹாட்லிக்கல்லூரி) சாந்தினி கிருபைராசா (லண்டன்), பீலிப்ஸ் விஜயரத்தினம் (யாழ்பல்கலைக்கழகம், பொருளியல் துறை) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் நேற்று (27.07.2004) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது என்பதை அறியத் தருகின்றோம்.

*தும்பளை றோட்,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.* (சி.36601)(43-11-16-36)

தகவல்:
சீ. அந்தோனிமுத்து.
(மைத்துனர்).

# மரண அறிவித்தல்கள்

## சேதுகாவலர் பொன்னம்பலம் J.P.

(இளைப்பாறிய ஆசிரியர், பெரியபுலம் மகாவித்தியாலயம்)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சே.பொன்னம்பலம் அவர்கள் 26.07.2004 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சேதுகாவலர் (சித்தவைத்தியர்) - சிவகாமிப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி (சித்தவைத்தியர்), முருகேசுவின் அன்புச் சகோதரரும் புனிதவதியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் கலையரசி (அருணோதயாக் கல்லூரி), கலைச்செல்வி (முன்னாள் கைதடி சித்த வைத்திய அதிகாரி, தற்போது M.D மாணவி இந்தியா) அவர்களின் பாசமிகு தந்தையும் இளங்கோவின் (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை) அன்பு மாமனாரும் லீலாவதியின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2004)வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மாவத்தை,*
*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.* (34648)(43-11-16-36)

தகவல்:
ஆ.இளங்கோ
(மருமகன்).

## திருமதி ஞானரட்ணம் பிரான்சிஸ்கா புஸ்பம் (கிளி)



தொட்டுவை, பலாலியைப் பிறப்பிடமாகவும் 128, மவுண்ட் கார்மேல் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானரட்ணம் பிரான்சிஸ்கா புஸ்பம் (கிளி) அவர்கள் (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஞானரட்ணத்தின் அன்பு மனைவியும் றெஜிஸ் லெமன் (சுவிஸ்), யஸ்மின் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீவிஜயபாலன் (நாதன்), மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தவஞானம் மற்றும் திரவியம், மனோன், றோசா, செல்வம், புனிதா, விமலா, ரவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஹமில்டன், லிக்ஸன், கமீரா, மக்றூசல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2004) வியாழக்கிழமை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*128, மவுண்ட் கார்மேல் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (34646)(43-11-16-36)

தகவல்:
சகோதரர்கள்.

## இராமநாதன் பரமலிங்கம்

(நயினாதீவு, தேன்மொழி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)



நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராமநாதன் பரமலிங்கம் 23.07.2004 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் - இராமாசி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தேன்மொழியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வீரகத்தி (அதிபர்), சதாசிவம் (பொறியியலாளர், லண்டன்), தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நேசலக்சுமி (ஆஸ்திரேலியா), சிவக்கொழுந்து (லண்டன்), காலஞ்சென்ற கதிரேசபிள்ளை, காலஞ்சென்ற பொன்னையா, தியாகராசா (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் திருமதி விஜயரட்ணம் இராஜராஜேஸவரி, நாகேஸ்வரன் (லண்டன்), செல்வராசா (லண்டன), பேரின்பநாதன் (லண்டன்), திருமங்கை (கனடா), நித்தியானந்தராசா (கனடா) ஆகியோரின் மாமனாரும் குலானந்தன (இ.போ.ச), கேசவானந்தன் (நோர்வே), கோணேஸ் வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சித்தப்பாவும் தேவாம்பிகை (லண்டன்), தேவகுமாரன் (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2004) புதன்கிழமை திருநெல்வேலியில் உள்ள சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 11 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*72/8, பணிக்கர் ஒழுங்கை,*
*திருநெல்வேலி.* (34642)(43-11-16-36)

தகவல்:
க.தையல்நாயகி
(சகோதரி).

## ஆசீர்வாதம் அருள்நாயகம்



துன்னாலையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் அன்டன் அருள்நாயகம் (சட்டத்தரணியும் பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ்) அவர்கள் 25.07.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் - தவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் குணமணியின் அன்புக் கணவரும் அருள்மணியின (U.K) பாசமிகு தந்தையாரும் மரியதாஸ் (தபால் அதிபர், யாழ்ப்பாணம்), புஸ்பராஜா (துன்னாலை), அருள்ஜோசப் (ஏ.சி.எம் பிறஸ், ஜோர்ச் சந்திரா பிரிண்டஸ், கொழும்பு), அருள்தேவரட்ணம் (பிரான்ஸ்), அருள்மலர் தேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் Dr.க.தணிகாசலம் (ஆஸதிரேலியா),க.சின்னையா (சிமெந்துக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), Dr.இரத்தினகோபால் (ஆஸ்திரேலியா), க.சுந்தரலிங்கம் (கிளிநொச்சி), க.கணேசலிங்கம் (ஜேர்மனி), க.சரோஜினி (இந்தியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07:2004) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லமான தாமரைக்குளத்தடி, துன்னாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேர் கொண்ட மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொலைபேசி:*
*0775509416, 0776132589.* (சி-36396)(43-11-16-36)

தகவல்:
மனைவி.

# இணங்கிய சம்பள உயர்வை வழங்க வைத்திய ஊழியர் 7 நாள் காலக்கெடு

## அரசின் உத்தரவுகள் மீறப்படுவதாகக் குற்றச்சாட்டு

★ பிரதமரினதும் ஆளுநர்களினதும் பணிப்புரைகளை உதாசீனப்படுத்தும் மாகாணசபைச் செயலாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ ஏற்கனவே இணக்கம் தெரிவிக்கப்பட்ட சம்பள உயர்வுகள் இன்னும் ஏழு தினங்களுக்குள் வழங்கப்படவேண்டும். இல்லையேல் நாடளாவியரீதியில் மீண்டும் பொது வேலைநிறுத்தம் ஒன்றை நடத்துவதைத் தவிர்க்கமுடியாது.

இப்படி சுகாதாரத்துறை ஊழியர்கள் சங்கம் அரசுக்குக் காலக்கெடு விதித்து அறிவித்திருக்கின்றது.

இது விடயத்தில் பிரதமரினதும், ஆளுநர்களினதும் உத்தரவுகளைச் செயற்படுத்தாத மாகாணசபை செயலாளர்களுக்கு எதிராகவும் அச்சங்கம் போர்க்கொடிதூக்கியுள்ளது.

மத்திய அரசின் கீழ் பணியாற்றும் அரச வைத்தியசாலை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வுகள் அனைத்தும் மாகாணசபைகளின் கீழ் இயங்கும் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் ஆயுள்வேத வைத்தியசாலை ஊழியர்களுக்கும் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

தென், வடமத்திய, மேல் மாகாணசபைகள் தவிர்ந்த மற்றைய மாகாணசபைகள் இதனை நிறைவேற்றத் தவறிவிட்டன.

இந்த மாகாணசபைகளின் கீழ் பணிபுரியும் சுகாதார சேவை ஊழியர்களுக்கு இன்னும் ஏழு தினங்களுக்குள் சம்பள உயர்வுக் கொடுப்பனவு வழங்கப்படாவிட்டால் நாடளாவியரீதியில் பொதுவேலை நிறுத்தம் செய்யப்படும் என சுகாதார சேவைகள் ஊழியர் சங்கததின் இணை அமைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

## ஆள்கொணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துவரப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற இந்த ஆள்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டிருந்த ராஜபக்ஷ இந்த வழக்குகள் தொடர்பாக சில விடயங்களைத் தெரிவிக்கத் தமக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு நீதிமன்றத்திடம் கேட்டிருந்தார். இதனை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்றம் இன்று அந்தச் சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரியாலைப் பகுதியில் கைதாகிக் காணாமறபோன 14பேரின் ஆள்கொணர்வு மனுக்களே இன்று நீதிமன்றத்தில் எடுக்கப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவற்றில் சோமரத்தின ராஜ பக்ஷவும் எதிர்மனுதாரராக குறிப்பிடப்பட்டுள்ளார். (ஓ-5)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோணமலைத் துறைமுகத்துக்கும், நகருக்கும் பேராபத்து ஏற்படும் அபாயம் உருவாகியிருப்பதாகவும் அவை எச்சரித்தன.

கடந்த ஞாயிறன்று கொழும்பு வந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெலிக்ஸன், இலங்கை சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவை அன்றைய தினமே சந்தித்துப் பேசினார்.

அப்போது திருகோணமலைப் பிரதேசத்தில் புதிதாகத் தொடர்முகாம்கள், காவலரண்கள், இராணுவநிலைகள் போன்றவற்றை விடுதலைப் புலிகள் அமைத்துவருகின்றனர் என்றும், அதன் மூலம் யுத்தநிறுத்த உடன்பாட்டை அவர்கள் மீறியுள்ளனர் என்றும் அரசுத்தரப்பின் குற்றச்சாட்டை ஜயந்த தனபால நோர்வே பிரதி அமைச்சரிடம் தெரிவித்தார்.

நோர்வேப் பிரதி அமைச்சர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த போது இது குறித்து பிரஸ்தாபித்தார்.

ஆனால், அக் குற்றச்சாட்டை தமிழ்ச்செல்வன் அடியோடு மறுத்துரைத்தார். அவ்வாறு புதிய முகாம்களையோ, காவலரண்களையோ, இராணுவநிலைகளையோ தாங்கள் அமைக்கவில்லை என்று தாம் விடர் ஹெலிக்ஸனுக்கு எடுத்துரைத்தார் என்று தமிழ்ச்செல்வன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

## மட்டுவிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து இடம்பெற்றதாகவும் - கூறப்படுகின்றது.

சம்பவ இடத்திலேயே இராஜரூபன் உயிரிழந்தார். உடன்சென்றவரான அவரது சகோதரர் இராஜ்குமார் (வயது 21) படுகாயமடைந்தார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். இறந்தவரின் சடலம் யாழ். மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் சம்பந்தப்பட்ட லொறியின் சாரதியான, சரசாலை தெற்கைச்சேர்ந்த வீரகத்தி கந்தசாமி என்பவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தனர். அவரை அடுத்தமாதம் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார். (ஒ-3-7-15-31-117)

# கரும்புலிகளும்; மாவீரர்களும் ஆற்றிய தியாகத்தை நாம் மதிக்க வேண்டும்

## யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் உரை

தென்மராட்சி,ஜூலை28

எமது இனத்தின் விடுதலையை விரைவுபடுத்த மூலகாரணமாக அமைந்தவர்கள் கரும்புலிகளும், மாவீரர்களுமே ஆவர். இவ்விரு சக்திகளும் இனவிடுதலைக்கு ஆற்றிய மகத்தான பணிக்காக அவர்களின் தியாகத்தை மகக்கள் மதிக்கவேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி பஸ்நிலையத்தில் இடம்பெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் செம்மணன் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

1987ஆம் ஆண்டு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த படையினரைக் கதிகலங்க வைத்துத் தன்னுயிரை மாய்த்த கரும்புலி கப்டன் மில்லரின் தியாகம் தொடக்கம் 261 கரும்புலிகள் நடத்திய விதம்விதமான தாக்குதல்கள் எமதுமண்ணின், இனத்தின் விடுதலைக்கு வித்திட்டவையாக அமைந்தன.

மேலும் கரும்புலிகள் ஒவ்வொருவரினதும் இத்தகைய தனித்துவமான தாக்குதல்கள் எதிரியை மட்டுமன்றிச் சிங்கள அரசுகளையும் உலுக்கின. கட்டுநாயக்கா விமானத்தளத்தில் 14 கரும்புலிகளும் நடத்திய துணிகரத் தாக்குதல், புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்ற எணணத்தை சிங்கள அரசிற்கு உருவாக்கிக் கொடுதததது என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜ், சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி உப அதிபர் க.அருந்தவபாலன், யாழ்.மாவட்ட எழுச்சிப் பேரவை ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் உள்ளிட்ட பலரும் பேசினர். (117-31)

## மதமாற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்மொழிந்திருந்தார்.

இது அரசமைப்பின் அடிப்படை உரிமையை மீறுவதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மனுதாரர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த மனுக்களில் கிறிஸ்தவ மற்றும் இந்து மத அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள் ஆகியவை மட்டுமன்றி தனிநபர்களும் தாக்கல் செய்துள்ளனர்.

## ஹக்கீமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மு.க.குழுவினருக்கு ஹெலக்ஸன் விளக்கிக் கூறினார்.

அதேவேளை, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன் தினம் இரவு கொழும்பிலுள்ள நோர்வேத்தூதரகத்தில் விடர் ஹெலக்ஸனைச் சந்தித்துப் பேசினார.

சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ இச்சந்திப்பில் வலியுறுத்தினார்.

"புலிகள் மீது எமக்கு துளியளவும் நம்பிக்கை கிடையாது, எனினும் அவர்களுடனான பேச்சுக்களை நாம் வரவேற்கின்றோம்" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடர் ஹெலக்ஸனிடம் கூறினார் என்று ஈ.பி.டி.பி. செய்திக்குறிப்பு தெரிவித்தது.

ஜனாதிபதி இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார் என்றும், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவ அந்தஸ்து போன்ற அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணான விடயங்களில் கூட ஜனாதிபதி விட்டுக்கொடுப்புடன் செயற்பட முன்வந்திருக்கின்றார் எனவும் அமைச்சர் டக்ளஸ் ஹெலக்ஸனுக்கு எடுத்துக் கூறினார்.

கருணா விவகாரம் புலிகளின் உள்வீட்டுப் பிரச்சினையல்ல என்று குறிப்பிட்ட அமைச்சர் டக்ளஸ், கருணா ஜனநாயக ரீதியான அரசியல் நடவடிக்கைகளுக்கே தாம் பக்கத் துணையாக இருக்கிறார் எனவும் ஹெலக்ஸனிடம் தெரிவித்தார் என்று அக்குறிப்புத் தெரிவித்தது.

## 'மினிசினிமா' உரிமையாளர் கலாசாரம் பேணுவோரின் விசாரணையில்

வடமராட்சி,ஜூலை28

உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள மினி சினிமா அரங்கு ஒன்றில் ஆபாசப்படம் காண்பிக்கப்பட்டமை கலாசாரம் பேணும் இளைஞர் குழுவினால் நேற்று முன்தினம் இரவு கண்டுபிடிக்கப்பட்டது.

இப்படம் காண்பிக்கப்பட்டபோது அதனை சுமார் 75 பேர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மினி சினிமா உரிமையாளர் கலாசாரம் பேணும் இளைஞர் குழுவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ஓ-70-173)

## திறப்புவிழா

தெல்லிப்பழை,ஜூலை

யாழ்.குட்டியபுலம் அ.த.க. பாடசாலையின் புதிய கட்டடத்திறப்புவிழாவும் கல்விக் கண்காட்சியும் இன்றுகாலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் செ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார். (ஓ-150)


BIT
SEMESTER I
விரிவுரைகள் ஆரம்பம்
கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி தகவல் தொழில்நுட்பமானி (வெளிவாரி) கற்கை நெறிக்கு கல்வியாண்டு 2004/2005 தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் 31. 07.2004 காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
-IIS, Jaffna.

தவறிவிட்டது
யாழ்.மாவட்ட அபிவிருத்தி சமூக சேவை நிறுவன இணைப்பாளர் திரு.பா.குணராஜா என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிவப்பு நிற பொலித்தீன் பை 16-07-2004 வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாயிலிருந்து தொட்டிலடி வீதி, சுன்னாகம் - புத்தூர் வீதியூடாக பருத்தித்துறை செல்லும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே: 222 7379 சேவாலங்கா மன்றம், 250, கோயில் வீதி, யாழ்ப்பாணம். 2225086
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். (34644)

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

கணக்கீடு
A/L: 2006 கணக்கீட்டுச் சமன்பாடு
சனி 3 p.m.
A/L: 2005
பங்காளன் இளைப்பாறல்: ஞாயிறு 4 p.m.
A/L: 2005 கம்பனி நடைபெறுகின்றது
சனி, ஞாயிறு 5 p.m
S.தவா B.Com. (Hons) (Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE
Jaffna
(34609)

கணக்கீடு
A/L. 2005 பிரிவு I
சொத்துவிற்பனை -ஆரம்பம்: வெள்ளி 6 a.m
A/L: 2005 பிரிவு II
கம்பனி - ஆரம்பம் :சனி 6.a.m
A/L: 2006 கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம்பம்: திங்கள் 4 p.m
S.தவா B.Com. (Hons) (Acc.Spl.)
SHAMROCK
(34609) ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

உ
வேலணை பெருங்குளம்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
வருடாந்த மஹோற்சவம்-2004
கொடியேற்றம : 2004-08-19 வியாழக்கிழமை
தேர் : 2004-08-28 சனிக்கிழமை
ஆலயத்தில் அமைக்கப்பட்ட புதிய நிரந்தரக் கடைகள் இரண்டும் ஏனைய மஹோற்சவ தற்காலிக கடைகளும் 2004-08-08 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆலய அலுவலகத்தில் ஏலத்தில்விடப்படும்.
நிரந்தரக் கடைகளுக்கு உரிய கேள்வி நிபந்தனைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
- செயலாளர்,
ஆலய பரிபாலன சபை.
வேலணை. (34635)


## மரண அறிவித்தல்

### சிவலோகநாதன் ராஜரூபன் (ரூபன்)



பலாலி கிழக்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி, அச்சுவேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவலோகநாதன் ராஜரூபன் (ரூபன்) நேற்று (27-07-2004) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் கமலாதேவியின் அன்பு மகனும் ராஜமோகன், ராஜ்குமார் (சிலிங்கோ காப்புறுதி முகவர்), ராஜதீபன், ராஜகிரி, ராஜசோபனா, ராஜசுரேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29-07-2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு அச்சுவேலி சித்தான்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை வீதி,
பத்தமேனி,அச்சுவேலி. (C-36602) (11-16-17-32)

தகவல்:
சி.ராஜமோகன் (சகோதரன்)






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.